Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஒகஸ்ட் 15 - 21, 2013

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1027






## விடுவிக்கப்படுகிறது வாழ்விடங்கள்



## வெலிவேரியா தாக்குதலும் வெளிவராத மர்மங்களும்

## இந்தியா - அமெரிக்கா - சீனா ஒரு முக்கோண உறவு

## இந்துக் கடவுளை எப்படி வழிபடுவது?

விநாயகரை துளசியால் அர்ச்சனை செய்யக்கூடாது. பரமசிவனுக்குத் தாழம்பூ உதவாது. தும்பை, வில்வம், கொன்றை முதலியன விசேஷம். ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியவற்றாலும் அர்ச்சிக்கலாம். விஷ்ணுவை அக்ஷதையால் அர்ச்சிக்கக் கூடாது.

பவளமல்லியால் சரஸ்வதியை அர்ச்சனை செய்யக்கூடாது. விஷ்ணு சம்பந்தமான தெய்வங்களுக்கு மட்டுமே துளசியால் அர்ச்சனை செய்யலாம். அதுபோல, சிவசம்பந்தமுடைய தெய்வங்களுக்கே வில்வார்ச்சனை செய்ய லாம். மலரை முழுவதுமாக அர்ச்சனை செய்யவேண்டும். இதழ் இதழாகக் கிள்ளி அர்ச்சனை செய்யலாகாது.

வாடிப்போன, அழுகிப்போன, பூச்சிகள் கடித்த மலர்களை உபயோ கிக்கக் கூடாது. அன்றுமலர்ந்த மலர்களை அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும். ஒரு முறை இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்களில் எடுத்து, மீண்டும் அர்ச்சனை செய்யக்கூடாது. வில்வம், துளசி ஆகியவற்றை மட்டுமே மறுபடி உபயோகிக்கலாம்.

தாமரை, நீலோத்பலம் போன்ற நீரில் தோன்றும் மலர்களை தடாகத்தி லிருந்து எடுத்த அன்றைக்கே உபயோகப்படுத்தவேண்டும் என்கிற விதி இல்லை. வாசனை இல்லாதது, முடி, புழு ஆகியவற்றோடு சேர்ந்திருந்தது, வாடியது, தகாதவர்களால் தொடப்பட்டது, நுகரப்பட்டது, ஈரத்துணி உடுத்திக் கொண்டுவரப்பட்டது, காய்ந்தது, பழையது, தரையில் விழுந்தது ஆகிய மலர்களை அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தக்கூடாது. சம்பக மொட்டுத் தவிர, வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

## ஆன்மீகம் — தீமை நம்மை வெல்லாதிருக்கட்டும்

வெற்றியில் புன்னகை புரிதல் எளிது. ஆனால், தோல்வியில் துவளாதிருத்தல் அரிது. துணிவுகொள்ள தனி ஆற்றல் தேவை. இரும்பு உடையாமல் வளைந்து கொடுப்பதுபோல, மனிதனுக்கு துன்பத்தில் வளைந்து கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். துன்பமும் எதிர்ப்புகளும் நற்பண்புகளை வள ர்க்க வாய்ப்பளிக்கின்றன் அவற்றை உறுதிப்படுத்த உதவுகின்றன. கதிரவ-னின் ஒளியில் வெண்ணெய் உருகுவதுபோல, தனது தன்னம்பிக்கை, கர்வம், தற்பெருமை, அகந்தை, ஆணவம் ஆகியவை தோல்வியால் அழி கின்றன.

எனவே ஒருவரையும் பழிவாங்காதீர்கள். அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டுவிடுங்கள். ஏனெனில் மறைநூலில் எழுதியுள்ளவாறு பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன என்கிறார் ஆண்டவர். நீயோ உன் எதிரி பசியாய் இருந்தால் அவனுக்கு உணவு கொடு. அவன் தாகத்தோடு இருந்தால் அவன் குடிக்க நீர்கொடு. தீமை உங்களை வெல்லவிடாதீர்கள். நன்மையால் தீமையை வெல்லுங்கள்" (உரோமையர் 12: 14-21). ஆட்டு மந்தைகள் மேய்ந்துக்கொண்டிருந்தன. அவற்றை நாய்கள் கண்ணும் கருத்துமாய் காவல்புரிந்தன. நாய்களைத் தொலைத்துக்கட்டினால் நம் விருப்பம்போல் ஆடுகளைத் தின்னலாம் என்று கருதின ஓநாய்கள். ஓநாய்கள் மெதுவாக நாய்களிடம் சென்று, "அன்பர்களே, நாமெல்லாம் ஒரே குலம்.

## இழி தொழில் வட்டி

ஒருவர் உழைப்பின் மூலம் மற்றொருவருக்கு உதவிசெய்வதை இஸ்லாம் அனுமதிக்கிறது. ஆனால் இன்று நடப்பதென்ன? உதவி என்ற போர்வையில் உலவுகிறது வட்டி. தனவந்தன் தான்தோன்றித் தனமாக ஒரு சாண் வயிற்றுக்கு உழைக்கும் மனிதனுக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கிறான். இது ஈனமற்ற இஸ்லாம் கண்டிக்கும் செயல்.

வட்டியை தின்பவர்கள் இறுதித் தீர்ப்பு நாளில் ஷைத்தானின் பிடியில்பட்டு பித்துக்கொண்டவர் போலன்றி வேறு முறையில் எழமாட்டார்கள். ஏனெனில் நிச்சயமாக வர்த்தகம் வட்டியைப் போலவே இருக்கின்றது என்று அவர்கள் கூறியதனாலேயாம். ஆனால் அல்லாஹ் வர்த்தகத்தை ஆகுமான (ஹலாலான) தாக்கிவட்டியை விலக்கி (ஹராமான) தாக்கி இருக்கின்றான். அல்லாஹ் வட்டியை அழித்து தர்மங்களை தழைக்க வைக்கின்றான்.

அல்குர் ஆன் 2:275 - 6

இறைமறை இவ்வாறு சொல்ல கிரேக்க ஞானி அரிஸ்டோட்டில் வட்டியை பற்றிக்கூறும் வார்த்தைகளைப் பாருங்கள். ஒரு நாணயத்தைக் கொண்டு பிறிதொரு நாணயம் உற்பத்தி செய்வதை அதாவது வட்டியை அதகரிக்கலாகாது என்று. இப்படி எல்லாம் கண்டனத்திற்கு உள்ளாவதே இழி தொழில் வட்டி.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1024



### காத்திருப்பு

பாராட்டுக்குரியது

பச்சிளம்
குழந்தையைக் கைவிட்டு
பறந்துவிட்டாள்
தாய் விமானத்தில்!
தாய்ப் பால் தேடும்
தாய் இல்லா சேய்
ஆட்டுப்பால் குடித்து
ஆயுளை கடத்துவதால்
குட்டி ஆடு
குடித்து முடிக்கும் வரை
ஏக்கத்துடன்
எஞ்சும் பாலுக்காய்
காத்திருக்கும்
காட்சிதான் இது!

A.பாரிஸ்,
மிகிந்தலை.




## கவிதைப் போட்டி இல 1027



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26. 08. 2013

கவிதைப் போட்டி இல. 1027 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### தேவாமிர்தம்

குனிந்து கூர்ந்து நோக்கின்
ஆடு தரும் பால் அமுதம் - பசு
மாடுதரும் பாலோமதுரம் - எனினும்
எனக்கு தாயூட்டும் பால்தான்
எனக்கு தேவாமிர்தம்.

அ.சந்தியாகோ-கண்டி.

### அறிவுள்ள ஆடு

ஜீவகாருண்யம்
மரணித்துப் போன உலகில்
இந்த ஐந்தறிவு ஆடு.
அநாதைக் குழந்தைக்கு
பால் கொடுக்கப்
பார்க்கிறதே...?

நா.ஜெயபாலன்,பிபிலை.

### உள்ளமுருகும் தேடல்

தாராடு தன் குட்டிக்குச்
பாலமுதம் ஊட்டும்
தாய்மையின்
தாராளத்தை சிரம் தாழ்த்தி
உற்று நோக்கும்
சிசுவின் பார்வையில்
தீராத சோகத்தில்
உள்ளமுருகும்
ஏதோவொரு தேடல்!

கிண்ணியா முத்தாலிப்.

### மாக்களும் மனிதமும்

பெற்றெடுத்த செல்வத்து
பாலூட்டுவது மட்டுமன்றி
வெயிலுக்கு குடையாகவும்
பயன்படுகிறது மறியொன்று மறுபுறம்...
குப்பனின் மகன் சுப்பன்
கூழுக்கு ஏங்குகிறான்
அவனை அரவணைப்போர்
யாருமில்லை இவ்வுலகில்
வறுமை என்பது
மாந்தருக்கு மட்டும்தானா?
மாக்களுக்கு இல்லைபோலும்.

க.கமால்தீன், ஏறாவூர் -03.

### ஞாபகம்

உதிரத்தை உரமாக்கி - தன்
உயிரான இளவலுக்கு
இதமாக கொடுக்கிறதை
விழிதிறந்து விந்தையுடன்
ரசித்திருக்கும் குழந்தைக்கு
தாய் மடியில் சுவைத்திட்ட
காலமது - நெஞ்சமதை
நினைக்கிறதோ!

க.சிந்துஜா, அராலி.

## உங்கள் பக்கம்

### கடமை வேளையில் நடக்கிறது சமையல்

மன்னார் பொது வைத்தியசாலை யில் பணிபுரிகின்ற கண் வைத்தியர் கடமை வேளைகளில் தன் கடமை-யினை சரிவரச் செய்யாமல் தான் தங்கியுள்ள விடுதிக்கு சமையல் செய்யச் சென்றுவிடுவதால் சிகிச்சை பெறவருகிற அநேக நோயாளிகள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

வேளைக்கு வந்து கடமைக்குக் கையெழுத்திடுவதோடு சரி. கடமை யினை ஒழுங்காகச் செய்யாமல் தன் விடுதிக்குச் சென்று தன் சொந்த வேலைகளைக் கவனிக்கின்றார் வைத்தியர்! கேட்டால் மிரட்டுகிறார்; நோயாளிகளை விரட்டுகிறார்.

வலியுடன்வரும் நோயாளிகளில் பலர் நெடுநேரம் காத்திருந்துவிட்டு சிகிச்சை பெறாமலேயே வீடுதிரும்பும் ஒரு துர்ப்பாக்கியமான கவலைக்குரிய நிலை நிலவிவருகின்றது. அவ்வாறு அவர் கடமையில் இருந்தாலோ நோயாளி களைச் சரிவரச் கவனிப்பதில்லை. நோயாளிகளிடம் வேண்டுமென்றே எரிந்துவிழுகின்றார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அவசரத் திற்கு அழைத்தாலும் அவர் வருவ தேயில்லை. இதுபற்றி வைத்தியசாலை நிர்வாகமோ வாயோ திறப்பதில்லை. இங்கு என்னதான் நடக்கிறதென்று மக்கள் விசனம் கொள்கின்றனர். கூடிய விரைவில் இவர் சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்திடமும் வைத்திய அத்தியட்சகரிடமும் மக்கள் சார்பாக வேண்டப்படுகின்றது.

எஸ்.ராஜ்குமார்,
மன்னார்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### தமிழரின் உயிரான தினமுரசு

தமிழரது நெஞ்சங்களில்
உயிராய் நீ வாழ்ந்து!
சோதனைகள் பலவந்தும்
வீறு நடைபோட்டு!
சாதனைகள் பல புரிந்து
தரணியெல்லாம் நீ வாழ!
தமிழரது உயிர்மூச்சாய்
முரசே நீ வாழ!
ஆயிரமாம் இதழில் தடம்பதித்த நீ
பல்லாயிரம் இதழ் காணவேண்டும்
வாசகர் கைகளில்
தினம் தினம் நீ தவழ!
பல்லாண்டு காலம் நீ
வாழ வாழ்த்துகிறோம்!!!

- க.மிதுர்சன். ஏழாலை.

## வாசகர் சாலை

### வரவேற்பு!

சென்றவாரம் க்ரைம் தொடர் ஏன் இடம்பெறவில்லை. தவிர்க்க முடியாத காரணத்தால் பிரசுரமாகவில்லையா? அல்லது க்ரைம் பக்கத்தை நிறுத்திவிட்டார்களா?

முன்னைய காலங்களைவிட சினிமாப் பக்கத்தில் கலக்குகின்றாள். பாப்பா முரசு தகவல்கள் அருமை. குறுக்கெழுத்துப் போட்டிக்குரிய பரிசுத்தொகையை ஆயிரம் ரூபாவாக மாற்றியுள்ளாய். முரசின் முடிவை பெரிதும் வரவேற்கின்றேன்.

எம்.சாஜுஜா, யாழ்ப்பாணம்.

### வருத்தம்

தினமுரசு வாசகர்கள் ஆகிய நாம் வழங்கும் ஆதரவில்தான் நீ நிலைத்துநிற்கின்றாய். எங்களது வெற்றிக்கும் நீயே முன்நிற்கிறாய்.

நடுநிலையோடு முரசில்வரும் கட்டுரைகளுக்கு ஒரு சபாஷ். முரசின் மாற்றத்தையிட்டு நான் பெரிதும் சந்தோசப்படுகின்றேன். பல்சுவை அம்சங்களைத் தாங்கிவருகின்றாய். விளையாட்டுச் செய்திகள், காதில பூ கந்தசாமி, எக்ஸ்ரே ரிப்போர்ட், அர சியல் கட்டுரைகள் என்பவை சிறப்பாக உள்ளது.

முரசின் முதற்பக்கத்தில் சினிமா படங்கள் ஏன் இடம்பெறு வதில்லை. மிகவும் வருத்தமாக உள்ளது. மாற்றமொன்று தேவைதான். இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக ஒவ்வொரு கிழமையும் அரசியல்வாதிகளின் படங்களையே முன்பக்கத்தில் பிரசுரம் செய்கின்றீர்களே., இதைத் தவிப்பீர்களா?, வாசகி யான எனது கருத்தையும் கவனத்தில் எடுப்பீர்கள் என்று நினைக்கின்றேன்.

சி.மாலினி, காலி.

# ஸ்னோடனைத் தேடிவருகிறார் தந்தை!

அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களை வெளியிட்ட எட்வார்ட் ஸ்னோடனின் தந்தை அமெரிக்காவில் இருந்து சென்று தமது மகனை சந்திக்க ரஷ்யா விசா கொடுத்துள்ளது. இதை எட்வார்ட் ஸ்னோடனின் தந்தையும், அவரது வக்கீலும் உறுதிசெய்துள்ளனர்.

வக்கீல் ப்ரூஸ் ஃபெயின் ஒரு டி.வி. பேட்டியில், "ஆம். எமக்கு ரஷ்யா விசா கொடுத்துள்ளது. நாம் எப்போது பயணம் செய்யப் போகிறோம் என்ற திகதியும் முடிவாகியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக, நாம் எப்போது பயணம் செய்யப் போகிறோம் என்பதை சொல்லமுடியாது. ஆனால், மிகவிரைவில் பயணம் செய்யவுள்ளோம்" என்றார்.

எட்வார்ட் ஸ்னோடனின் தந்தை லொன் ஸ்னோடனும் இதே தகவலை உறுதி செய்தார். "நாம் ரஷ்யாவில் எட்வார்ட்டை எங்கே சந்திக்கப் போகிறோம், எப்படி சந்திக்கப் போகிறோம் என்பது தற்போதைக்கு இரகசியம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாஸ்கோ விமான நிலையத்தைவிட்டு வெளியேறிய ஸ்னோடன், தற்போது எங்கே தங்கியுள்ளார் என்பது பரமரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. செய்தியாளர்கள் மட்டுமின்றி, அமெரிக்க உளவுத்துறையினரும் அதை தெரிந்துகொள்ள துடிதுடித்துக் கொண்டிருப்பார்கள்.

"எட்வார்ட் ஸ்னோடனை சந்திக்க விரைவில் ரஷ்யா செல்கிறோம்" என்று இவர்கள் கூறியுள்ளதால், இவர்கள் மீது பல ஜோடி கண்கள் தற்போது பதிந்துள்ளன. இவர்கள் செல்லும் விமானத்தில்கூட பின்தொடர்பவர்கள் இருப்பார்கள் என ஊகிக்கலாம்.

அவர்களுக்கு எப்படி டிமிக்கி கொடுத்துவிட்டு எட்வார்ட் ஸ்னோடனை இவர்கள் சந்திக்கப் போகிறார்கள் என்பதில்தான் சுவாரசியம் இருக்கிறது.

# விரைவில் ஆரம்பமாகிறது சம்பூர் அனல் மின் நிலையம்

இந்தியாவின் தேசிய அனல் மின் நிறுவனம் (என்.ரி.பி.சி) மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன கூட்டிணைந்து நிர்மாணிக்கவுள்ள சம்பூரில் அனல் மின் உற்பத்தி நிலையம், தொடர்பான ஒப்பந்தம் ஒன்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது என இலங்கை மின்சார சபை தகவல்கள் தெரிவித்தன.

சுமார் 2,225 பில்லியன் ரூபா முதலீடு செய்யப்படவுள்ள இத்திட்டத்தில் இலங்கை மின்சார சபையும் இந்தியாவின் தேசிய அனல் மின் நிறுவனமும் சமபங்கை கொண்டிருக்கும். இத்திட்டத்துக்காக இருதரப்பும் சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் கடன் பெறவுள்ளன. இந்த அனல்மின் நிலையம் செயற்படும்போது 500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

சம்பூர் அனல் மின் நிலையம், இலங்கையுடனான இந்தியாவின் பெரிய செயற்திட்டமாகும். இந்த திட்டத்துக்காக இந்தியா, இலங்கைக்கு 200 மில்லியன் டொலர் கடன் வழங்கும்.

இந்த செயற்திட்டத்துக்கான இயந்திர தொகுதிகள், ஆலோசனை சேவைகள், கட்டட வடிவமைப்பு என்பன வெளிப்படையான உலக கேள்விப்பத்திரம் மூலம் மட்டுமே செய்யப்படும். இதில் ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய இயந்திர தொழில்நுட்பங்களுக்கே முன்னுரிமை கிடைக்கும் என இலங்கை மின்சார சபையின் மின் பொறியியலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## வடக்கு மாகாண சபை தேர்தல்

# கூட்டமைப்புக்கு சவால் நிறைந்ததாக இருக்கும்



## எதிர்வு கூறுகிறார் சிவநேசதுரை சந்திரகாந்தன்

வடக்கு மாகாண சபை தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சவால் நிறைந்த தேர்தலாக அமையலாம். கொள்கைரீதியாக தோல்வி கண்டவர்களாகவும் கோட்டை விட்டவர்களாகவும் உலாவருவதால் அவர்களுக்கு இது சவாலான காலமாகவே அமையும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் கிழக்கு மாகண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

எம் வசம் இருந்த கிழக்கு மாகாண சபையை பிரித்தவர்கள் யார்? மாகாண சபை ஆட்சி முறை வேண்டாம் என்று உதறியவர்கள் அவற்றினை வேண்டும் என இன்று நிற்பது ஏன்? இவர்கள் கோரிய தமிழீழம் எங்கே? சமஷ்டி ஆட்சி எங்கே? வடகிழக்கு இணைந்த ஆட்சி எங்கே? அனைத்து கொள்கைகளிலும் கோட்டை விட்டு இன்று கொள்கைகள் அற்றவர்களாக திணறி நிற்கின்றனர். பதவி ஆசை, பண ஆசை பிடித்தவர்கள் எங்கே இருக்கின்றார்களோ அங்கு எவற்றினையும் சாதிக்க முடியாது.

வட மாகாண சபை தேர்தலினை பொறுத்தமட்டில் வேட்பாளர்கள் தேர்விலே சாதிப்பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாகவும் இதற்காக ஒருவர் உண்ணாவிரதம் இருந்ததாகவும் செய்தியினைப் பார்த்தேன். மக்களுக்கு முன்னுதாரணமாக நடந்து ஒற்றுமையை நிலைநாட்ட பாடுபடுகின்றோம், எமது மக்கள் எமக்குப் பின்னால் ஓரணியில் நிற்கவேண்டும் என்றெல்லாம் கூறிக்கொள்கின்ற தலைவர்கள் ஏன்? மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தினை தூண்டும் செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்களின் சிந்தனை எங்கு செல்கின்றது என எண்ணிப்பாருங்கள். சாதாரணமாக வேட்பாளர் தேர்விலே இவ்வாறு நடந்துகொண்டார்களானால் அதிகாரம் கிடைக்கப் பெற்றால் எவ்வாறு செயற்படுவார்கள். சாதி குறைந்தவர்களில் தமிழ் பற்றாளர்கள் இல்லையா? இவ்வாறான செயற்பாடுகள் மூலமும் கொள்கைகள் அனைத்தும் தோல்வி கண்டன.

வட மாகாண சபையை பொறுத்தளவில் அங்கு பலத்த சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிடும். நான் மாகாண சபையை ஆட்சிசெய்தவன் என்ற வகையிலேயே இதனைக் கூறுகின்றேன். என்று தெரிவித்துள்ளார்.

## குடு ராஜா கைது

தென்னிலங்கையில் கொடிகட்டிப் பறந்த பாதாள உலகக் கோஷ்டி மன்னன் என அழைக்கப்படும் குடு ராஜாவை குற்றதடுப்பு பிரிவினர் சுற்றிவளைத்து கைது செய்தனர். மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான போதைவஸ்தை கடத்தும்போதே இவர் சிக்கியுள்ளார். இவருடன் மிக முக்கிய பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பந்தபட்டுள்ளது கண்டுபிடிக்கபட்ட நிலையில் விசாரணையில் பரபரப்பு நிலவுகிறது.

## கொழும்பில் ஜப்பான் யுத்தக் கப்பல்கள்

அரிஅக்கே, செடொகரி என்ற பெயர்களைக் கொண்ட இரு யுத்தக் கப்பல்களில் ஜப்பானிய கடற்படையின் கட்டளைத் தளபதிகள் கொழும்பு துறை முகத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கையின் கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் ஜயநாத் கொலம்பகேயின் பணிப்பின் பேரில் மேற்குப் பிராந்திய கட்டளைத் தளபதியான ரியல் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க இவர்களை வரவேற்றார்.

இந்த இரண்டு யுத்தக் கப்பல்களும் சில நாட்கள் கொழும்பு துறைமுகத்தில் தரித்திருக்குமெனக் கூறப்படுகிறது.

# இராணுவ ரீதியில் இந்தியா எட்டியது அடுத்த மைற்கல்!

இந்தியாவிலேயே முதல் தடவையாக, முழுவதும் உள்நாட்டில் கட்டப்பட்ட, விமானம் தாங்கி போர்க்கப்பலான ஐ.என்.எஸ். விக்ரந்த், கடலில் இறங்கியுள்ளது. இதன்மூலம், இராணுவரீதியாக இந்தியா புதிய மைற்கல் ஒன்றை கடந்துள்ளது.

பல நாடுகளில் பலவிதமான கப்பல்கள் கட்டப்படுகின்றன. ஆனால், விமானம் தாங்கிக் கப்பல்கள் கட்டுவதும், நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டுவதுமே சவாலான விஷயங்கள். மிகச் சொற்ப எண்ணிக்கையான நாடுகளே வெற்றிகரமாக இவற்றை கட்டியுள்ளன.

ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் தயாரிப்பதில் அதிக ஆர்வம் காட்டும் சீனா, சமீபத்தில்தான் தமது நாட்டில் தயாரிக்கப்பட்ட முதலாவது விமானம் தாங்கிக் கப்பலை வெள்ளோட்டம் விட்டது.

ஆனால், அதில் பல கோளாறுகள் உள்ளதாக செய்திகள் உள்ளன. அத்துடன், சீனாவில் கட்டப்பட்ட விமானம் தாங்கிக் கப்பல் 100 சதவீதம் சீன தயாரிப்பு கிடையாது. ரஷ்ய தயாரிப்பு விமானம்தாங்கி கப்பலின் பல பாகங்கள் சீனக் கப்பலில் உள்ளன.

அப்படியிருந்தும், அது முழுமையாக இயங்கும் அளவுக்கு இன்னமும் வரவில்லை. இந்த நிலையில்தான் இந்தியா, முழுமையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானம்தாங்கி கப்பலை கடலில் இறக்கிவிட்டுள்ளது. இந்தக் கப்பலின் மேல் தளத்தில் மிக்-29 ரக போர் விமானங்களையும், வேறு இலகு போர் விமானங்களையும் தரையிறக்கவும் மேலெழுப்பவும் முடியும்.


இந்த கப்பலில், ஆரம்ப பரிசோதனைகள் முடிந்துள்ளபோதிலும், இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் பல வேலைகள் மேற்கொள்ளப்படும். அதற்குப் பிறகு, 2016 முதல், 2018 வரை, மீண்டும் பல கட்ட சோதனைகளுக்கு உட்படுத்தப்படும். அதற்கு பிறகே, கடற்படையில் ஒப்பரேஷன் அந்தஸ்து கொடுக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இதற்கிடையே, மற்றொரு சிக்கல் ஒன்று உள்ளது. இந்திய கடற்படையில் தற்போது பாவனையில் உள்ள விமானம்தாங்கிக் கப்பலின் பெயர், ஐ.என்.எஸ். விராட். அந்தக் கப்பல் 2018 - 2019-ம் ஆண்டில் ஓய்வு பெறுகிறது. இதனால், அதற்குமுன் ஐ.என்.எஸ் விக்ரந்த் முழுமையான இயங்குநிலைக்கு வந்தேயாக வேண்டும்.

சரி. தற்போது கடலில் இறக்கி விடப்பட்டுள்ள கப்பலுக்கு 'விக்ரந்த்' என்று ஏன் பெயரிடப்பட்டது?

இந்திய கடற்படையின் முதலாவது விமானம்தாங்கிக் கப்பலுக்கும் இதே பெயர்தான். அந்தக் கப்பல், 1997-ல் ஓய்வுபெற்றது. அந்தக் கப்பலின் நினைவாக, இந்தக் கப்பலுக்கும் அதே பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'விக்ரந்த்' என்ற சொல், 'விக்ரந்த்' என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து எடுக்கப்பட்டு உள்ளது.

விக்ரந்த் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்கள் உள்ளன. 'கற்பனைக்கும் எட்டாத அளவில் செயற்படக்கூடியது' என்பது ஒரு அர்த்தம். அதைத் தவிர, 'வீரம் மிகுந்தது', 'அதி தைரியமானது' என்ற அர்த்தங்களும் உள்ளன.



வாரமலர்
# தினமுரசு
தபா.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# இதுவும் பயங்கரவாதமே!!

பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் ஆங்காங்கே நடப்பதுபோல் நடந்தாலும் அவை திட்டமிட்டு நடப்பதாகவே முஸ்லிம் மக்களை சந்தேகம் கொள்ளச் செய்துள்ளது.

முஸ்லிம் மக்களின் தலைமைகளை இக்கட்டான சூழலுக்குள் தள்ளிவிட்டுள்ளதோடு, தமது அரசியல் தலைமைகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் இந்த தாக்குதல் சம்பவங்கள் உள்ளன.

"பூனைக்கு யார்? மணி கட்டுவது" என்ற கதையாகவே முஸ்லிம்களின் அரசியல் தலைமைகளின் நிலைமை உள்ளது. பத்து ரூபா கொடுத்தால் நூறு ரூபாய்க்கு கத்தி அரசியல் பேசுகின்றவர்கள் இப்போது வாயைத் திறக்கவே ஆயிரம் கோணங்களில் சிந்திக்கும் நிலைமைக்கு முகம் கொடுத்திருப்பதுபோல் தெரிகின்றது.

முஸ்லிம் மக்களின் மத வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் பல்வேறு அதிருப்திகளையும், உணர்வு உந்துதல்களையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே இவ்விவகாரத்தை வெறும் அரசியல் இலாப நட்டங்களைக் கொண்டு மட்டும் பார்த்து வளரவிடுவதில் அர்த்தமேதுமில்லை.

காத்தான் குடியில் பள்ளிவாசலுக்குள் புலிகள் நடத்திய படுகொலைகளுக்கும், தாக்குதல்களுக்கும் ஒப்பானதாகவே தற்போது தொடரும் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களும் உள்ளன.

இரண்டுமே வெறுக்கத் தக்க, நாகரிக மனித சமூகம் ஏற்றுக் கொள்ளாத பயங்கரவாத தாக்குதல்களேயாகும். எனவே இவ்விவகாரம் தொடர்பில் முஸ்லிம், தமிழ் மற்றும் பெரும்பான்மை முற்போக்கு சக்திகள் அனைவரும் ஒருமித்து விரைவான முடிவொன்றைக் காணவேண்டும்.

பள்ளிவாசல்கள் மற்றும் வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் என்பது குறிப்பிட்ட இனங்கள் சார்ந்ததோ, தற்செயல் சம்பவங்களோ அல்ல. அது இனங்களின் தேசிய ஒற்றுமைக்கும், ஐக்கிய இலங்கைக்குள் அனைவரின் பாதுகாப்பான இருப்புக்கும் பாதகமான செயற்பாடாகும்.

எனவே அரசியல் பேதங்களுக்கு அப்பால், வீர தீரங்களுக்கு அப்பால் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டிய தேசிய பொறுப்பாகும். அதுவே இலங்கை மக்களின் மகிழ்ச்சிக்கும், தேசிய அருமைப்பாட்டுக்கும் உறுதியான அடிப்படையாகும்.

இதே மாதிரியான கோரிக்கையை முன்னரும் தினமுரசு வலியுறுத்தி இருந்தது. மீண்டும் சுட்டிக்காட்டுகின்றது. பயங்கரவாதத்துக்கு முகம் கொடுத்து இலங்கை மக்களாகிய நாம் நிறையவே இழந்துள்ளோம். இன்றும் அதன் வலிகளையும், வடுக்களையும் சுமந்து கொண்டிருப்பவர்கள் நாம்.

அந்த அனுபவங்களே ஒற்றுமையும், ஐக்கியத்தை வலியுறுத்தும் அனுபவத்தை கொடுத்துள்ளது. பெரும் விலை கொடுத்து ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அமைதியைப் பாதுகாப்பதே சுதந்திரத்தையும், உரிமைகளையும் பெற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் உதவும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.




# விடுவிக்கப்படுகிறது வாழ்விடங்கள்

**பு**லிகளுக்கு எதிரான ஆயுத மோதல்கள் 2009ம் ஆண்டு மே மாதத்தோடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் ஜனாதிபதி அவர்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் இனியும் இருக்கமுடியாது என்றும், முடியுமான விரைவில் பாதுகாப்புக் காரணங்களுக்காக படையினரால் பொறுப்பேற்கப்பட்ட பொதுமக்களின் வீடுகள், காணிகள் என்பவற்றை உரியவர்களிடம் திருப்பி வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அந்த அறிவிப்பை அல்லது அந்த விருப்பத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடைமுறைப்படுத்துவதிலும், மக்களின் நிலங்கள் மக்களுக்கே மீட்டுக் கொடுப்பதிலும் தனது தளராத முயற்சியைச் செலுத்தினார்.

அதற்காக பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க போன்றவர்களுடன் தொடர்ச்சியாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக 276 இடங்களில் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பன கட்டம் கட்டமாக குறைப்புச் செய்யப்பட்டு, இராணுவம் பொதுமக்களின் பகுதிகளில் இருந்து பின்னகர்த்தப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்ட முடியும்.

யாழ்ப்பாணத்தை அரசாங்கம் திறந்து வெளிச்சிறைச்சாலையாக நடத்துகின்றது என்று பொய்க்கதை கூறுவோர் ஒன்றை மறுக்கமாட்டார்கள். அதாவது, யாழ்ப்பாணத்தில் யுத்தகாலத்தில் இருந்ததைப் போன்ற இராணுவ பிரசன்னமோ, காவலரண்களோ, சோதனைச் சாவடிகளோ இன்று இல்லை.

முன்னரைப் போன்று பொது நிகழ்வுகளில் இராணுவ தலையீடுகள், கட்டுப்பாடுகள் என்பன தற்போது இல்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான பயணத்தை மேற்கொள்ளும் ஒருவர் முன்னரைப் போல் சோதனைச்சாவடிகளில் நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியதில்லை. அடையாள அட்டை வைத்திருக்கும் ஒருவர் இறங்கிச் செல்லவேண்டிய அவசியம் கூட இப்போது இல்லை. தவிர்க்கமுடியாமல் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் அந்த நாடுகளின் பிரஜைகளாக இருப்பதால், அவர்கள் மட்டுமே சோதனைச் சாவடிகளில் தமது விபரங்களைப் பதிவு செய்யவேண்டிய சூழல் உள்ளது.

இருந்தபோதும் ஓமந்தை சோதனைச் சாவடிகூட, ஆனையிறவு அளவுக்கு நெகிழ்வுப் போக்குடன் அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

இராணுவத்தினரின் தரவுகளின் படி, இதுவரை 240ற்கும் மேற்பட்ட நிலைகளில் இருந்து இராணுவம் வெளியேறியுள்ளது. அவற்றில் பொது இடங்கள், தனியார் காணிகள், பொதுமக்களின் வீடுகள் என்பன உள்ளடங்குகின்றன. அதேபோல் இன்னும் சுமார் 65 இடங்களை இராணுவம் பொதுமக்களிடம் கையளிப்பதற்குத் தயாராகிவருவதாகவும் இராணுவச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் அச்செழு, அரியாலை மத்தி, அச்சுவேலி, உரும்பிராய், அக்கரை போன்ற பகுதிகள் இராணுவத்தினரால் பொதுமக்களிடம் கையளிக்கப்படும் நிகழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் உரையாற்றிய ஜெனரல் ஹத்துருசிங்க அவர்கள், பொதுமக்களின் இடங்கள் அவர்களிடமே கையளிக்கப்பட வேண்டும் என்பதில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமக்கு தொடர்ச்சியான வற்புறுத்தலைச் செய்து வருவதாகவும், சிலவேளைகளில் அமைச்சரின் தொலைபேசி அழைப்பு வருகின்றபோது, இன்று எந்த நிலப்பகுதியை விடுவிக்கும்படி கேட்கப் போகின்றாரோ என்று எண்ணத் தோன்றும் என்றும் கூறியிருந்தார். அத்தோடு, மேடையில் அமர்ந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பார்த்து "அமைச்சர் அவர்களே பலாலியில் இருந்தும் நாங்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்று தயவுசெய்து கேட்டுவிடாதீர்கள்" என்று நகைச்சுவையோடு கூறினார்.

அதே நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது தமது பொறுப்பு என்றும், மக்களின் நிலங்கள் மக்களுக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காக அயராது பாடுபடுவது தனது கடமை என்றும் கூறினார். தொடர்ந்தும் அவர் உரையாற்றும்போது, இது தேர்தல் காலம் என்பதால், நடைபெறுகின்ற காரியங்கள் அல்ல. மக்களின் நிலங்களை மக்களிடமே பெற்றுக் கொடுக்கும் தமது முயற்சிகள் 2009இல் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பிருந்தே தொடருகின்ற முயற்சிகள் என்றதோடு, தமது கோரிக்கையை ஏற்று பொருத்தமான இடங்களுக்கு இராணுவத்தினரை நகர்த்தி, பொதுமக்களின் வீடுகளையும், நிலங்களையும் அவர்களுக்கே பெற்றுக்கொடுக்க உதவிய ஜனாதிபதி அவர்களுக்கும், பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜபக்ஷ அவர்களுக்கும், ஜெனரல் ஹத்துருசிங்க அவர்களுக்கும் தமிழ் மக்கள் சார்பில் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

இந்த நிகழ்வு குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டதாகவே அமைந்திருந்தது. அதாவது, யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாகவும், இராணுவ நிலைகளாகவும் இதுவரை இருந்த பகுதிகள் தற்போது விடுவிக்கப்படுகின்ற நிகழ்வானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகளுக்கான பலனல்ல என்றும், மாறாக, அண்மையில் இலங்கை வரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் செயலாளர் நவநீதம்பிள்ளை அவர்களின் வருகையையொட்டி அரசாங்கம் நடத்துகின்ற நாடகம் என்று கூறியிருந்தார்.

ஆனால், நவநீதம்பிள்ளையின் வருகைக்கும் மக்களின் நிலங்கள் மக்களிடமே கையளிக்கப்படுகின்ற நிகழ்வுக்கும் எந்தவகையிலும் சம்பந்தமில்லை. தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசானது சர்வதேச விருந்தினர்களுக்கான தற்காலிக நாடகங்களை அரங்கேற்ற ஒருபோதும் முற்பட்டதில்லை.

சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுவது போல் அரசாங்கம் நாடகங்களை அரங்கேற்றுவதாக இருந்தால், விரும்பத்தகாத பல நிகழ்வுகளை இலங்கை மக்கள் சந்தித்திருக்க நேர்ந்திருக்கும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகளுக்குக் கிடைக்கின்ற வெற்றிகளாக இவை தமிழ் மக்களிடையே சென்றடைந்துவிடக் கூடாது என்பதே சுரேஷ் பிரேமச்சந்திரனின் கவலையாக உள்ளது. ஏனென்றால், கூட்டமைப்பைப் பொறுத்தவரை இராணுவம் தமது நிலைகளில் இருந்து அப்புறப்பட வேண்டும் என்பதும், இராணுவப் பாவனையிலுள்ள தமிழ் மக்களின் நிலங்கள் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதும் வெறும் எதிர்ப்பு அரசியல் கோஷமே தவிர, நடைமுறையில் எதிர்பார்க்கும் தீர்வுகள் அல்ல.

மாறாக இராணுவம் இன்னும் பொதுமக்களின் பகுதிகளில் நடமாடுவதும், பொதுமக்களின் நிலங்களும் வீடுகளும் இராணுவத்தினரின் பாதுகாப்புத் தேவைகளுக்காக இருப்பதும் கூட்டமைப்புக்கு எதிர்ப்பு அரசியல் செய்யத் தேவையான காரணிகளாகும். அப்போது தான் இராணுவம் விலக வேண்டும் பொதுமக்களின் நிலங்களை இராணுவம் அபகரித்துள்ளது என்றவிதமான பிரச்சாரங்களை வசதியாக முன் னெடுக்க முடியும். அவற்றில் மாற்றங்கள் நிகழ்ந்தால் கூட்டமைப்புக்கு அரசியலுக்கான சரக்கு இல்லாது போய்விடும். அது தவிரவும், வட மாகாண சபை வெற்றியும் துயரப்படுகின்ற மக்களுக்காக அல்லாமல், சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காக என்பதே கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரையாக உள்ளது.

இந்த நிலையில், இங்கே தமிழ் மக்களுக்குச் சாதகமான மாற்றங்கள் நிகழ்ந்தால், சர்வதேசத்திடம் காட்ட முயற்சிக்கும் கூட்டமைப்பின் குடுவைக்குள் ஒன்றும் இராது. இந்தத் தடுமாற்றமே சுரேஷ் பிரேமச்சந்திரனின் அரசியல் காழ்ப்புணர்வுக்கும் கவலைகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்று "மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம். அதைப் பெற்றுக் கொடுப்பதில் தனது கடமையையும், பொறுப்பையும் எவரது தடையும், எதிர்ப்பும் தடுத்து நிறுத்திவிடாது. கடந்த காலத்தில் தமிழ் மக்கள் ஈ.பி.டி.பி. கட்சிக்கு வழங்கிய ஆணைக்கு மேலதிகமாகவே ஈ.பி.டி.பி. மக்களுக்கான பணிகளைச்செய்து வருகின்றது. ஈ.பி.டி.பி.யின் முயற்சிகளை யாருடைய காழ்ப்புணர்வு விமர்சனங்களும், தேர்தல் வெற்றி தோல்விகளும் தடுத்து நிறுத்தியதில்லை. எமது முயற்சிகள் இன்னும் பல வெற்றிகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவும், யுத்தத்தால் அழிந்த வடமாகாணத்தை வளம்மிக்க தேசமாக தூக்கி நிறுத்துவதற்கும் மாகாண சபை வெற்றியும் பெரிதும் உதவுமென்று ஈ.பி.டி.பி. கருதுகின்றது. எனவே, யார் எதைக் கூறினாலும், அதாவது, ஒற்றுமையைக் காட்டுவதற்காக, சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காக என்றெல்லாம் கடந்தகாலத்தில் தமிழ் மக்களிடம் வாக்குப் பெற்றவர்கள் எதையுமே தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவுமில்லை. அரசியல் வெற்றிகளை நிகழ்த்திக் காட்டவுமில்லை என்ற அனுபவங்களில் இருந்து தமிழ் மக்கள் நடக்க இருக்கும் மாகாண சபைத் தேர்தலில் சரியான தெரிவுகளைச் செய்யவேண்டும். ஈ.பி.டி.பி.யின் முயற்சிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும்" என்றும் கூறியிருந்தார்.

இவற்றைப் பார்க்கின்றபோது எதுவுமே நடந்துவிடக் கூடாது என்பதில் கூட்டமைப்புக் காட்டுகின்ற அக்கறையும், நல்லவைகளே இங்கு நடந்தேற வேண்டும் என்று ஈ.பி.டி.பி. எடுக்கின்ற முயற்சிகளும் தெளிவாகப் புரிகின்றது. யார், எதைச் செய்தாலும், அது அழிவு யுத்தத்திற்கு நேரடியாக முகம் கொடுத்த மக்களின் துயரங்களைத் துடைப்பதற்கும், அழிந்த தேசத்தைத் தூக்கி நிறுத்துவதற்கும் யாருடைய முயற்சிகள் சரியான திசையில் முன்னெடுக்கப்படுகின்றதோ அதை தமிழ் மக்கள் வரவேற்க வேண்டும். பாதுகாப்பான வாழ்விடமும், கௌரவமான வாழ்க்கையுமே உண்மையான தேசியத்தையும் தன்மானத்தையும் பாதுகாக்கவும், உறுதிப்படுத்தவும் உதவும்.



-சிவன்-

எக்ஸ்ரே ரிப்போர்ட்



# காலமள்ளிய கனவுகளும் நீளும் நினைவுகளும்...

சூறாவளியாய் வந்து மனதுக்குள் புகுந்து சுழன்றடித்து இதயத்தை ரணமாக்கும் அவளது நினைவுகள். அவளை அந்த மரண பூமியில் தனிமையில் விட்டுவிட்டுத் தப்பித்து வந்த என்மீது கோபம் கோபமாய் வந்தது.

ஒரே கொள்கை. ஒரே இலட்சியம் என்று வாழ்ந்த நமக்குள் நாமே எழுப்பி உயர்த்திய புனிதம் என்ற கற்பிதம் எல்லாம் கவிழ்ந்து நொருங்குவதுபோல மனசைத் துயர் காவிக் கொண்டு போய்விடுகிறது.

என்னால் மட்டும் எப்படி எல்லாவற்றையும் மறந்து லண்டன்வரை தப்பியோடி வர முடிந்தது...?

இறந்த காலத்தில் மட்டுமே வசந்தத்தைக் காணுகிற என்னை, இன்னும் இறந்துபோகாத நினைவுகளை மட்டும் இழுத்து வைத்திருக்கிற இதயத்தை அவள் நினைவுகள் கூர்மிகு கத்தியாய் பலமுறை பிழந்துபோட்டு விடுகிறது. எத்தனைதான் பாதுகாப்பை லண்டன் அள்ளித்தந்தாலும் எப்போதும் ஒரு அச்சம் இரவுகளையும் கனவுகளையும் களவாடிச் சென்றுவிடுகிறது.

யாரைத்தேட.... யாரைவிட....? எதுவும் புரியாத வினாடிகள் அவை. எங்கள் பூர்வீக பூமியைக் விட்டுவிட்டு, 17.05.2009 அன்று அந்த முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் வீதி-வழியே சனத்தோடு சனமாக நானும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நடைப்பிணமாகப் போய்க் கொண்டிருந்தேன். எவ்வளவோ தோழ தோழியரின் இரத்தத்தால் சிவந்த மண்ணை விட்டுப் பிரியும் கடைசிக் கணங்களவை.

அந்தத் தாய்மண்ணில் நாங்கள் தோழில் சுமந்துவிதைத்த எங்கள் குழந்தைகளைத் தனியேவிட்டு, அவர்களை விதைத்த ஒவ்வொரு முறையும் அவர்கள் கல்லறைகள் முன் உறுதிமொழியெடுத்துக் கொண்டு நிமிர்ந்த நாங்கள் பெற்ற உறுதியும் வலுவும் அன்று உருவழிந்து உயிரை மாய்த்துக்கொண்டிருந்தது.

எங்கள் இயலாமையும் துயரமும் கண்ணீராய் அந்த மண்ணை நனைத்துக் கொண்டிருக்க கால்கள் மட்டும் நடக்க, நடந்து கொண்டிருந்தோம்..

எல்லோருக்கும் கடைசியில் ஏதோவொரு நிறைவுஇருந்தது போல எனக்குள்ளும் ஒரு நிறைவு. கடைசியாக அவளை வட்டுவாகலில் சந்தித்த நிறைவு. மௌனமாக எங்கள் இருவருக்கிடையில் பரிமாறிக்கொண்ட மௌனமொழி என் கால்களிற்கு ஓரளவிற்கு வலுச்சேர்த்துக் கொண்டிருந்தது. 6முறைக்கு மேல் கிழிக்கப்பட்ட எனது உடலைச் சுமந்துகொண்டு ஊன்றுதடியின் துணையோடு அவளிடமிருந்து அவளது பார்வைகளிலிருந்தும் விலகுகிறேன்.

எங்கள் இருவரது குடும்பத்திற்குமிடையில் துளிர்த்த குடும்ப நட்பு மூலம் நாங்களும் நட்பாகிக் கொண்டோம். சிறுவயது முதலே துளிர்த்த அந்த உறவு நாங்கள் வளர்ந்து பெரியவர்களாகியும் மிகநெருங்கிய நட்புறவாக மலர்ந்தது.

நாங்கள் பதின்மவயதை எட்டிய காலப் பகுதியில் அந்த நட்பு இன்னோர் உறவை உருவாக்கி நாங்கள், நமக்குள்ளே அவரவரையும் சுமக்கத் தொடங்கினோம். எங்கள் பதின்மக் காலம் மிகுந்த நெருக்கடி நிறைந்த காலம்.

யுத்தம் தாய் மண்ணின் குரல் வளையை நெரித்துக்கொண்டிருந்த காலமது. உயிர் வாழ்வதற்கே எங்களுக்கு ஒரு வழிதான் ஒளியாய் தெரிந்தது. அந்தத் தெரிவை நானே முடிவு செய்துகொண்டேன். எனது முடிவை யாருக்கும் தெரிவிக்க அவகாசம் வைக்காமல் நான் காடுகளில் பயணிக்கத் தொடங்கினேன். கடும் பயிற்சி, காவலரண் என ஆரம்பித்து களங்களில் நான் துப்பாக்கியோடு காவலிருக்கத் தொடங்கினேன். எனது கனவு ஒன்றே அது சுதந்திரத் தாயகமென்பதாகவே முடிவெடுத்துக் கொண்டேன்.

காலங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தது. அவள் பற்றிய ஞாபகங்களும் வருவதில்லை. களமுனை காவலரண் தோழர்களென எனது கவனம் முழுவதும் களம்தான் ஒரு களமுனையில் ஏற்பட்ட விழுப்புண். பொறுப்பாளரால் கட்டியனுப்பாத குறையாய் ஒரு வார விடுமுறை தந்தனுப்பினார்.

விடுமுறையில் வீட்டிற்குச் சென்றபோது அவளும் எங்கள் வீட்டில் இருந்தாள். அப்போது அவள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்றுக்கொண்டிருந்தாள்.

கடுமையான பயிற்சிகளினால் இறுகிப் போன உடம்பை மறைத்து அணிந்திருந்த சேட் கழுத்தில் கட்டியிருந்த கறுப்பு நூல் என்னையே எனக்குள் பெருமைப்பட வைத்த நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட அலட்சியப் பார்வையுமென மாறியிருந்த எனது தோற்றம் அவளை ஆச்சரியப்படுத்தியிருக்கிறது.

அடிக்கடி என்னையே பார்ப்பதும் தனக்குள் ஆச்சரியப்படுவதும் ஏதோ ஒரு சந்தோசத்தில் மூழ்குவதும் எனக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. மறந்துபோன ஞாபகங்களை அந்தக் குறுகிய விடுமுறையில் புதுப்பித்துக் கொண்டோம். கனகாலம் வெளிமனித முகங்களைக் காணாமல் இருந்ததோ, என்னவோ அவளை மீளச் சந்தித்ததோடு அவளுடன் அடிக்கடி கதைக்கவேண்டும் போலிருந்தது. சொல்லாமல் ஒழித்து வைத்திருந்த ஆயிரம் கதைகள் அவளுக்குச் சொல்லவேண்டும் போல. ஆயினும், எங்களுடைய கதைகள் பல் வேறுபட்ட துறைகளைச் சார்ந்ததாக முடிந்தது.

விடுமுறை முடிந்து எல்லோரிடமும் நான் பிரியாவிடை பெறும்நேரம்!! அவள் கண் கலங்குவதை ஓரக்கண்ணால் பார்த்தேன். அவளிடம் சொல்வதற்கு என்னிடம் நிறைய இருந்தது. ஆனால் ஒரு சிறு புன்னகையை மாத்திரம் உதிர்த்துவிட்டு வாசலுக்கு வந்தேன். அவளும் வாசல்வரை வழியனுப்ப வந்தாள்.

அவளுடைய மௌனம் ஏதோ ஒன்றை என்னிடம் சொல்ல எத்தனிப்பதை புரிந்து கொண்டும் நான் ஏதும் கேட்கவில்லை. ஆனாலும் எல்லாவற்றிற்கும் முன்னால் எனது கடமை வந்துநின்று என்னை வேறு பக்கங்களில் சிந்திப்பதைத் தடுத்தது. அன்று விழிகளால் கதைபேசி மௌனங்களால் விடைபெற்றேன் அவளிடமிருந்து....

அதற்குப் பிறகு அவளைச் சந்தித்தது ஆனையிறவுக் களமுனையில்தான். அவள் சீருடை தரித்து ஒரு அணியை வழிநடத்திக் கொண்டிருந்தாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த சீருடையில் அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தாள். கிடைத்த ஒரு வாய்ப்பில் அவளுடன் கதைத்தேன். அதன் பிறகு பல தடவைகள் அவளுடன் கதைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சந்திப்புகளின் போதெல்லாம் எங்களுடைய போராட்ட வாழ்க்கையின் அனுபவங்களை, நாம் சுமந்த இனிய நினைவுகளை, நண்பர்களை, துன்ப துயரங்களைப் பகிர்ந்துகொண்டோமே தவிர ஒருமுறைகூட எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றியும் எதிர்காலக் கனவுகள் பற்றியும் கதைத்துக் கொள்ளவேயில்லை.

ஆனாலும் இருவருக்கும் எங்கள் எதிர் காலம் பற்றிய ஏராளம் கற்பனைகள் மனதுக்குள் சிறகடித்துக் கொண்டிருந்தது. எமக்குள்ளான ஆழமான புரிந்துணர்வுடன் இருவரும் பிரிந்துசெல்வோம்.

அதன்பிறகு நாங்கள் சந்தித்துக்கொள்ள முடியாது போய்விட்டது. இறுதி யுத்தம் தொடங்கி எல்லாரும் களமுனைகளில் கவனமாகியிருந்தோம். விருப்பு - வெறுப்பு எதையும் தெரிவிக்க முடியாத களநிலை மாற்றம் வாழ்வுக்கும் சாவுக்கும் நடுவில் நமது கால்கள் களமே எங்கள் வாழ்வாகிப் போன நாட்களவை. 10.10.2008 ஈழப்பெண்களின் வரலாற்றில் மாலதியென்ற அத்தியாயம் எழுதப்பட்ட 21 வருட நினைவுநாள் அது. எனது வாழ்நாளையும் அந்த அதிகாலை மாற்றிவிடுமென்று நான் எண்ணா விடியல் அது.

வன்னேரிக் குளப்பகுதியில் எனக்கான அணியோடு ஒரு முற்றுகைக்கான அணியை ஒழுங்குபடுத்தி முடித்தேன். தலைநிமிர முடியா வெடிச்சத்தங்கள் நடுவில் அந்தக் களநிலைமை. எனது அணியை நெருங்கும் முயற்சியில் குண்டுமழைக்குள்ளால் தவண்டு சென்ற நான் களநிலைமையில் உக்கிரத்தைப் புரிந்து எழுந்து ஓடுகிறேன். எனது ஓட்டம் விரைவாகி எனது அணியும் நானும் ஒரு முனையைக் கைப்பற்றி விடுவோமென்ற நம்பிக்கை என்னுள் பதிகிறது.

(தொடரும்)

---



# புலிகளின் வதை முகாமில்

வதை 74 மணியம்

பல இடங்களில் இந்த 'வீரர்கள்' அரசாங்கக் கட்சியான ஐ.தே.கவின் பிரச்சாரக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டனர்.

அத்துடன் எதிர்க்கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும், இடதுசாரிக் கட்சிகளினதும் கூட்டங்களைக் குழப்புவதற்கும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர். ஆளும் கட்சியின் அடாவடித் தனங்களுக்கு உடன்படாதவர்கள் பழிவாங்கப்பட்டனர். அவ்வாறான ஒரு பிரச்சினையில் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவகுருநாதன் என்ற இளைஞர், முத்தையன்கட்டு விவசாயப்படை முகாமில் வைத்து மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை அவர் அங்குள்ள விவசாயப் படைப் படை முகாம் நிர்வாகிகளுடன் கொண்ட முரண்பாடு காரணமாகவே நிகழ்த்தப்பட்டது என்ற கருத்தும் நிலவியது.

அத்துடன், இந்தப்படை முகாம்கள் அமைந்திருந்த பகுதிகளில் விவசாயப் படையினருக்கும் அப்பகுதி உள்ஊர் மக்களுக்கும் அடிக்கடி மோதல்களும் நிகழ்ந்து வந்தது. அப்படியான ஒரு பிரச்சினை விசுவமடு முகாம் பொறுப்பதிகாரிக்கும் தருமபுரம் மக்களுக்கும் இடையிலும் நிகழ்ந்தது. அதனால் ஆத்திரமடைந்த தருமபுரம் இளைஞர்கள், ஒருமுறை விசுவமடு முகாம் பொறுப்பாளர் விசுவநாதன் கிளிநொச்சி சென்றுவிட்டுத் திரும்புகையில், அவரை தருமபுரம் 3ம் யூனிற் பகுதியில் வழிமறித்து, அவரது உடைகளைக் கழற்றவைத்து, உள்ளாடையுடன் மட்டும் ஊர்வலம் நடாத்திவிட்டுப் பின்னர் அவரது ஜீப் வண்டியில் செல்ல அனுமதித்த சம்பவமும் நடந்தது. பின்னர் விசுவநாதன் அந்த சம்பவம் பற்றி கிளிநொச்சி பொலிசில் முறைப்பாடு செய்வதற்காக, தருமபுரம் வழியாகச் செல்லமுடியாமல், முல்லைத்தீவு சென்று, அங்கிருந்து மாங்குளம் சென்று, பின்னர் கிளிநொச்சி சென்ற, அதாவது தலையைச் சுற்றி மூக்கைத் தொட்ட நிகழ்வும் நடந்தது.

அதிகாரிகளின் இந்தவிதமான நடத்தைகளால், விசுவமடு முகாமில் இருந்த விவசாயப்படை வீரர்களில் பெரும்பாலானவர்கள் அதிகாரிகளுக்கு எதிரான நிலையிலேயே இருந்தனர். அதனால் அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் இடையில் எப்பொழுதும் முறுகல் நிலையே நிலவிவந்தது. அதிகாரிகள், இளைஞர்களுக்கு என அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உணவுகளை அவர்களுக்குச் சரியாகக் கொடுக்காமல், அவற்றைக் களவாக விற்பனைசெய்வதாகவும் இளைஞர்களுக்குத் தெரியவந்தது. இந்தப் பின்னணியில், ஒரு இரவு அந்த முகாமின் உணவுக் களஞ்சியம் திடீரென எரிந்து சாம்பராகியது. அதற்கான காரணகர்த்தாக்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு, சில இளைஞர்கள் பொலிசாரிடம் அதிகாரிகளால் பிடித்துக் கொடுக்கப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் எமது புரட்சிகர இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி.பண்டார நாயக்க (எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கவுடன் சேர்ந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான தோழர் எஸ்.டி.பண்டார நாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கவின் ஒன்றுவிட்ட சகோதரர். நீண்டகாலம் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், 1960களின் பிற்பகுதியில் அக்கட்சியின் அப்போதைய தலைவர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவுடன் முரண்பட்டுக் கொண்டு எமது கட்சியில் இணைந்தருந்தார்) எமது விவசாயிகள் சங்கத்தின் அழைப்பை ஏற்று 1968ம் ஆண்டு 3 நாட்கள் கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அவரது விஜயத்தின்போது, அவர் எமது விவசாய சங்கங்களும் தொழிற் சங்கங்களும் பலமாக இருந்த வட்டக்கச்சி, இராமநாதபுரம், திருவையாறு படித்த வாலிபர் திட்டம், மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டம், விசுவமடு படித்த வாலிபர் திட்டம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வட்டக்கச்சி அரசாங்க விவசாயப் பாடசாலை உட்பட பல இடங்களுக்கும் விஜயம் செய்து, அங்குள்ள மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்ததுடன், அந்த 3 நாட்களும் சாதாரண விவசாயிகளின் குடியேற்றத் திட்ட வீடுகளிலேயே உணவுண்டு, அவர்கள் கொடுத்த பாய்களில் உறங்கி, அவர்களைப் போலவே காடுகளுக்குச் சென்று மலசலம் கழித்து, குளத்து வாய்க்கால்களில் குளித்து, கிளிநொச்சி மக்களின் இதயங்களை அள்ளிச்சென்றார்.

பின்னர் அவர் அந்த மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் கேள்விஎழுப்பியதுடன், பெரும் மழை காரணமாக அழிந்து போன விசுவமடு விவசாயிகளின் மிளகாய் பயிர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதற்காக, அங்கிருந்து ஒரு தூதுக்குழுவை கொழும்புக்கு அழைத்துச்சென்று, அப்போதைய காணி, நீர்ப்பாசன அமைச்சர் சி.பி.டி. சில்வாவுடன் ஒரு சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

எஸ்.டி.பண்டாரநாயக்க அவர்களின் கிளிநொச்சி விஜயத்தின்போது அவர் விசுவமடு படித்த வாலிபர் திட்டத்துக்கு விஜயம் செய்வதுடன், அங்கு கூட்டம் ஒன்றிலும் உரையாற்றுவதற்கு நாம் ஒழுங்கு செய்திருந்தோம். விசுவமடுவில் எமக்கு மிகவும் பலமானதொரு ஆதரவுத்தளம் இருந்ததால், அவரது வருகை அங்கு ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. அவரது வருகையை அறிந்த விசுவமடு விவசாயப்படை முகாம் அதிகாரிகள், தமது சில வீரர்களை அனுப்பி அவரது கூட்டத்தைக் குழப்புவதற்கு திட்டமிட்டனர். (அதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கிளிநொச்சித் தொகுதியின் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ.இரத்தினத்துக்கும் தொடர்பிருந்த விடயம் பின்னர் எமக்குத் தெரியவந்தது) இந்த குழப்ப விவகாரத்தை விவசாயப்படையில் எம்முடன் தொடர்பிலிருந்த சிலர் எம்மிடம் ஏற்கெனவே தெரிவித்துவிட்டனர்.

எஸ்.டி.பண்டாரநாயக்க விசுவமடுவுக்கு வந்து கூட்டமும் ஆரம்பித்த வேளையில், அதைக் குழப்புவதற்காக அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட சில இளைஞர்களும் அங்கு வந்துசேர்ந்தனர். இந்த விடயங்களுக்கிடையில், எஸ்.டி. பண்டாரநாயக்காவின் கிளிநொச்சி வருகைக்கு எதிராக, தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ. இரத்தினம் மேற்கொண்ட கீழ்த்தரமான செயல்களை இங்கு புட்டுவைப்பது அவசியம். 'ஆண்ட தமிழினத்தை சிங்களவன் ஆளுகிறான்' எனப் பேசிக்கொண்டு, அந்த 'ஆளுகின்ற' சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரை, அதுவும் பண்டா – செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, இனவாதி ஜே.ஆர். 1957ல் கண்டிக்கு புத்த பிக்குமாரையும் அழைத்துக்கொண்டு யாத்திரை சென்றபோது, தனது தொகுதியான கம்பஹாவின் இம்புல்கொட என்ற இடத்தில் வைத்து அடித்துக் கலைத்து, திரும்பவும் கொழும்பு நோக்கி ஓடவைத்த ஒருவரை, தன்னது அதிகாரத்தைப் பயன்படுத்தி, கிளிநொச்சிக்கு வந்த அவரை கா.பொ.இரத்தினம் எப்படித் தடுக்க முயன்றார் என்பதை அறிந்தால், இப்போதிருப்பதற்குத் தலைகீழாக, இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாகவும், சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் இருந்திருந்தால், அவர்கள் கதி என்னவாகியிருக்கும் என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 63

பா.ராகவன்

இத்தனைக்கும் மத்திய ஆசியாவிலேயே மிகவும் வளம்குன்றிய பகுதி அதுதான். (இன்றைக்கும்) பாலை வனங்களும் கரடுமுரடான பாறைகளாலான சிறுகுன்றுகளும் அங்கே அதிகம் பெரும்பாலான கிராமங்களுக்கு வெளியில் இருந்து யாரும் போகக்கூட முடியாத பாதைகளே இருக்காது.

பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் பாலஸ்தீனுக்கு இடம் பெயர்ந்துவந்த யூதர்கள், அங்கே ஆறு 'புத்தம்புதிய' கிராமங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றால் நம்பமுடிகிறதா? ஒரு பாலைநிலப் பகுதியில் தற்செயலாகப் பயணம் மேற்கொண்டவர்கள் தாகத்தில் அலைந்து திரிந்தபோது புதிதாகச் சில கிராமங்களையும் அங்கு வாழும் மக்களையும் கண்டுபிடித்தார்கள். மண்ணின் மைந்தர்களான அவர்கள், அதுநாள்வரை பாலஸ்தீனில் நடைபெற்ற எத்தனையோ அரசியல் குழப்பங்களுக்கும் தங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்ப போல, தனிக்காட்டில் கூட்டுவாழ்க்கை மேற்கொண்டிருந்திருக்கிறார்கள். இப்போது தங்களை யார் ஆள்கிறார்கள் என்பதுகூடத் தெரியாமல் அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இடம் பாலஸ்தீன். ஆனாலும் எந்த மன்னராலும் பாலஸ்தீனை மனதளவிலும் விட்டுக் கொடுத்துவிட முடியாது. காரணம், ஜெருசலேம்.

ஒட்டோமான் பேரரசின் கீழ் பாலஸ்தீன் இருந்த காலத்தில் ஏராளமான ஐரோப்பிய யூதர்கள் அங்கே இடம்பெயர்ந்து வந்தனர். ஆனால் பாலஸ்தீனில் மீண்டும் யுத்தம், மீண்டும் ஆட்சிமாற்றம் என்று எகிப்து மன்னர் முஹம்மது அலியின் படையெடுப்பை ஒட்டி ஏற்பட்ட பதற்றத்தில் பெரும்பாலான யூதர்கள் பாலஸ்தீனை விட்டு வெளியேறிவிட்டிருந்தார்கள். துருக்கிப் பேரரசின் எல்லைக்குள் பரவலாக வசிக்கத் தலைப்பட்ட யூதர்களுக்கு இம்முறை வாழ்வது கொஞ்சம் பிரச்சினையாகத்தான் இருந்தது.

அவர்கள் முதல்முதலில் இடம் பெயர்ந்து வந்தபோது இருந்தளவுக்கு அப்போதைய அரசு கருணைமிக்கதாக இல்லை. அரசு என்றால் மன்னர். சுல்தான். திம்மிகள் என்ற அளவில் அவர்களுக்கான உரிமைகள் இருக்கவே செய்தன என்றபோதும் அடக்குமுறை சற்று அதிகமாகவே இருந்ததாக எழுதுகிறார்கள் யூத சரித்திர ஆசிரியர்கள்.



(இதனைக் கிருத்தவ சரித்திர ஆய்வாளர்களும் ஆமோதிக்கிறார்கள்)

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே அராபியர்களுக்கு யூதர்களைச் சுத்தமாகப் பிடிக்காமல் போய் விட்டது. அதுவரை யூதர்கள் விஷயத்தில் கூடியவரை சகிப்புத்தன்மையுடனும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்துவந்தவர்கள், கி.பி.1790ஆம் ஆண்டு காலகட்டத்திலிருந்து ஏனோ யூதர்களிடமிருந்து பெரிதும் விலகியே இருக்கத் தொடங்கினார்கள்.

இதற்கு பாலஸ்தீன் முஸ்லிம்கள் தரப்பில் சொல்லப்பட்ட காரணங்கள் பின்வருமாறு:

01. அவர்கள் நைச்சியமாக அதிகாரிகளை வளைத்துப்போட்டு எங்கள் நிலங்களை அபகரித்துக்கொள்கிறார்கள்.

02. வட்டிக்குப் பணம் கொடுக்கிறார்கள். பெரும்பாலும் புரியாத விதத்தில் பத்திரங்களை எழுதி வாங்கிக்கொள்கிறார்கள். பணம்கட்ட முடியாமல் போகும் சந்தர்ப்பங்களில், அந்தப் பத்திரங்களை அதிகாரிகளிடம் சமர்ப்பித்து எங்கள் வீடுகளையும், நிலங்களையும் கையகப்படுத்திவிடுகிறார்கள். கூடுதலாக அவகாசம் தருவது என்பதே கிடையாது.

03. அரேபியச் சிறுவர்களையும் சிறுமிகளையும் வீட்டுவேலைகளுக்கு வைத்துக்கொள்கிறார்கள், அவர்கள் மனத்தில் யூதமதம்தான் உயர்வானது, யூதர்கள்தான் மேலானவர்கள் என்பது போன்ற எண்ணத்தை விதைக்கிறார்கள். அராபியர்கள் அடிமை வாழ்வுவாழவே பிறந்தவர்கள் என்று திரும்பத்திரும்பச் சொல்கிறார்கள்.

04. ஆட்சியாளர்களுக்கு நிறையப் பணம்கொடுத்து, பெரிய ஒப்பந்தங்களைப் பெற்றுவிடுகிறார்கள். வெளிநாட்டு வர்த்தகம் போன்ற லாபம் தரத்தக்க பணிகளில் நுழைவதை அராபியர்கள் முடிந்தவரை தடுக்கிறார்கள்.

05. தங்கள் தொழிலுக்குப் போட்டியாக முஸ்லிம்கள் பெரிதாக வளர்ந்து வரும்போது சூழ்ச்சி செய்து அழிக்கிறார்கள்.

06. யூதக்குழந்தைகள் முஸ்லிம் குழந்தைகளுடன் பழகவிடுவதில்லை.

07. யூத குருமார்கள் ஆணவத்துடன் நடந்துகொள்கிறார்கள். அவர்கள் முஸ்லிம்களை அறவே மதிப்பதில்லை.

08. முஸ்லிம்களின் பண்டிகைக் காலங்களிலும் கொண்டாட்டக் காலங்களிலும் அவர்கள் தம் வீடுகளைத் திறப்பதே இல்லை. துக்கதினம் போல் அனுஷ்டிக்கிறார்கள்.

09. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இறைதூரான முகம்மது நபியை அவமரியாதையாகப் பேசுகிறார்கள்.

மேற்சென்ன இந்த ஒன்பது காரணங்களை ஹாசன் தாபித் என்கிற பதினெட்டாம் நூற்றாண்டு சரித்திர ஆசிரியரின் குறிப்புகளிலிருந்து பெறமுடிகிறது. இஸ்தான்புல்லில் ஒரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவர் இவர்.



இந்த ஒன்பது காரணங்களைச் சற்று உன்னிப்பாகக் கவனித்தால் அன்றைய பாலஸ்தீன் அராபியர்களின் சமூக நிலைமை சற்றுப்புரியும். முதல் காரணம் நமக்குத் தெரிவிப்பது, அந்தக் காலத்தில் அரேபிய முஸ்லிம்களுக்குக் கிராம – நகர அதிகாரிகளுடன் நெருக்கமோ, செல்வாக்கோ இல்லை. அதிகாரிகளும் முஸ்லிம்களே என்றபோதும் சாமானிய மக்களுக்கும் அவர்களுக்கும் இடைவெளி இருந்திருக்கிறது.

இரண்டாவது காரணம் சொல்லும் செய்தி – யூதர்கள் வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக வந்தார்கள் என்றபோதும் அவர்களுக்குப் பணப்பிரச்சினை இல்லை. வட்டிக்குப் பணம் தரும் அளவுக்குவசதியாக இருந்திருக்கிறார்கள். அராபியர்கள் உள்ளூர்க்காரர்களே என்றாலும் ஏழ்மை மிகுதியாக இருந்திருக்கிறது. வட்டிக்குப் பணம் பெற்றே வாழ்க்கை ஓட்டியிருக்கிறார்கள். மேலும், வட்டிக்குப் பத்திரங்களைப் படித்துப் புரிந்துகொள்ளும் அளவுக்கு முஸ்லிம்களுக்குப் படிப்பறிவும் இல்லை.

மூன்றாவது காரணமும் அராபியர்களின் ஏழ்மை வாழ்க்கையைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

நான்காவது காரணம்: அந்தக் காலத்திலும் இலஞ்சம் வாங்கும் ஆட்சியாளர்கள் இருந்திருக்கிறார்கள். வர்த்தக ஒப்பந்தங்கள், லைசென்ஸ்கள் போன்றவை இலஞ்சமில்லாமல் சாத்தியமாகவில்லை.

ஐந்தாவது காரணம்: முஸ்லிம்களில் சிலர் கல்வி கற்றோராக, வியாபாரத்தில் சிறந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனாலும் யூதர்களுடன் அவர்களால் போட்டியிட முடியாமல் போயிருக்கிறது.

(தொடரும்...



# “புவியை நடத்துக! பொதுவில் நடத்துக”

**நாம்** எங்கே போகின்றோம்? எங்கே போகவேண்டும் என்று சொல்லாமல், வழிகாட்டாமல், எங்கே போகிறோம் என்று கேட்பதற்குக் காரணம் என்ன?

குற்றங்கள் தெரிந்தால் குணங்களை வளர்த்துக்கொள்ள முடியும். குறைகள் தெரிந்தால் நிறைகளை வளர்த்துக்கொள்ள முடியும். நாம் வழிதவறிவிட்டோமா? அல்லது வழித்தடத்தில்தான் செல்லுகிறோமா? சிந்திக்கவேண்டிய காலம் இதுதான்.

சிந்தனையாலும், கருத்தாலும் அறிவாலும், நாகரிகத்தாலும், பண்பாட்டாலும், படைப்பாற்றலாலும், நடக்கவேண்டிய பொறுப்பு மனிதனுடையது. அவன் தான் நடக்கவேண்டிய தடத்தை தெரிந்துகொள்ள வேண்டும். புவி அவனை நடத்தக்கூடாது. அவன் புவியை நடத்த வேண்டும். **பாவேந்தர் பாரதிதாசன் “புவியை நடத்துக! பொதுவில் நடத்துக”** என்று சொன்னார்.

இன்றைக்கு நமது இளைய சமூகத்தைப் பற்றி அடுத்துவருகின்ற தலைமுறையினரைப் பற்றி நமக்கு கவலை இருக்கிறதா? அதற்குரிய திட்டங்களைத் தீட்டுகின்றோமா? அப்படியே தீட்டினாலும், அந்தத் திட்டத்தினுடைய பயன்கள் இளைஞர்களிற்கு போய்ச்சேருகிறதா? இவையெல்லாம் சிந்திக்கவேண்டியன. சிந்தனைசெய்து முடிவிற்கு வரவேண்டிய பொறுப்பு நாட்டை நிர்வகிப்பவர்களின் பொறுப்பாகும்.

தமிழர்கள் நீண்டகால வரலாற்று பெருமைமிக்கவர்கள். வரலாற்றுப் பெட்டகங்கள் ஏராளம் உண்டு. இந்த வரலாற்றுப் படிப்பினைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். வரலாற்றுப் படிப்பினைகளை ஏற்றுக்கொண்டு புதியன கண்டு போர்க்குணத்தோடு போராடி நமது இன்றைய நிலைக்கு மாற்றம் காணவேண்டும்.

இலக்கிய உலகத்திற்குள் நுழைந்தால், தமிழ் இலக்கியங்கள் ஒரு பூங்கா என்று சொல்லலாம். இராம கதையை எடுத்துக்கொண்டால், கம்பன் அற்புதமாக ஒரு நாட்டை எண்ணிப் பார்க்கின்றான். அவனுடைய கோசலை நாடு அப்படி இருந்ததா? தெரியாது. அவன்கண்ட இலங்கை நாடு அப்படியிருந்ததா? சொல்லமுடியாது. ஆனாலும் கம்பன் தன்னுடைய இலட்சிய நாடு ஒன்றை தன்னுடைய கதையில் நினைவூட்டுகின்றார். **கள்வரும் காவல் செய்வாரும் இல்லாத நாடாக இருக்கவேண்டும்** என்று ஆசைப்படுகின்றான். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், கற்றோர் நிறைந்திருக்கவேண்டும். மக்களுக்கு வழிகாட்ட கூட்டமும் திட்டமும் இருக்கவேண்டும். இன்று நமது நிலை எப்படியுள்ளது?

பழைய காலத்தில் சாதி வேற்றுமைகள் நெகிழ்ந்து கொடுத்தன. இன்று அவை நெகிழ்ந்துகொடுக்காமல் இறுக்கமடைந்துவருகின்றன என்பதை அன்புகூர்ந்து எண்ணிப்பாருங்கள். 2050 ஆண்டுகளிற்குப் முன்புதோன்றிய திருவள்ளுவர்.

**““பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”**

என்ற சொன்னார். பிறப்பில் உயிர்களிடையே வேறுபாடுகள் இல்லை. அனைவரும் சமம் என்று சொன்னார். அதையே வழிமொழிந்த அப்பரடிகள் **“இந்த நாட்டில் சாதி இல்லை. சாதிகளைச் சொல்பவர்கள் சாழாக்கர்கள்”** என்று மிகக் கடுமையாகச் சாடினார். நம்முடைய நாடு ஜனநாயக நாடு. மக்கள் ஆட்சிமுறை நடைபெறுகின்ற நாடு ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் கோட்பாடு மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை நண்பர்களுக்கிடையில், கணவன், மனைவிக்கிடையில் குடும்பச் சூழ்நிலையில், கடைவீதியில், ஊரில், நாட்டில், மாகாணசபையில், பாராளுமன்றத்தில், எங்கும் ஜனநாய மரபுகள் செழித்து வளரவேண்டும். சொல்லுவது சிலராக இருக்க வேண்டும். பிறர்வாய் கேட்பது அதிகமாக இருக்கவேண்டும். ஜனநாயக வடிவம் போதாது. ஜனநாயக உணர்வு தேவை. ஜனநாயக வாழ்க்கையின் மரபில் அலட்சியம் கூடாது.

நாட்டில், யாரையும், எந்தப்பகுதி மக்களையும் அவர்களின் கருத்துக்களை அலட்சியப்படுத்தக்கூடாது. எல்லோரிற்கும் மதிப்புத்தரவேண்டும். அரசியல் என்பது ஒரு ஞானம் அது ஒரு அறிவியல், அரசியல், அறிவு, மக்களாட்சி முறையில் வாழுகின்ற நாட்டு மக்களிற்கு தவிர்க்க முடியாதது. அரசியல் அறிவு, அரசியல் போராட்டங்கள், அரசியல்கட்சிகளுக்கே சொந்தமானவை அல்ல. நம்முடைய நாட்டில் அரசியலை அரசியல் கட்சியிடமே ஒப்படைத்துவிடுகிறார்கள்.

படித்தவர்கள், பேராசிரியர்கள், சிந்தனையாளர்கள், இவர்கள்கூட அரசியலைப் பற்றிக்கூற கூச்சப்படுகிறார்கள் - பயப்படுகின்றார்கள் தப்பித்தவறி பேசிவிட்டால் கட்சிக்காரர்களுக்கு கடுஞ்சினம் ஏற்படுகிறது அன்புகூர்ந்து மன்னித்துக்கொள்ளுங்கள்.

அரசியல் சிந்தனை அந்த நாட்டில் அனைத்து மக்களிற்கும் என்றைக்கு ஏற்படுகிறதோ அன்றைக்கே மக்களாட்சி முறை வளரும். ஜனநாயகம் என்பது ஒருமுறை மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறை உணர்வுசெறிந்தது, ஒழுங்கு செறிந்தது ஒழுக்கம் செறிந்தது இன்று எங்கு பார்த்தாலும் போட்டா போட்டிகள்! தலைமைக்கும் பெருமைக்கும் போராட்டங்கள்! இலட்சியத்தைப் பறிகொடுத்துவிட்டுக்கூட பெருமை தேடுவார்கள் போலத் தெரிகிறது. இலட்சியம் பெரிது. இலட்சியம் தூய்மையானது. இலட்சிய வாழ்க்கை உயர்ந்தது. பதவிகளும் பெருமையும் வரலாம் - போகலாம் இலட்சியத்தை தியாகம் செய்துவிட்டு தயவுசெய்து பதவிகளைத் தேடவேண்டாம்.

இளைஞர்களே எழுந்திரு! புதியதோர் உலகைப் படைக்க எழுந்து வா; உனக்குத் தேவையான கல்வி ஏது நிர்ணயம் செய்! தற்சார்பான கல்வியைப் பெறு! வேலையைத் தேடாதே! வேலையை உருவாக்கு! கைவருந்தி உழைப்பவர் தெய்வம் என்று நம்பு வரலாற்றுப் போக்கோடு ஓடிவிடலாம் என்று நினைக்காதே! நீ வரலாற்றை நிகழ்த்தி, நின்று போராடிப் புதிய வரலாற்றைப் படைத்து சாதனை செய்! உன்னுடைய காலம் இந்த நாட்டினுடைய பொன்னேடாக அமையட்டும்.

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

# புதையல் தோண்டல்களும் புலிகளின் முகாம்களும்

**பிரகஸ்பதி**

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு - கிழக்கின் பல பகுதிகளிலும் புதையல் தோண்டுதல் என்ற பெயரில் பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவை நிறைவுக்கு வந்துவிட்டன என்று எல்லோரும் நம்பிக்கொண்டு இருந்தாலும் இன்னமும் தொடரும் நிலை இருக்கிறது என்றவகையில் இந்த கட்டுரை ஆராய்கிறது.

தொல்பொருட்களை ஆராய்வதும், அவற்றை வரலாற்றுச் சின்னங்களாய் பேணுவதும் தேவை என்ற நிலையில் வரலாற்றுச் சின்னங்களையும் பொருள்களையும் பேணுவதற்கான தேவைக்கு அப்பால் பணம்சேர்க்கும் முயற்சிகள் முதன்மைப்படுகின்றன.

கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட குழுவினர் மடு பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினை சேர்ந்தவர்கள் 4பேர் அடங்கலாக ஏழு பேர் புதையல் தோண்டிய சந்தேகத்தில் பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் தொல்பொருள் திணைக்களத்தின் சிரேஷ்ட தொல்பொருள் ஆய்வாளரான சுனேத்திர நலிந்த சில்வா, தொழில்நுட்ப உத்தியோகத்தர் எரந்த மாரம்ப சில்வா, பெண் உதவியாளர் லசித்தா மாலி ரத்நாயக்க, வாகன ஓட்டுனர் அருணா சாந்த ஆகியோர் அடங்கியிருந்தனர். அத்துடன், கொழும்பைச் சேர்ந்த வீரசேகர, குலோத்துங்க பண்டார, மடுல் சீமையைச் சேர்ந்த சுப்பிரமணியம் புவனேசன் ஆகியோரும் இருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில், தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அவர்களது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தின் அடிப்படையில் தாங்கள் பரிசோதனைகளுக்காக வருகை தந்ததாக தெரிவித்து பொலிஸாரிடமிருந்து தப்பித்து (விடுவிப்பு)க்கொண்டனர்.

ஆனால், ஏனையோரும் காணிச் சொந்தக் காரர் எனத் தெரிவிக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த சிவகுரு சற்குணம் என்பவரும் பொலிசாரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட இடம் விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த கௌசல்யனின் முகாம் அமைந்திருந்த பிரதேசம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானைச் சேர்ந்த சிவருகு சற்குணம் எனும் ஆசிரியருக்குச் சொந்தமான காணி ஒன்று குழுவினர் மடு பிரதேசத்தில் இருப்பதாகவும், அந்தப் பத்து ஏக்கர் காணியில் தங்களது நகைகள் உள்ளிட்ட பொருள்கள் யுத்தத்திற்கு முன்னர் வீட்டுடன் இருந்ததாகவும், தற்போது அப் பொருள்கள் எங்கிருக்கின்றன என்பதைக் கண்டிறிந்து தரும்படி தொல்பொருள் திணைக்களத் திடம் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பம், சற்குணம் ஆசிரியரின் நண்பரான ஆட்பதிவுத் திணைக் களத்தில் தொழில் புரியும் வீரசேகர ஊடாக செய்யப்பட்டுள்ளது. அவரது உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியில், அவரது நண்பர்கள் இருவரும் இணைந்து தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட தொல்பொருளாளருடன் இப்பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வேறு பிரதேசத்தவர்கள் நடமாட்டத்தினை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

> **கடந்த காலத்தில் எமது மன்னர்களும், முன்னோர்களும் புதைத்து வைத்தவைகளையே புதையல் என்று சொல்லிக்கொள்கிறோம். முகாம்களிலும் இருப்பிடங் களிலும் மறைத்து வைத்தவற்றை இப்போது புதையல் என்று சொல்கிறோம். காடுகள், மலைகள், ஆறுகள், குளங்கள், எனத்தொடரும் புதையல்தோண்டும் முயற்சி களுக்கு எப்போதுதான் முடிவுக்குவரும் என்ற ஏக்கம் மக்கள் மத்தியிலேயே ஏற்பட்டிருக்கிறது.**

இருப்பினும், குறிப்பிட்ட தொல்லியலாளர் உட்பட அவரது உதவியாளர்களும் எந்தவித அறிவித்தலும் இன்றியே இந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும், இருப்பினும், சுயாதீனமாக இவ்வாறான கண்டுபிடிப்பு வேலைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தொல்பொருள் திணைக்களத் தினைச் சேர்ந்தவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், புதையல் தோண்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஏனையவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் தேடப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் குறிப் பிட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் ஈடுபட்டதனை பொதுமக்கள் அவதானித்த தாகவும் தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் முகாம்கள் அமைந் திருந்த இடங்கள் பலவற்றில் பெருந்தொகைப் பணங்கள் புதைந்திருப்பதாக தகவல்கள் இருக்கின்றன. இந்த அடிப்படையில் இவர்கள் இந்த இடத்தில் பணம், நகைகளை எடுத்துக் கொள்வதற்காக இந்த முயற்சியில் இறங்கியிருக் கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டதாக தெரிவிக்கப்படும் ஆசிரியர் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக் களத்தினை சேர்ந்த நால்வர் உட்பட ஏழு பேரை கொக்கட்டிச்சோலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தினைச் சேர்ந்தவர்கள், ஜீ.பி.எஸ் தொழில்நுட்பம் தெரிந் தவர்கள் என ஆராய்ச்சி விடயங்களில் ஈடுபடு பவர்களைப் பயமுறுத்தி கிழக்கில் புலிகளின் முகாம்கள் இருந்த இடங்கள், பழைமையான ஆலயங்கள் இருந்த இடங்கள் எனப் பல இடங்களில் இருந்தும் பணம், நகைகள், புராதனப் பொருள்கள் கொள்ளையிடப்படும் வேலைகள் தெரியாமலேயே நடைபெற்று வந்தன.

அது இரகசியமாக நடைபெற்று வந்த நிலையில், பொலிஸாரும் இராணுவத்தினரும் இதனைத் தடுக்கும் முயற்சிகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுவந்தனர். கடந்த ஜுலை மாதத்தில் புதையல் தோண்டுவோருக்கு எதிராக கடும் சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டுவோருக்கு எதிரான சட்டம் இறுக்கப் படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மரபுரிமைகள் அமைச்சு மேற்கொண்டது.

இந்த புதிய சட்டத்தின்படி புதையல் தோண்ட அல்லது புராதன சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துகின்றவர்கள் பயன்படுத்து கின்ற வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன அரசுடமையாக்கப்படும். அத்துடன் இதற்கான தண்டனை காலம் மற்றும் அபராதங்கள் என்பன அதிகரிக்கப்படும்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மட்டக் களப்பு போன்ற பகுதிகளில் தற்போது அதிக அளவில் புதையல் தோண்டும் நடவடிக்கைகள் அதிகமாகக் காணப்பட்டன. வெளியில் தெரிந்து நடைபெறுபவை தவிர, தெரியாமல் நடை பெறுபவை அதிகம் என்பதே அனைவராலும் அறியப்பட்டது.

கிழக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தின் காட்டுப் பகுதிகளே விடுதலைப்புலிகளால் பெருமளவில் பாவிக்கப்பட்டவை, அதே போன்று வடக்கில் முல்லைத்தீவு மாவட்டம் பாவிக்கப்பட்டது. அங்கு அவர்களால் பதுக்கி வைக்கப்பட்ட பெருந்தொகை நகைகள் பணம், எனப் பெருந்தொகைச் சொத்துக்கள் அரசாங்கம் உட்பட இராணுவத்தினராலும் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெருமளவானவை தெரியாமலேயே கொண்டு செல்லப்பட்டுவிட்டன என்பது தகவல்.

இந்த நிலையில், தற்போது கிடைத்து விட்டவை தவிரவும் கிடைக்கத் தவறிய அல்லது இதுவரை கண்டுபிடிக்கப்படாத பொருள்களை வெளியே எடுக்கும் முயற்சிகள் தெரியாமல் தொடர்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் சுமார் 75 வீதமான நிலப் பரப்புக்கள் காடுகளும் காடுகள் சார்ந்தது மாகவே இருந்துவருகின்றன. என்றவகையில், இப்பிரதேசங்களில் இருக்கும் புதையல் எனப்படுகின்ற மறைத்துப் பதுக்கிவைக்கப்பட்ட பொருள்களை வெளியே எடுக்கும் முயற்சிகளே இன்னமும் நடைபெற்றுவருகின்றன.

கடந்த காலத்தில் எமது மன்னர்களும், முன்னோர்களும் புதைத்து வைத்தவைகளையே புதையல் என்று சொல்லிக்கொள்கிறோம். முகாம்களிலும் இருப்பிடங்களிலும் மறைத்து வைத்தவற்றை இப்போது புதையல் என்று சொல்கிறோம். காடுகள், மலைகள், ஆறுகள், குளங்கள், எனத்தொடரும் புதையல்தோண்டும் முயற்சிகளுக்கு எப்போதுதான் முடிவுக்குவரும் என்ற ஏக்கம் மக்கள் மத்தியிலேயே ஏற்பட்டிருக்கிறது.

---




# தலைவா
## சிறப்புத் திரை விமர்சனம்

**பம்பாய்** தாராவி பகுதியில் வசித்து வருகின்ற தமிழர்களைக் காக்கும் தலையாய கடமையை அண்ணா(சத்தியராஜ்) எடுத்துக்கொள்கிறார். அவர் மகன் விஜய் ஆஸ்திரேலியாவில் பத்திரமாக வளர்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் விஜய் இந்தியா வர, சத்தியராஜ் கொல்லப்படுகிறார். தமிழர்களைக் காக்கும் கடமையை விஜய் ஏற்றுக் கொண்டாரா? கடமையில் ஜெயித்தாரா? 'தலைவா' ஆனாரா என்பதே கதை.

படத்தின் முதல் பாதி முழுக்க ஆஸ்திரேலியாவில் ஜாலியாக நகர்கிறது. விஜய் நண்பர்களுடன் 'தமிழ் பசங்க' எனும் டான்ஸ் க்ரூப் வைத்திருப்பதும், கூடவே சந்தானம் இருப்பதும், அமலா பாலை சந்தானமும் லவ் பண்ணுவதுமாக ஓரளவு ஸ்மூத்தாகவே படம்போகிறது. அதிலும் கௌரவ வேடத்தில் வரும் சாம் ஆண்டர்சனின் போர்சன் கலக்கல். இந்தியாவில் சத்யராஜை வில்லன்கள் கொல்ல, அமலா பால் பற்றிய அதிரடி திருப்பத்துடன் வருகிறது இடைவேளை!

பிரச்சினை இரண்டாம் பாதியில் தான். சத்யராஜைக் கொன்று, மக்களையும் இம்சை பண்ணும் வில்லனை பழிவாங்குவதுடன் அவனிடம் இருந்து மக்களையும் பாதுகாக்கும் நோக்குடன் தாதாவாகவே மாறுகிறார் விஜய்.

பின்னர், முஸ்லிம்களின் பிரச்சினையை தீர்க்கிறார். கிறிஸ்துவர்களின் பிரச்சினையைத் தீர்க்கிறார். ரவுடிகளை ஒழிக்கிறார். சட்டத்தால் தண்டிக்கப்பட முடியாத குற்றவாளிகளை தீர்த்துக்கட்டுகிறார். குழந்தைகளை காக்கிறார். பாட்டிக்கு உதவுகிறார். மொத்தத்தில் தேவர்மகன், பில்லா, நாயகன் என்று பல படங்களின் நினைவுகள் மனங்களில் மலருவதை தடுக்க முடியவில்லை.

படம் முழுக்க தமிழ்நாட்டுக்கு வெளியே தான் நடக்கிறது. தமிழக அரசியல், அரசியல்வாதிகள் பற்றி எவ்வித விமர்சனமும் படத்தில் இல்லை. அப்படி எதையும் எதிர்பார்த்து, ஏமாறவேண்டாம்!

முதல் பாதியில் டான்ஸில் கலக்குகிறார் விஜய். அமலாபாலுடன் தனியே ஆடும் காட்சி அருமை. சண்டைக் காட்சியிலும் நல்ல சுறுசுறுப்பு. சத்யராஜ் இறக்கும் காட்சியில் கொடுத்த எக்ஸ்பிரசன் கூட நல்லாயிருந்தது.

ஆனால், அரசியல் - பில்டப் ஆசைகளை எல்லாம் விட்டுட்டு, காவலன், நண்பன், துப்பாக்கி மாதிரி நல்ல கமர்சியல் படங்களைக் தேர்வுசெய்தால் நல்லது. இல்லையேல் எதிர்காலம்?!

அமலா பாலுக்கு படத்தில் கதாநாயகியாக பெரிதாக வேலை இல்லை. ஆனாலும் கதையோடு கூடிய ஒரு கதா பாத்திரம் என்ற மட்டில் ஆறுதல்!

வழக்கம்போல் நம்மை ரிலாக்ஸ் பண்ணுவது சந்தானத்தின் நகைச்சுவை தான். சரளமாக அடித்து விளையாடுகிறார். ஹீரோயின் இவரை லவ் பண்ணுவதாக நினைத்துக்கொண்டு, இவர் ∴பீல் பண்ணுவது வழக்கமான விஷயம்தான் என்றாலும், ரசிக்கமுடிகிறது.

மூணு மணிநேரம் படத்தின் நீளம்...! மும்பையில் எல்லாருமே சரளமாக தமிழ்பேசுவது ரசிகர்களின் வாய்க்குள் சிரிப்பை உண்டுபண்ணுகின்றது. ரசிகர்களின் ரசனை பலமடங்கு மாறிவிட்ட நிலையில், இன்னும் எம்.ஜி.ஆர் ஸ்டைலில் காட்சிகள் வைத்திருப்பது வெறுப்பேற்றுகிறது.

வழக்கமாக எந்த கேரக்டர் கொடுத்தாலும் பின்னி எடுக்கும் சத்தியராஜ், இதில் சப்பென்று வந்து போகிறார். அறிஞர் அண்ணாவின் பெயரை மறைமுகமாக சத்தியராஜுக்கு வைத்திருக்கிறார்கள். மக்கள் அவரை அண்ணா.. என்று அழைப்பதால், அவர் அண்ணாவாம். விஜய் அண்ணாவின் வாரிசாம். இவ்வாறு பல குறைபர்டுகள், முகஞ்சுழிப்புக்கள் தலைவாவில் தாராளமாக இருக்கின்றது.

இருப்பினும் மேலே குறிப்பிட்ட விஜய்யின் தனித்துவமான திறமைகளுடன் நீரவ் ஷாவின் அழகான ஒளிப்பதிவு ஜிவியின் இசை, பாடல்க்ள் என் ரசிக்கும் படியான சில விசயங்களும் தலை வாவில் தலை காட்டியிருக்கிறது.

முருகதாஸ் - விஜய் கூட்டணியில் உருவான துப்பாகி கொடுத்த உற்சாகத்துடன் படத்தை பார்க்கும் ரசிகர்களுக்கு 'தலைவா' நிச்சயமாக ஏமாற்றத்தை கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# இந்தியா - அமெரிக்கா - சீனா ஒரு முக்கோண உறவு

தொகுப்பு வேணுகிருஷ்ணா



**இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசுகள், தமக்குள் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தாவிட்டால், ஒத்துழைப்பும் சமாதானமும் நிலவும் இந்து சமுத்திரப் பிராந்தியம், மோதல்களும் பிரச்சினைகளும் நிறைந்த கடற்பிராந்தியமாக மாறும் என்பதாகும். அமெரிக்கா எத்தகைய அத்துமீறலுடன் எங்கே தலையீடு செய்தாலும் அது ஈட்டும் இலாபத்தில் ஒரு பகுதி சர்வதேச பொருளாதார-வர்த்தகச் சுற்றோட்டத்தில் இந்தியாவையும் சீனாவையும் சென்றடையும். இதன் அடிப்படைகளை நன்கு புரிந்துகொண்டே இம்மூன்று நாடுகளின் நிபுணர்கள் வகுக்கும் வர்த்தக-பொருளாதார கொள்கைகளும் இராஜதந்திர அணுகுமுறைகளும் அமைகின்றன. இதுதான் சாதாரண சனத்தொகைக்கு மட்டுமல்ல பெரும் ஊடகர்களுக்கும் புரியாத மர்மத் துயரம். வெறும் இராணுவவாத ஆய்வாளர்கள் கூறும் "உண்மைகள் கலந்த பொய்கள்" இவற்றை வெளிப்படுத்துவதில்லை.**

## வல்லரசுகளைப் புரிதல்

உலகின் முக்கிய இருசக்திகளான அமெரிக்காவும், சீனாவும் தமக்கிடையிலான உறவை புதிதாக வரையறுப்பதற்கான முக்கிய இரு நாள் மாநாடு ஒன்றை கலிபோர்னியாவில் ஜுன் 2013 இல் நடத்தின.

இந்த மாநாட்டின் ஆரம்பத்தில் பேசிய அதிபர் ஒபாமா அவர்கள் இரு நாடுகளின் விதியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை என்று கூறியுள்ளார்.

அதேவேளை, அங்கு பேசிய சீன அதிபர் ஷி சின்பிங் அவர்கள், புதிய வகையிலான உறவு ஒன்றை உருவாக்குவதற்காக உத்வேகத்துடன் உழைக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்த கருத்துக்கள் வெறும் வாய்ஜாலம் அல்ல என்பதற்கு அப்பால், இரு நாடுகளுக்கும் இடையிலான சிக்கல்களுக்கு ஊடான உறவு என்பது உலகுக்கு மிகவும் முக்கியமானது என்பதை இரு தலைவர்களும் உணர்ந்தே இருக்கிறார்கள் என்று அந்த மாநாட்டில் இருந்த பி.பி.சி.யின் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

சீனா - அமெரிக்கா இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை புதுமுகப்படுத்திக் கொள்ளும் விதத்தில் இப்பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது. பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தினால் தொடரும் பதற்றம், வடகொரியாவின் அணுவாயுத இலக்குகள், சீனா - அமெரிக்கா நாடுகளில் தொடரும் சைபர் யுத்தம் தொடர்பில் இப்பேச்சுவார்த்தை அமைந்துள்ளது.

## அமெரிக்க அரசியலையும் டொலரையும் புரிதல்

உலக அரசியலை புரிந்துகொள்ள வேண்டுமென்றால் அமெரிக்காவின் அரசியலை புரிந்துகொண்டாக வேண்டும், அதே போன்று அமெரிக்கா டொலரை நாம் புரிந்துகொண்டால் உலக பொருளாதாரத்தை புரிந்துகொண்டது போல் ஆகும். அந்த அளவிற்கு டொலரின் தாக்கம் உலகப் பொருளாதார வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் அதிக பங்குகொண்டதாக இருக்கிறது. அமெரிக்க அரசியல் இரண்டுவிதமான அரசியல் பரிமாணங்களைக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது. ஒன்று உலக பொருளாதாரத்தின் அடிப்படை அம்சமான பெற்றோல், இன்னொன்று உலகத்தின் பல பாகங்களில் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களின் மனதை ஊடுருவிக் கொண்டிருக்கும் குர்ஆனின் கொள்கைகள். இரண்டிற்குமே அதாவது, "மனம் மற்றும் பணம்" என்ற வாழ்வின் இரண்டு அதிமுக்கிய தேவைகளுக்கு அடிப்படை காரணியாக இருப்பது இந்த மத்திய ஆசிய என்ற பாலைவன சமவெளிதான்.

இந்த இரண்டையும் வெல்லவேண்டும் என்ற பன்னெடுங்கால போராட்டத்தின் பின்னணியில் (பல்வேறு அரசியல் கூட்டணிகள் செயற்பட்டாலும், தற்போது) அமெரிக்காவின் 'neocon' அரசியல் கூட்டணியினர் செயற்படுத்தும் அரசியல்திட்டங்களையும், அதன் சாதக பாதகங்களும்தான் இன்றைக்கு முக்கியத்துவம் நிறைந்த அரசியல் போராட்டமாக இருக்கிறது. முதலில் பொருளாதார பொலிட்டிக்ஸை அதாவது பெற்றோல் பொலிட்டிக்ஸைப் பார்த்துவிட்டு பிறகு புத்தகப் பொலிட்டிக்ஸிற்கு (politics of ideology and mythology) போகலாம்.

அமெரிக்காவின் மிகப் பெரும் பிரச்சினை குறைந்து வரும் டொலரின் மதிப்பும், அதைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும்தான். வருடத்திற்கு 5 சதவிகிதமாக அதன் மதிப்பு மற்ற நாடுகளின் கரன்சிக்கு, குறிப்பாக யூரோவிற்கு எதிராக குறைந்துகொண்டிருப்பது கவனிக்கவேண்டிய மிக முக்கியமான ஒன்று. காரணம், மற்ற கரன்சிகளைப் போல் அமெரிக்கா டொலர், தங்கத்திற்கு எதிராக நிர்ணயிக்கப்பட்ட கரன்சி அல்ல. 1971ஆம் வருடத்திலிருந்து அமெரிக்கா டொலர் ஒரு 'floating currency' ஆக மாற்றப்பட்டது 'backing out on Bretton Wood Commitment'. அப்போது சுமார் 70 பில்லியன் டொலர் கடனாளியாக இருந்த அமெரிக்கா கையில் வைத்திருந்தது வெறும் 11 பில்லியன் பெருமானமுள்ள தங்கமே.

## அமெரிக்காவின் வல்லரசு அந்தஸ்து

இன்றைக்கு அமெரிக்காவின் வல்லரசு அந்தஸ்திற்கு மற்றுமொரு காரணம் உலகச் சந்தையில் செய்யப்படும் வர்த்தக பரிமாற்றங்கள், மற்றும் ஒரு நாடு, இன்னொரு நாட்டிற்கிடையில் நடைபெறும் வர்த்தக மாற்றங்கள் யாவும் டொலரை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவதே. பெரும்பாலும் உலகளாவிய இந்த வர்த்தக அமைப்பு டொலருக்கு பெரும் மதிப்பு அளிப்பதோடு அதன் பலவீனத்தை மறைப்பதற்கும் உதவுகிறது.

எந்த நாட்டினுடைய பொருளாதாரமும் அந்த நாட்டின் பலம் மற்றும் பலவீனத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கணிக்கப்படும். அதேநேரம் அந்த நாட்டினுடைய கரன்சியின் மதிப்பு அந்நாட்டின் அடிப்படை பொருளாதார அமைப்பின் திறனை வெளிப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். இதுதான் பொதுவான கரன்சி மற்றும் பொருளாதார அடிப்படை விதிமுறைகள்.

அமெரிக்காவின் டொலரை கவனித்தால் அது அதனுடைய சரியான மதிப்பைவிட அதிகமான 'மதிப்பு கொண்டிருப்பது தெரியவரும். இந்த 'over valued' அமெரிக்கா டொலரின் மதிப்புதான் தற்போது அமெரிக்காவின் மிகப் பெரும் பலமும் மற்றும் பலவீனமும். இது மற்ற நாடுகளில் இருக்கக்கூடிய பொருளாதார சிரமங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பிரச்சினை.

அமெரிக்கா தான் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவைவிட சுமார் 50% அதிகமாக இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது. கடந்த ஆண்டுவரை வருடத்திற்கு சுமார் 500 பில்லியன் டொலர் பற்றாக்குறையில் இருந்து கொண்டிருக்கக் கூடிய அமெரிக்காவின் பட்ஜெட் மொத்தமாக கடந்து 25 வருட கால பட்ஜெட்டை கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட ஆறிலிருந்து ஏழு டிரில்லியன் டொலர்கள் கடனாளியாக இருந்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஒரு நாளைக்கு 1.25 பில்லியன் டொலர் கணக்கில் இது அதிகமாகிக் கொண்டிருப்பது அமெரிக்காவின் மிகப்பெரும் கவலைகளில் ஒன்று.

இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் அமெரிக்கா டொலர்கள் இன்னும் ஒரு சக்திவாய்ந்த கரன்சியாக காட்சி அளிப்பதற்கு காரணம் மேலே சொன்னதுபோல் உலக வர்த்தக பரிமாற்றங்கள் அமெரிக்க டொலரின் மூலமாக நடைபெறுவதே.

## அமெரிக்காவின் டொலரை அச்சகங்கள் கவனித்துக் கொள்ளும்

உலகில் நடைபெறும் அந்நிய செலவாணி மாற்றங்களில் சுமார் 80 சதவிகிதம் டொலரின் மூலமாகத்தான் நடைபெறுகிறது. சர்வதேச வர்த்தகங்கள் செய்வதற்கு வசதியாக ஒவ்வொரு நாடும் அமெரிக்கா டொலரைத்தான் கையிருப்பாக வைத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம். இதன் காரணமாக உலக நாடுகளின் மொத்த டொலர் கையிருப்பு சுமார் 68 சதவிகிதமாக அந்தந்த நாடுகளின் மத்திய வங்கிகளில் குவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமா? ஐ.ஆ.கு. இன் கடன் வசதிகள், கொடுக்கல் - வாங்கல்கள் எல்லாம் டொலரின் மூலமாகத்தான் நடைபெறவேண்டும். ஐ.ஆ.கு. இல் அமெரிக்காவின் பங்கு 51 சதவிகிதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைவிட இன்னுமொரு முக்கியமான வர்த்தக பரிமாற்றம், அதாவது ஒபெக் நாடுகளின் மற்றும் அதை சாரத எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் அனைத்தும் டொலரில்தான் வியாபரம் செய்கின்றன்.

இப்படி உலக நாடுகளின் வர்த்தகங்கள் அனைத்தும் டொலர் மூலமாக நடைபெறுவதால் அந்தந்த நாடுகளின் மத்திய வங்கிகள் தனது டொலர் கையிருப்பைப் பற்றி கவலைப்படுவது அன்றாட வழக்கமாகிவிட்டது. இதன்காரணமாக அவ்வப்போது பொது சந்தையிலிருந்து டொலரை வாங்குவதும் விற்பதும் இந்த மத்திய வங்கிகளின் வழக்கமான தொழிலாகும். ஏனென்றால் உலக நாடுகள் அனைத்தும் தனது கரன்சியின் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் இன்னும் தனது கரன்சி over value ஆகிவிடக்கூடாது என்ற அவசியமும்தான். இப்படி உலக நாடுகள் எல்லாம் தனது கரன்சியைக் காப்பற்றிக் கொள்ள போராடும்போது அமெரிக்கா மட்டும் டொலர்களை அச்சடித்து உலக நாடுகளின் மத்திய வங்கிகளில் சலவை காயாமல் உறங்க வைத்துவிட்டு கொண்டாட்டமடித்துக் கொண்டிருக்கிறது. இந்த சிறப்புத் தகுதி அமெரிக்காவிற்கு மட்டுமே இருப்பதால் அமெரிக்கா டொலர்கள் over valued கவும், இன்னுழ் அடிப்படை பலவீனங்கள் பலவும் இருந்தாலும் இன்னும் பலம்நிறைந்த கரன்சியாகவும், பொருளாதார சூப்பர் பவராகவும் வலம் வந்துக் கொண்டிருக்கிறது.

உலகப் பொருளாதாரத்தை நிர்வகிக்கவும் மற்றும் நடத்திச்செல்லவும் கூடிய ஒரு முக்கியமான தலைமையிடத்தை அமெரிக்கா தக்க வைத்துக்கொள்ள அது எடுத்துக் கொண்ட அரசியல் மற்றும் பொருளாதாரத் கொள்கைகளும் மற்றும் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக நடந்த கடினமான முயற்சிகளின் வெளிப்பாடுதான் இன்றைய அதன் உயர்விற்கு காரணமாக அமைந்தது.

## மத்திய கிழக்குப் போரில் அமெரிக்க முதலீடு

போர் என்றால் முதலில் பாதிக்கக் கூடியது பொருளாதாரம். ஆனால், போரை ஒரு சிறந்த முதலீடாக வைத்து பொருளாதார வெற்றிகாண நினைப்பதில் அமெரிக்காவிற்கு நிகர் அமெரிக்காதான். எத்தனையோ நாடுகள் போரில் தனது பொருளாதாரத்தை இழந்ததோடு மட்டுமல்லாமல் இன்னும் ஏழையாகவே இருந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் இந்த 'gambling' மத்தியக் கிழக்கு நாடுகளைப் பொறுத்தவரை கொஞ்சம் சுலபமான விஷயம்தான். காரணம் போர் செய்யப்போவது ஒன்றும் சீனாவோ அல்லது ரஷ்யாவிற்கு எதிராகவோ அல்ல, இன்னும் சொல்லப்போனால் வடகொரியாவிற்கு எதிராகக்கூட அமெரிக்கா தற்போது ஆயுதத்தை கையில் எடுக்காது.

போர் என்றால் அதிலிருந்து வெற்றி பெறும் நாட்டிற்கு ஏதேனும் பிரயோசனம் இருக்கவேண்டும், இல்லையென்றால் அது முட்டாள்தனமான முடிவு மட்டுமல்லாமல் உள்ளதையும் இழக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அமெரிக்கா ஒன்றும் முட்டாள்தனமாக முடிவு எடுக்கும் நாடு அல்ல, எனவே போருக்கு முன்னால் அதன்மூலம் கிடைக்கும் பொருளாதார அரசியல் இலாபங்களை நன்றாக கணக்கிட்டுத்தான் போருக்கான முடிவை எடுத்தது.

அதிலும் போர் செய்யப்போவது தன்னால் ஒரு காலத்தில் உருவாக்கப்பட்ட உருப்படாத ஆட்சியாளர்களும், ஆமாம் சாமி போட்ட கிரிமினல் இராணுவத் தலைவர்கள் ஆட்சிசெய்யும் நாடுகளுக்கு எதிராகத்தான். ஆப்கானிஸ்தான் போர் ஒரு போரே அல்ல. இரட்டை கோபுரத்தின் வீழ்ச்சியால் எழுந்த கௌரவப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வலுவிழந்த நாட்டை இழுத்துப் போட்டு உதைத்த கதைதான். அதுமட்டுமல்லாமல் தன்னிடத்தில் உள்ள அனைத்துவித ஆயுதங்களையும் சோதித்துப் பார்க்கவும் அது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.
ஈராக் யுத்தம் அமெரிக்காவிற்கு அனைத்து வகையிலும் வலுச்சேர்க்கக் கூடிய போர் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஈராக் யுத்தம் அமெரிக்காவை பொறுத்தவரை ஒரு நல்ல முதலீடும்கூட. அதன் இலாபத்தில் ஒரு பகுதி சர்வதேச பொருளாதார - 'வர்த்தகச் சுற்றோட்டத்தில் இந்தியாவையும் சீனாவையும் சென்றடையும். இதுதான் சாதாரண சனத்தொகைக்கு மட்டுமல்ல பெரும் ஊடகர்களுக்கும் புரியாத மர்மத் துயரம். வெறும் இராணுவாத ஆய்வாளர்கள் கூறும் "பொய் கலந்த உண்மைகள்" இவற்றை வெளிப்படுத்துவதில்லை.

ஒரே கல்லில் மூன்று மாங்காய் அடிக்க அமெரிக்கா தயாரானது. உலகிற்கு வேண்டுமானால் ஈராக் யுத்தம் ஒரு தெளிவில்லாத WMD கதையாக இருக்கலாம், ஆனால் அமெரிக்கா தான் எழுதிய 'script' படித்தான் இந்த யுத்தத்தை நடத்தியிருக்கிறது. அதனால்தான் ஜோர்ஜ் புஷ்ஷிடம் டோனி பிளேயரும் தலையில் அடிக்காத குறையாக தன்னாட்டு மக்களிடம் நேரடியாக விளக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். தங்களது இந்த முடிவால் இரு நாடுகளுக்கும் விளையக்கூடிய நன்மைகளுக்கு காலம் பதில்சொல்லும் என்றெல்லாம் அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்கள். (அந்த வகையில் அமெரிக்கர்கள் பொதுவாக போரை எதிர்த்தாலும் பிறரை அடக்கியாள வேண்டுமென்ற குணாதிசயம் அவர்களை ஜோர்ஜ் புஷ்ஷின் இரண்டாவது வெற்றிக்கு வாக்குப்போட வைத்தது).

இப்போரின் முடிவில் அமெரிக்கா எதிர்பார்க்கும் மூன்று முக்கிய விளைவுகள்:


அ) ஐ.நா. சபையையும், ஐரோப்பிய நாடுகளையும் அரசியல்ரீதியாக வலுவிழக்க செய்வது.

ஆ) சரிந்துவரும் தனது டொலரை பெற்றோ டொலரின்மூலம் தூக்கிநிறுத்துவது.

இ) இஸ்ரேலை மத்தியக் கிழக்கு நாடுகளின் பொலிசாக உயர்த்தி அரபு நாடுகளை இஸ்ரேலின் பிடிக்குள் (ஆதிக்கத்தின்) கீழ் கொண்டுவருவது.

இந்த மூன்றுக்கும் சரியான காரணத்தைக் காட்டி உலக ஊடகங்களில் அதை பெரிதுபடுத்தி சாமானிய மக்களின் சிந்தனைகளை முடிந்தவரை குழப்பி அதன்மூலம் அவர்களது கருத்துக்களை தனக்கு ஆதரவாக திரட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது. அமெரிக்கா எப்போதுமே தான் விரும்பக்கூடிய முடிவை முதலில் ஊடகங்களில் விவாதிக்க வைத்து அதன்வாயிலாக மக்களின் ஆதரவை திரட்டுவது வழக்கம். ஆள்பவர்களின் கருத்துக்களை பொது மக்களிடத்தில் விற்பதற்குத்தானே இந்த

# முதலிடத்தில் குரோம் உலாவி





தற்போதைய நிலையில் மக்களால் விரும்பி பார்க்கப்படும் உலாவிகளில் முதலிடம் பிடித்துள்ளது. குரோம் உலாவி. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் குரோம் உலாவி அறிமுகமான காலகட்டத்தில், இன்ரநெட் எக்ஸ்புளோரர் தான் முதலிடத்தில் இருந்தது.

ஆனால் அறிமுகமானதில் இருந்தே குரோம் உலாவியின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. இதனை தொடர்ந்து பல்வேறு வசதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்நிலையில் சமீபத்தில் இணைய செயற்பாடுகளை கண்காணித்துவரும் நிறுவனம் ஒன்று, குரோம் உலாவி தற்போது முதலிடத்தைப் பிடித்துள்ளதாக அறிவித்துள்ளது. ஜூன் மாதம் இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி, குரோம் உலகாளவிய அளவில், 43 சதவிகித இணையப் பயனாளர்களை வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ளது. ஆனால், இன்ரநெட் எக்ஸ்புளோரர் 25 சதவிகித வாடிக்கையாளர்களையே தன்னிடத்தில் வைத்துள்ளது.

பயர்பொக்ஸ் ஏறத்தாழ 20 சதவிகிதம் பேருக்கே சேவை செய்துவருகிறது. அடுத்த நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் சபாரி மற்றும் ஒப்பரா(opera) உலாவிகள்.



சர்வதேச விண்வெளி நிலையத்தை இரவுப்பொழுதில் நாம் இருந்த இடத்தில் இருந்து வெறுங் கண்ணால் இனிமேல் பார்க்க நாசா குறுஞ்செய்தி (SMS) சேவை ஒன்றை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

பூமி மற்றும் பிரபஞ்சம் ஆகியவற்றை விண்வெளி வீரர்கள் விண்ணில் தங்கியிருந்து ஆய்வு செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டது. International Space Station (ISS). அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளின் கூட்டுத் தயாரிப்பில் உருவான இந்நிலையத்துக்கு விண்வெளி வீரர்கள், ஆய்வுக்கருவிகள், உணவு

# நாசாவின் புதிய முயற்சி...

கள் ஆகியவற்றை அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் விண் ஓடங்கள் அவ்வப்போது விண்ணுக்குச் சுமந்து சென்று வருகின்றன.

தற்போது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கணையான சுனிதா வில்லியம்ஸ் ISS ஐ இயக்கிவருகின்றார். இந்த ISS செயற்கைக் கோளை இரவு வானில் தொலைகாட்டி இன்றி எவரும் வெறுங்கண்ணால் ஒரு நட்சத்திரம் விண்ணில் குறுக்கே மிகவேகமாக செல்வது போல் அவதானிக்கலாம். ஒவ்வொருவரும் தமது இடத்திற்கு மேலாக எத்திசையில் சரியாக எத்தனை மணிக்கு இது வானில் செல்லும் என்பதை அறிவதற்கு நாசா சமீபத்தில் அறிமுகப்படுத்திய புதிய SMS சேவைக்கு, அதாவது நாசாவின் இணையத் தளமான spotthestation.nasa.gov இல் தமது பெயர், மொபைல் நம்பர் மற்றும் முகவரியை இவர்கள் பதிவுசெய்தால் போதும். ISS தென்படும் நேரம் மற்றும் இடம் SMS மூலம் தெரிவிக்கப்படும்.

வானியலில் ஆர்வமுடையவர் எவரும் ISS ஐ வெறுங் கண்ணால் பார்ப்பதற்கு இதன் மூலம் உடனடியாக முயற்சி செய்ய முடியும்.

தொழில்நுட்பம்



# சாரதியற்ற காருக்கான முயற்சியில் கூகுள்

இணையத்தின் வல்லரசாக விளங்கும் கூகுளின் திட்டங்கள் ஒவ்வொன்றும் காலத்தின் தேவையை உணர்த்துவதாகவும் எதிர்காலத்தினை இன்றே அனுபவிப்பதாகவும் அமையும். அந்த வரிசையில் சாரதியற்ற ரொபடிக் காரினை உருவாக்கும் திட்டத்தினை கடந்த 2005ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்துவருகின்றது.

இந்த திட்டத்துக்கு ஒத்துழைக்கும் வகையில் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று சாரதியற்ற ரொபட்டிக் கார் சோதனைகளுக்கு அமெரிக்காவின் நிவேடா மாநிலம் அனுமதி அளித்தது. இதனைத் தொடர்ந்து சாரதியற்ற காரின் ஓட்டம் மெல்ல மெல்ல வேகமெடுக்க ஆரம்பித்தது. இதன் வளர்ச்சியாக அண்மையில் அமெரிக்காவின் சான் பிரான்ஸிஸ்கோவில் பரீட்சார்த்தமாக கூகுளின் சாரதியற்ற கார் ஓடிச்சென்று தரிப்பிடத்திற்கு தானாக சென்றுள்ளது.

இருப்பினும் சாரதிகளற்ற கார் எனும் திட்டத்தினை கூகுள் நிறுவனம் மட்டுமே முன்னெடுக்கவில்லை. ஏற்கெனவே ஏ.எம்.டபிள்யூ, ஓடி, மெர்ஸிடெஸ் போன்ற கார் நிறுவனங்களும் சாரதியற்ற ரோபோட்டிக் கார்களை வடிவமைப்பதில் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது.

இணையத்துடன் கார்களை இணைத்து சாரதியற்ற தன்னியக்க கார்களை உருவாக்க எண்ணியிருப்பதாக ஓடி மற்றும் டொயோட்டோ நிறுவனங்கள் இவ்வருட ஆரம்பத்தில் கருத்து தெரிவித்திருந்தது.

இதன்மூலம் வாகனங்களை செலுத்தும்போதே வாகன ஓட்டுனரின் ஒலிக்கேற்ப இயங்கும் இணைய வசதியினையும் இக்காரில் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் பாதைகளுக்கான வழிகாட்டி, பார்கிங் வழிகாட்டி, ரெஸ்டூரன்ட் விமர்சனங்கள், சமூக வலைத்தளங்கள் என இணைய வசதியினை வாகனம் செலுத்தும்போதே தொடுகைகள் எதுவுமின்றி குரல் கட்டளையில் இயக்கும் வண்ணம் அனுபவிக்கலாம்.

இந்த இணைய வசதியுடைய கார்களை அடுத்த ஆண்டிலேயே வெற்றிகரமாக உருவாக்கிவிடலாம் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆனால் சாரதியற்ற ரொபோடிக் கார் எப்போது மோட்டார் நிறுவனங்களுக்கு சாத்தியப்படும் எனத் தெரியவில்லை. இருப்பினும் சாரதியற்ற ரொபோடிக் கார்களை 2017ஆம் ஆண்டளவில் சந்தைப்படுத்த முடியும் என கூகுள் நிறுவனம் எதிர்பார்த்துள்ளதாக கூறப்படுகின்றது.

அண்மைக்காலமாகவே விஞ்ஞானக் கற்பனைக் கதைகள் பல நிஜமாகி வருகையில் சாத்தியமிக்க கூகுளின் சாரதியற்ற ரொபோடிக் காரும் விரைவில் சாத்தியமாகும். அதில் நாமும் ஏறிப் பயணம் செய்யப்போகும் நாளும் நெருங்கிக்கொண்டே இருக்கிறது. எனவே சாரதிகளின் உதவியின்றி விரைவில் எம்மை ஏற்றிச்செல்லவுள்ள கார்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்போம்.


தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

தினமுரசு

நாளிதழ்

ரூ.10/=
மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும்
புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள்
விடைகளுடன் தினமும்
வெளியாகின்றன!



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.



# உயரிய நட்பு

ஒரு பணக்காரனுக்கு ஏழை நண்பன் ஒருவன் இருந்தான். ஒருசமயம் பணக்கார நண்பனுக்கு கொஞ்சம் பணத்தட்டு பாடு நிலவியது. அந்நேரம் அங்கு வந்த ஏழை நண்பன் அவன் எரிச்சலும், கவலையோடும் இருக்கும் தன் நண்பனை பார்த்து "எப்பிடிடா இருக்கே?" என்று வழக்கம் போல கேட்டான். "சும்மா இரு, எனக்கு உடனே இருபது இலட்சம் ரூபாய் தேவை. உன்னால் முடியுமா?" என்று கோபமாக கேட்டு விட்டு தன் அறைக்குள் சென்றான்.

அவன் பின்னால் சென்ற ஏழை நண்பன் "அரை மணி நேரத்தில் பணம் கிடைத்தால் பரவாயில்லையா?" என்று ஏழை நண்பன் நிதானமாகக் கேட்டான். பணக்கார நண்பனுக்கு ஒரே அதிர்ச்சி. ஏழை நண்பனை ஏளனமாக பார்த்தான். அரை மணி நேரத்தில் பணம் வந்தது. பணக்கார நண்பனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பணத்தை குடுத்தவாறு ஏழை நண்பன் சொன்னான். "நீ எப்போ பார்த்தாலும் அதிகமா பணத்தைத்தான் சேர்த்தாய் நண்பா.. நல்ல நண்பர்களை சேர்க்க மறந்திட்டாய் நான் அவைகளை சம்பாதித்து கொண்டேன்டா" என்றான். இருவரும் ஆரத்தழுவி கட்டிக்கொண்டார்கள்.

இந்த உலகத்திலே எதை சேர்ப்பதை பார்க்கிலும் உண்மை பலமும், உயிருள்ள பலமும் கண்டிப்பாக நண்பர்களை சேர்ப்பதுதான்.

## தேசிய மலர்கள்

- பாகிஸ்தான் - மல்லிகை.
- ஆஸ்திரேலியா - கொன்றை மலர்கள்
- இத்தாலி - வெள்ளை லில்லி
- சீனா - திராட்சை மலர்.
- ஜப்பான் - செவ்வந்திப் பூ.
- இங்கிலாந்து - ரோஜா.
- எகிப்து - தாமரை.
- பிரான்ஸ் - லில்லி மலர்.
- வங்கதேசம் - வெள்ளை அல்லி.
- ரஷ்யா - வெள்ளை சாமந்தி.

(கனடா நாட்டிற்கு என்று தனியாக தேசிய மலர் இல்லை. மேப்பிள் இலையை, அரசச் சின்னமாகக் கொண்டுள்ளது.

## வாரம் ஒரு திருக்குறள்



அவை அறிதல்

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.

அவையின் தன்மை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர். அறிவில்லாதவர் முன் தாமும் வெண்சுண்ணம் போல் அறிவில்லாத வராய் இருக்கவேண்டும்.

குறள்:712

## எப்படி தூங்க வேண்டும்?



பூமிக்கு இரண்டு துருவங்கள் உண்டு. வடதுருவம் நேர் மின்னோட்டம் உடையது. தென் துருவம் எதிர்மின்னோட்டம் உடையது. இந்த மின்னோட்டம் வடக்கில் இருந்து தெற்கிற்கும், தெற்கில் இருந்து வடக்கிற்கும் செல்லும். அதேபோல் மனிதனின் தலை நேர் மின்னோட்டம் கொண்டது. கால் எதிர் மின்னோட்டம் கொண்டது.

நாம் தெற்கு பக்கம் தலைவைத்து, வடக்குப் பக்கம் கால்நீட்டி படுக்கும் போது, பூமியின் நேர் மின்னோட்டம் மனிதனின் எதிர் மின்னோட்டத்துடன் இருக்கும். காந்தத்தின் இயல்புப்படி மின்னோட்டம் சீராக இருக்கும்.

இதனால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். இதனை மாற்றி செய்யும் போது, நாம் பகல் முழுவதும் உட்கார்ந்து, நடந்து மற்றும் பல வேலைகள்செய்து சேர்த்து வைத்த சக்தி சீர்குலைந்துவிடும். எனவே தெற்கில் தலைவைத்து படுப்பது உத்தமம். அதனால் போலும் இறந்தவர்களுடைய பூதவுடலையும் தெற்கே தலைவைத்து படுக்க வைப்பார்கள்.

## மாடு அசை போடுவது ஏன்?



தற்போது வீடுகளில் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஆனால், மனித நாகரிகம் வளர்வதற்கு முன் காடுகளிலேயே அவை வாழ்ந்து வந்தன. பல்வேறு வகையான விலங்கினங்கள் வாழ்ந்துவந்த காட்டில், வலிமை குறைந்த விலங்கான மாடுகளுக்கு எதிரிகள் அதிகம் இருந்தன.

இதனால் அவை இரை உண்ணும் போது நன்கு மென்று தின்ன முடியாது.

எதிரி விலங்கு எப்போது தாக்க வருமோ 'என்ற பயத்துடன் அவசர அவசரமாக உணவை விழுங்கும். பின்னர் நேரம் கிடைக்கும்போது அந்த உணவை மறுபடியும் வாய்க்கு கொண்டுவந்து, நன்றாக மென்று தின்னும். இதற்காக இயற்கையிலேயே அவைகளுக்கு சிறப்பு இரைப்பை அமைப்பு உள்ளது.


மாடு மட்டுமின்றி ஆடு, ஒட்டகம், மான் போன்ற பாலூட்டிகளும் அசை போடும் தன்மையுடையன.

## கணக்குப் புதிர்

| | | | |
|---|---|---|---|
| 8 | 1 | 6 | = 15 |
| 3 | 5 | 7 | = 15 |
| 4 | 9 | 2 | = 15 |
| = 15 | = 15 | = 15 | |

1–முதல் 9–வரை உள்ள எண்களை வைத்து 9 கட்டங்களை நிரப்பி எப்படி கூட்டினாலும் கூட்டுத்தொகை 15 வரவேண்டும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 26.08.2013

வர்ணம் தீட்டும் போட்டி இல. 1005 தினமுரசு வாரமலர் த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1003

J.M.பாஹித், இல.393, வாசிகசாலை வீதி, ஏறாவூர் 1A.

பரிசுக்குரியவர்: 1003

பாராட்டுக்குரியவர்கள்

01. K. வானதி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
02. ச.கஜனி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
03. உ.டிலக்சனா, யா/ புனித. ஜோண்பொஸ்கோ, வித்தியாலயம்.
04. சா.மகிந்தன், தும்பளை, பருத்தித்துறை.
05. கா.மாதங்கி, ஜின்னாநகர், திருகோணமலை.
07. எஸ்.அபிநயா, பிரதான வீதி, மாத்தளை.
08. ஆர்.இஷானா, யாழ்ப்பாணம்..

## சோப்புநுரையின் வெண்மை

சோப்புநுரை என்பது நுண்ணிய சோப்புக் குமிழ்களின் கூட்டமே. சோப்புக் குமிழ் என்பதோ சிறு அளவு காற்றை உள்ளடக்கி அமைந்திருக்கும் சோப்புக் கரைசலின் மெல்லிய படலம். சோப்புக் கரைசலின் பரப்பு இழுவிசையின் காரணமாக, அதன் படலம் நீண்டு பரவிட முடிகிறது. எனவே ஒரு குறிப்பிட்ட கனவளவுள்ள நுரையினால் கவரப்படும் பரப்பு, அதே கனவளவுள்ள நீரினால் கவரப்படும் பரப்பைவிட மிகுதி எனலாம்.

சோப்பு நுரை இவ்வாறு பரவுவதன் காரணமாக அதில் ஏதேனும் சிறு அளவு வண்ணம் இருப்பினும் அது மங்கிப்போகிறது. மேலும் சோப்புப்படலம் ஒளி புகக்கூடியது. சோப்புக்குமிழ்களின் கூட்டமான நுரையை அடையும் ஒளி பல்வேறு திசைகளில் சிதறிப்பரவுவதால் நுரை வெண்மையாக மட்டுமே காட்சியளிக்கிறது. பல்வேறு நிறம்கொண்ட சோப்புகளின் நுரைக்கும்கூட இந்த தத்துவம் பொருந்தும்.

## புறாவின் தற்கொலை



புறா போன்ற சிறியப் பறவைகள் தங்களின் உயிரை தாங்களே மாய்த்துக்கொள்ள கற்களை உண்ணுவதாக விசித்திரமான முறையில் தற்கொலை செய்துகொள்ளும் விதம் பற்றி பறவை ஆராய்ச்சியாளர்கள் இப்படி தெரிவித்து இருக்கிறார்கள். உயர்ந்த மரக்கிளையில் வாழும் புறா போன்ற பறவைகள் தங்களின் வாழ்நாட்களின் இறுதிக்கட்டத்தில் உயரமான இடத்தில் தங்களின் இருப்பிடத்தை அமைத்து சிறு சிறு கற்களை சேமித்து வைத்துக்கொள்கின்றனவாம். இதற்கு காரணம் பறவைகளின் இளமை முடிந்து முதுமை ஏற்பட்டு, இனி தங்களால் பறந்து சென்று இரைதேட இயலாது என்ற நிலை வரும்பொழுது அந்தக் கற்களை ஒன்றன்பின் ஒன்றாக விழுங்கிவருகின்றன.

இறுதியில் இரைப்பையில் அதிக கற்கள் சேர்ந்து பாரம் அதிகமான நிலையில் தங்களின் இருப்பிடத்தில் இருந்தே பறக்க முயற்சி செய்யாமல் கீழே விழுந்து தற்கொலை செய்துகொள்வதாகவும் கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இது ஒரு சாதாரண நிகழ்ச்சிதான் என்றாலும், பறவையின் அடிப்படை இயற்பியல் அறிவினை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

## கண்ணாடியில் உண்டாகும் துளை

இயக்கத்தில் உள்ள எந்த பொருளிலும் ஓரளவு விசை இயக்க ஆற்றல் (kineticenergy) உள்ளது. இந்த துப்பாக்கியிலிருந்து வெளியேறுகின்ற குண்டு மணிக்குப் பலநூறு மைல் விரைவில் செல்வதால், அதன் உந்தம் மிகுதியாக இருக்கும். மேலும் அவ்வளவு விரைவில் செல்லும் குண்டு சுழன்றுகொண்டே செல்லும்.

அவ்வாறு பாய்ந்துசெல்லும் குண்டு கண்ணாடிக் கதவால் தடுக்கப்படும்போது, அதன் சிறு உந்தம் கண்ணாடிக்கு மாற்றப்பெறுவது உண்மையே.

அதேநேரத்தில் துப்பாக்கிக் குண்டு சுழன்ற வண்ணம் விரைந்துசெல்வதால் கண்ணாடிக் கதவில் துளையை உருவாக்கி அதன் வழியே வெளியேறிவிடுகிறது. மாறாகக் கதவை நோக்கி வீசியெறியப்பட்ட கல் குறைந்த வேகத்தில் செல்கிறது. அது கண்ணாடிப் பலகையைத் தொடும்போது அதன் முழு உந்தமும் கண்ணாடிக்கு மாற்றப்பெறுகிறது. இவ்வாறு கல்லில் பொதிந்திருந்த முழு ஆற்றலும் கண்ணாடிக்கு மாற்றமுறுவதோடு அதாவது கண்ணாடி மூலக்கூறுகள் வலிமை குன்றி பிணைக்கப்பட்டிருக்கும் பகுதிகளிலும் - பரவுகிறது. இதன் விளைவாகக் கல்லெறிபட்ட கண்ணாடிக் கதவுப்பகுதிகள் உடைந்து சிதறுகின்றன.


## தண்டவாளங்களின் இடைவெளி

வெப்பத்தால் பொருட்கள் விரிவடையும் என்பது விதி. ரயில் தண்டவாளங்களில் இரும்பு வெப்பத்தால் சூடேறும்போது இரும்பின் மூலக்கூறுகள் விரிவடைகிறது. இந்த விரிவை "விடப்பட்ட இடைவெளி" சரிசெய்து கொள்கிறது. இல்லையெனில் தண்டவாளம் உடையவோ பிறழவோ செய்யும். இதே போல்தான் சீமெந்தால் கட்டப்பட்ட பாலங்களிலும் சிறு இடைவெளிவிட்டு கட்டப்படுகிறது. இது அழுத்தத்தையும் சரிசெய்து கொள்கிறது. தொழில்சார்ந்த இயந்திரங்களில் பயன்படும் "பேரிங்" போன்றவைகளும் இதே தத்துவத்தால் தான் தயாரிக்கபடுகிறது.

தெர்மா மீட்டரும் இந்த 'வெப்பத்தால் உருப்பெருக்கம்' என்ற தத்துவத்தில்தான் செயற்படுகிறது. தெர்மா வெப்பம் என்று அர்த்தம்.

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

170



கரகோஷம் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்க மேடையின் முன்புறம் வந்தாள்.


மீண்டும் ஒருமுறை தன் இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி கூட்டத்தினரை நோக்கி அசைத்தாள்.

தன் தோளில் இருந்த றைபிளை எடுத்து தன் இருகைகளாலும் தலைக்கு மேல் உயர்த்தி

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு





காண்பித்தாள்.

"பூலான் தேவிக்கு ஜே!"

பூலான் தேவிக்கு ஜே!"

கூட்டம் கூவியது. சிறுவர் சிறுமிகள் துள்ளித் துள்ளி ஆரவாரம் செய்தனர்.

அதன்பின்னர் மேசையில் இருந்த மகாத்மா காந்தியின் படத்தை சில நொடிகள் கூர்ந்து பார்த்தாள்.

காந்தி பொக்குவாயால் சிரித்துக் கொண்டிருந்தார். தன்னைப் பார்த்துத்தான் அவர் சிரிப்பது போலிருந்தது பூலானுக்கு. மகாத்மா காந்தியின் படத்தின் முன்னால் தன் றைபிளை வைத்தாள் பூலான்தேவி.

"எந்தத் தனி மனிதரிடமும் எனது ஆயுதத்தை ஒப்படைக்க மாட்டேன். காந்தி படத்தின் முன்னால் தான் ஆயுதத்தை வைப்பேன்" என்பது பூலான் கூறிய முக்கிய நிபந்தனை. அந்த நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

"பூலான்தேவிக்கு ஜே!"

மக்கள் கூட்டம் உணர்ச்சிப் பெருக்கில் கோஷமிட்டது. பல பெண்கள் கண்ணீர்விட்டு அழுதனர். சிறுவர் சிறுமிகள்கூட தேம்பினார்கள்.

மேடையைவிட்டு இறங்கிய பூலானை பொலிஸார் பாதுகாப்பாக கவசமாகச் சூழ்ந்துகொண்டனர்.

பூலானை நெருங்கிவர மக்கள் முண்டியடித்தனர். பொலிஸார் தடுத்து அவர்களைப் பின்னால் தள்ளிக் கொண்டிருந்தனர்.

மேடைக்கு அருகே பொலிஸ் ஜீப் நின்று கொண்டிருந்தது. பொலிஸ் ஜீப் அருகே பத்திரிகை நிருபர்கள் குழுமியிருந்தனர்.

"சில கேள்விகள்தான், என்று சதுர்வேதியிடம் அனுமதி பெற்றுக் கொண்டனர்.

நிருபர்களின் கேள்விகள் பூலானை ஒரு கட்டத்தின் மேல் கோபப்படுத்தின. அந்தக் கோபத்தில் பூலான் சொன்ன பதில்களைக் கேட்டு சதுர்வேதிகூட ஆச்சரியப்பட்டுப் போனார்.

**கே:** உங்களுடைய குழுவுக்கு நீங்கள்தான் உண்மையான தலைவியா? ஒரு பெண்ணால் எப்படி இது சாத்தியம்?

**பூ:** ஏன், இந்த நாட்டை ஒரு பெண்ணே ஆட்சி செய்யவில்லையா? அவர்களிடமும் இக்கேள்வியைக் கேளுங்களேன்.

**கே:** உங்கள் முன்னாள் கணவன் புத்திலால் எங்கே?

**பூ:** அந்த இழிமகனை நான் கொல்லாமல் விட்டுவிட்டேனே என்றுதான் கவலைப்படுகிறேன்.

**கே:** ஒரு கொள்ளைக்காரியாக இருந்து எவ்வளவு பணம் சம்பாதித்தீர்கள்?

இக்கேள்வியைக் கேட்ட நிருபரை முறைத்துக்கொண்டே "அதைப்பற்றி நீர் ஏன் கவலைப்படுகிறீர்? பணக் கஷ்டமா?" என்றாள். நிருபர் வாயை மூடிக்கொண்டார்.

**கே:** உமது பாதுகாப்புக்கு இருந்த ஆண் யார்? என்று விஷமமாக கேள்வி ஒன்றை தொடுத்தார் நிருபர் ஒருவர்.

"ஏன் உன் அப்பன்தான்!" என்று பூலான் கொடுத்த பதிலால் அந்நிருபர் அரண்டு போனார்.

பொலிஸ் வண்டியில் மிக இலாவகமாக துள்ளி ஏறினாள் பூலான்தேவி.

பொலிஸ் வண்டியை வளைத்து இரும்புக் கம்பிவலை அடிக்கப்பட்டிருந்தது. நிருபர்களின் கேள்வியால் உஷ்ணமான பூலான் தன் உதடுகளை இறுக்கி ஆத்திரத்தை தணிக்க முயன்று கொண்டிருந்தாள்.

அதேநேரம் கமராக்கள் பல ஒரே நேரத்தில் அவள்மீது வெளிச்சங்களைப் பாய்ச்சின.

சலிப்படைந்த பூலான் "எடுங்கடா, எத்தனை படங்களை வேண்டுமானாலும் எடுங்கடா. என் படங்களை விற்று பணம் சம்பாதியுங்கடா!" என்று கத்தினாள்.

இனிமேலும் தாமதித்தால் பூலான் நிருபர்களை நோக்கிப் பாய்ந்தே விடுவாள். அவள் பாயாவிட்டாலும், கூடியிருக்கும் கூட்டத்திடம் கட்டளை யிட்டால் போதும், நிருபர்களை நார்நாராகக் கிழித்து தொங்கவைப் பார்கள் என்பதை உணர்ந்த சதுர்வேதி, வண்டியை விரைவாகக் கிளப்ப உத்தரவிட்டார்.

வாகனம் புறப்படத் தொடங்கியதும், பூலானைப் பிரியும் சோகத்தில் பலரும் புலம்பிய காட்சியும், வாகனதின் பின்னால் அழுதழுது ஓடிவந்த காட்சியும் பூலானை மெய்சிலிர்க்க வைத்தன. அவர்களை நோக்கி கையசைத்துக் கொண்டே இருந்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.

ஆனால், முதன்முதலில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டபோது "ஐயோ எனக்கு யாருமில்லையே...!" என்று நிராதரவாக, அப்பாவியாக சிந்திய கண்ணீருக்கும், இப்போது சிந்தும் கண்ணீருக்கும் இடையே வேறுபாடு இருந்தது.

இது ஆனந்தக் கண்ணீர்! தன்னை சின்னாபின்னமாக்கியவர்களை எதிர்த்துப் போராடி, பல்லாயிரம் மக்களால் வாழ்த்தப்படுமளவுக்கு மாறிவிட்டபின்னர், அந்த அன்பில் நெகிழ்ந்து சிந்தும் கண்ணீர்.

"பூலான்தேவிக்கு ஜே!"

அவள் காதில் அந்தக் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருந்தன.

**முற்றும்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, இந்த வாரம் தொடக்கம் (முரசு 1021 - கு.எ.போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 534

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 26.08.2013 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 534
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 532 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சா | 2 ம் | 3 ய | 4 தி | 5 த் | 6 அ |
| 7 க | 8 ச | 9 க | 10 சா | | 12 ண் |
| 13 ச | | | 16 பு | | 18 ணா |
| 19 ரி | 20 பு | 21 ப | 22 ப் | | 24 த் |
| 25 ய | 26 ம் | 27 வ | | 29 வா | 30 து |
| 31 ம் | 32 ல | 33 னி | 34 நா | | 36 ரை |

**இடமிருந்து வலம்**

01. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் தவறவிடக்கூடாதது.
09. அப்பு ; தீர்த்தம். (குழம்பியுள்ளது)
13. அடிதடி ; சச்சரவு. (குழம்பியுள்ளது)
21. நல்லவன். (குழம்பியுள்ளது)
25. சாத்வீகக் குணத்திலொன்று. (குழம்பியுள்ளது)
29. உக்கிரம். கோபம். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.
32. மீளும். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. ஆவியில் வேகும் இடியப்பம் முதலிய பணியார வகைகள் இப்படி அழைப்பர்.
03. பத்திலொன்று.
04. "இடையில் குடியேல், கடையில் மறவேல்" என்பது முன்னோர் வாக்கு. எதனைக் குறிக்கின்றது. (திரும்பியுள்ளது)
05. அக்கினிச் சுவாலை ; கொதிப்பு (குழம்பியுள்ளது)
06. ஒரு வாதநோய் (குழம்பியுள்ளது)
26. சுற்றம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 532 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**கே.ஜெயதாஸ், மந்துவில் மேற்கு, மந்துவில்.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. அ.யசிதரன், கனகரட்ணம் வீதி, யாழ்ப்பாணம்.
02. ந.இரவீந்திரன், மஞ்சத்தடி, இணுவில்.
03. சி.முருகானந்தன், தென்னக்கும்புர, கண்டி.
05. கா.ராணிமலர், நாவலர் வீதி, அரியாலை.
06. எம்.மானுஷா, கட்டுக்கெலியாவ, மிகிந்தலை.
07. தா.பரமேஸ்வரன், மலபார் வீதி, கம்பளை.
08. கு.சியாமினி, கல்விப்பாடு, முல்லைத்தீவு.
09. த.முருகேசு, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
10. ச.சுகன்யா, கைதடி மேற்கு, கைதடி.





# விஜய் அண்ணா ரசிகர்களே கவலைப்படாதீர்கள்...

இயக்குநர் விஜய் இயக்கத்தில், விஜய் நடித்து இன்று ரிலீசாக இருந்த 'த... படம் சில பல காரணங்களால் தமிழகத்தில் மட்டும் ரிலீசாகவில்லை. ஏற்கன... ஒன்லைனிலும் நேரடியாகவும் முன்பதிவு செய்திருந்த ரசிகர்களுக்கு இன்று த... ரிலீசாகவில்லை என்ற செய்தி மிகவும் சோகத்தைத் தந்துள்ளது.

ஆங்காங்கே சில இடங்களில் சில ரசிகர்கள் கோபத்தில் பிரச்சினை... செய்துவருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் பலர் வேறு... மாநிலங்களுக்குச் சென்று தலைவாவை காணத் தயாராகிவிட்டனர்.

இதனால் மனமுடைந்த விஜய் ரசிகர்களுக்கு சிம்பு ஆறுதல் கூறியுள்ளார். இது குறித்து ட்விட்டரில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களாவ... "விஜய் அண்ணா ரசிகர்களே, கவலைப்படாதீர்கள்... எப்போதும் மழை பொழிந்துகொண்டே இருக்காது. விரைவில் சூரியவெளிச்சம் உதயமாகும். அ... வரை அமைதியாகவும், பொறுமை யாகவும் இருங்கள். கடவுள் ஆசிர்வதிக்க... எனத் தெரிவித்துள்ளார். மேலும், இப்பிரச்சினை குறித்துக் கேள்விப்பட்டுத் தா... மிகவும் கவலைப்பட்டதாகவும், விரைவில் இதற்கு ஒரு தீர்வு கிடைக்கும் எனத் தான் நம்புவதாகவும் கூறியுள்ளார் சிம்பு.

# இதுதான் கோச்சடையான்...

சௌந்தர்யா தயாரிப்பில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், தீபிகா படு கோனே நடிப்பில் வெளியாகவிருக்கும் திரைப்படம் கோச்சடையான். தந்தை ரஜினிகாந்த் ஒரு நாட்டை திறம்பட நல்லமுறையில் ஆண்டு வருகிறார். நாட்டின் செல்வங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கிறார்.ஆனால், நல்ல ஆட்சியை நடக்கவிடாமல் அவரது அமைச்சரவையில் இருக்கும் சிலர் அவருக்கு எதிராக சதி செய்கின்றனர். அசிங்கமான உத்திகளைக் கையாண்டு தந்தை ரஜினியின் ஆட்சியைக் கவிழ்த்து விடுகிறார்கள். அப்போதுதான் மகன் ரஜினிகாந்த் பிறக்கிறார். திறமையான தந்தையின் பயிற்சியில் திறமைசாலியாக வளர்கிறார் மகன் ரஜினிகாந்த். பிறகு காட்டில் மறைவாக தனிக்குழு ஒன்றை அமைக்கிறார்.


தந்தையின் ஆட்சியைக் கவிழ்த்த துரோகிகளின் கையிலிருக்கும் நாட்டைப் புரட்சி செய்து வெல்கிறார். இதுதான் கதையின் மையக்கருவாம். மிகப்பெரிய சுறா மீனுடன் ரஜினி சண்டையிடும் காட்சி, ஹொலிவூட்டின் அவதார் மற்றும் டின் டின்னிற்கு நிகராகப் படமாக்கப்பட்டுள்ளதாம்.

# தாராள மனசுடன் நடிகை அமலா பால்

நடிகை அமலா பால் தெலுங் கில் கவர்ச்சியாக நடித்து வெற்றி பெற்ற பெஜவாடு என்ற திரைப்படம் தற்போது தமிழில் தயாரிக்கப்படுகிறது. இப்படத்தில் நாகசைதன்யா கதாநாய கனாக நடிக்கிறார். முக்கிய வேடத்தில் பிரபு நடிக்கிறார். கதாநாயகியாக அமலாபால் நடிக்கிறார்.

ஊரையே தன் கட்டுப்பாட் டுக்குள் வைத்திருக்கும் மிக பெரிய புள்ளியின் வலதுகரமாகதத் திகழும் ஒருவன் சந்தர்ப்ப வசத்தால் குற்றவாளியாக்கப்படுகிறான். அவனை மீட்டெடுக்கும் தம்பியின் அக்'ன் படம்தான் விக்ரம் தாதா.

தமிழில் ரொம்பக் குடும்பப் பாங்கான, கவர்ச்சியில் தாராளம் காட்டாமல் நடித்த அமலா பால், இப்படத்தில் கவர்ச்சிக்கு எந்த பஞ்சமும் இல்லாமல் ரொம்பத் தாராளம் காட்டவுள் ளாராம்.







# மீண்டும் சொக்க வைக்க வருகிறார் சுஷ்மிதா சென்

ரட்சகனில் சோனியா, சோனியா எனப் பாடி ரசிகர்களை சொக்க வைத்த சு'மிதா சென் கடந்த மூன்று ஆண்டுகளாக புதிய படம் எதிலும் நடிக்க வில்லை. தனது இரண்டு தத்துப் பிள்ளைகளைக் கவனிப்பதிலேயே கவனம் செலுத்திவந்தார். தற்போது 37 வயதாகும் சு'மிதா, நான் மீண்டும் நிச்சயமாக சினிமாவில் நடிப்பேன் என்று நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

வெள்ளித்திரையில் சு'மிதாவை ரசிகர்கள் கடைசியாக ரசித்தது □நோ பிராப்ளம்□ படத்தில் தான். இப்படம் 2010ம் ஆண்டு வெளிவந்தது. அதன் பின்பு கடந்த மூன்று ஆண்டுகளாக தனது வளர்ப்பு மகள்களைக் கவனிப்பதில் ரொம்பவே பிஸியாகிப் போனார் சு'மிதா.

மூன்றாண்டு இடைவெளிக்குப் பின்பு மீண்டும் நடிப்பில் அவதாரம் எடுக்க தயாராகிவிட்டார் சு'மிதா. ஆனால் என்ன படம், எத்தகைய வேடம் என்பதைப் பற்றி மட்டும் சஸ்பென்சாக வைக்கிறார்.

மேலும் தான் மீண்டும் நடிப்பதற்கு ரெடியாகிவிட்டேன் என்றும் தயாரிப்பாளர்களின் அதிகார□ர்வ அறிவிப்பிற்காகவே நான் மௌனம் காக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஆர்ய... வெல்லப்...

ஆர்யா நடி... திரைப்படம் இரண்டாம் உலக... வெளியாகியுள்ளன.

இண்டாம் உலகம் ... அதிர்ச்சி அளித்துள்ளார் இய... விடயங்களா அள்ளித் தெளி... இதன் ஓடியா ரிலீஸ் செய்தா... கிளம்பினாலும் எப்போது வெ... ராஜா ராண படம் ரெடியாகிவி... நீண்ட இடைவெளிக்குப் பிறகு... சத்தமில்லமல் செப்டம்பர் 3...

# ஜோதி...

அர்ஜீன் ...யக்கி, கதாநாயக... அவருக்கு ஜோடி. படத்தை பிர... நிலத்தில் ரூ 25 லட்சம் செலில் பிரமாண்ட சி... பெத்தவங்களோட சொத்து மட்... உருவாக்குவதான் இப்படத்தி...

இந் படத்தின் நாயக... படப்பிடிப்புத்தளத்தில் அவரைப்... ஆச்சரியத்துன் சொல்லிவருகி... சாவ்லாவுக்குகூட தனது தோற்...






## ...ணா ரசிகர்களே, ...தீர்கள்...

...ய் நடித்து இன்று ரிலீசாக இருந்த 'தலைவா' ...ம மட்டும் ரிலீசாகவில்லை. ஏற்கனவே, ...ய்திருந்த ரசிகர்களுக்கு இன்று தலைவா ...கத்தைத் தந்துள்ளது.

... ரசிகர்கள் கோபத்தில் பிரச்சினைகள் ...ளது. இந்நிலையில் பலர் வேறு ...ணத் தயாராகிவிட்டனர்.

...கர்களுக்கு சிம்பு ஆறுதல் ...ர் வெளியிட்டுள்ள கருத்துக்களாவது, ...தீர்கள்... எப்போதும் மழை ...சூரியவெளிச்சம் உதயமாகும். அது- ... இருங்கள். கடவுள் ஆசிர்வதிக்கட்டும்..." ...னை குறித்துக் கேள்விப்பட்டுத் தான் ... இதற்கு ஒரு ...ம்

## இயக்குநருக்கு ஷொக்! கொடுத்தார் தமன்னா!!

தற்போது அஜீத்துடன் சிறுத்தை சிவா இயக்கும் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார் தமன்னா. முதல் ரவுண்டில் நடித்ததற்கு துளியும் குறைவில்லாத கவர்ச்சி கலாசாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள தமன்னா, சம்பள விடயத்தில்தான் கொஞ்சம் கெடுபிடியாக இருந்துவருகிறார்.

இதற்கிடையில் கருத்து சொல்லும் படங்களை கொடுக்கும் இயக்குனர் ஒருவர் சமீபத்தில் தமன்னாவை அழைத்து தனது படத்தில் ஒரு வேலைக்காரி கதாபாத்திரத்தில் நடிக்கவேண்டும் என்று தமன்னாவை கேட்டுக்கொண்டாராம்.

வேலைக்காரி என்றால் சிறிய கதாபாத்திரம் இல்லை. படத்தின் கதாநாயகிதான். இதில் நடித்தால் விருது கிடைக்கக்கூட வாய்ப்பிருக்கிறது என்றும் தெளிவுபடுத்தினாராம். ஆனால், அதற்கு தடாலடியாக மறுத்துவிட்ட தமன்னா, அந்த மாதிரியான கருத்துச் சொல்லும் கலைப்படங்களில் நடித்தால் கமர்சியல் கதாநாயகி அந்தஸ்து போய்விடும். விருதுக்கு ஆசைப்பட்டு கரன்சியை இழக்க நான் தயாரில்லை என்று சொல்லி இயக்குனருக்கு ்ொக் கொடுத்துவிட்டாராம்.

## இறுதிக் கட்டத்தில் 'ஐ'

அந்நியனைத் தொடர்ந்து பிரம்மாண்ட இயக்குனர் 'ங்கரும், சீயான் விக்ரமும் இணைந்துள்ள படம் 'ஐ'. இதில் மதராசப்பட்டினம் எமி ஜாக்சன் கதாநாயகியாக நடிக்கிறார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கும் இப்படத்துக்கு பி.சி.ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார்.

ஒஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் பல கெட்டப்புகளில் நடிக்கிறார் விக்ரம். அதற்காக மாதக்கணக்கில் உடற்பயிற்சிகளை செய்து தனது உடல் எடையை அதிகப்படுத்தி, குறைத்து என மாறி மாறி நடித்துவருகிறார் விக்ரம்.

சீனா, பாங்கொங், பொள்ளாச்சி, கொடைக்கானல் மற்றும் சென்னை இடங்களில் படமாகி வந்த 'ஐ' படப்பிடிப்பு இப்போது க்ளைமாக்ஸை நெருங்கி விட்டது. இந்நிலையில், இதுவரை ஐ படம் எந்த மாதிரி யான கதைக்களம் என்பதே வெளியில் கசியாமல் இருந்தது. ஆனால், இப்போது ஒலிம்பிக்கை மையமாக வைத்து இப்படத்தின் கதை உருவாகி வருவதாக யூனிட் நபர்கள் பேசிவருகிறார்கள்.




## விஜய்யை தொல்லை படுத்துகிறாராம் காஜல்

துப்பாக்கி திரைப்படத்தின் மூலம் முதன்முதலாக விஜய்யுடன் ஜோடி சேர்ந்து நடித்தவர் காஜல். தற்போது மீண்டும் விஜய்யுடன் ஜில்லா படத்தில் ஜோடி சேர்ந்துள்ளார்.

விஜய்யுடன் நடித்த அனுபவம் குறித்து அவர் கூறுகையில், துப்பாக்கி படத்தில் விஜய்யுடன் நடித்த போது அவர் அதிகம் பேசமாட்டார். இப்போது நிறைய வி'யங்கள் மனம் விட்டு பேசுகிறார். மேலும் அவர் பேசாமல் இருந்தாலும் ஏதாவது பேசும்படி தொல்லை செய்து கொண்டே இருப்பேன். தொல்லை பொறுக்க முடியாமல் அவரும் பேசுவார் என்று கூறியுள்ளார்.

காத்தியுடன் 'ஆல் இன் ஆல் அழகுராஜா' படத்தில் பிசியாக வலம்வரும் காஜலின் தங்கையும் நடிப்பதற்கு களத்தில் இறங்கிவிட்டாராம்.



...க
...ன்

## ஆர்யா VS ஆர்யா வெல்லப் போவது யாரு?

ஆர்யா நடித்து வெளிவர இருக்கும் ராஜா ராணி திரைப்படம் இரண்டாம் உலகத்திற்கு முன்பு வெளியாகப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டாம் உலகம் தனது கடைசி படமாகக்கூட இருக்கலாம் என்று அதிர்ச்சி அளித்துள்ளார் இயக்குநர் செல்வா. எனவே, படத்தில் ஏகப்பட்ட விடயங்களை அள்ளித் தெளித்திருப்பார் என எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள் பலர். இதன் ஓடியோ ரிலீஸ் செய்தாகிவிட்டது. படம் வெளியிடப்போகிறோம் என்று பரபரப்புக் கிளம்பினாலும் எப்போது வெளியீடு என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால், ராஜா ராணி படம் ரெடியாகிவிட்டது. இரண்டாம் உலகத்தில் கமிட் ஆன ஆர்யா, மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகுதான் ராஜா ராணியில் கமிட் ஆனார். ஆனால், ராஜா ராணி சத்தமில்லாமல் செப்டம்பர் 3ஆவது வாரத்தில் வெளியாக இருக்கிறது.

## ஜோதிகாவின் அச்சு!

அர்ஜீன் இயக்கி, கதாநாயகனாக நடிக்கும் படம்தான் ஜெய்ஹிந்த்2. இதில் சுர்வீன் சாவ்லாதான் அவருக்கு ஜோடி. படத்தை பிரமாண்ட செலவுடன் தயாரித்துவருகிறார் அர்ஜுன். மைசூரில் 2 ஏக்கர் நிலத்தில் ரூ. 25 லட்சம் செலவில் பிரமாண்ட சிறைச்சாலை செட் போட்டு படமாக்கியுள்ளனராம். மேலும் குழந்தைகள் பெத்தவங்களோட சொத்து மட்டுமல்ல, இந்த நாட்டின் பொக்கி'ம். அப்படிப்பட்ட பொக்கி'த்தை எப்படி உருவாக்குவதுதான் இப்படத்தின் கதையாம்.

இந்தப் படத்தின் நாயகி சுர்வீன் சாவ்லா பார்க்க அப்படியே ஜோதிகா மாதிரியே இருக்கிறார். படப்பிடிப்புத் தளத்தில் அவரைப் பார்ப்பவர்கள் அப்படியே ஜோதிகா மாதிரியே இருக்கீங்களே என்று ஆச்சரியத்துடன் சொல்லிவருகிறார்களாம். பார்க்க ஜோதிகாவின் அச்சுப்போலவே காணப்படும் சுர்வீன் சாவ்லாவுக்கும்கூட தனது தோற்றம் குறித்து சந்தோ'ம்தானாம்.

# தேன் கிண்ணம்

## தொலையா நினைவுகள்

எச்சங்கள் மீதே
ஒற்றையடிப் பாதை
பயணிக்கின்றன
என் பாதங்கள்...

வனப்பிழந்த
ஊரின் கிழிஞ்சல்கள்
ஆங்காங்கே...

சந்தடியை
மறந்து
சாலையோரங்கள்
அழிந்துபோன
இல்லங்களின்
அழியாத சுவடுகள்.

வறுமை போக்கிய
வான்பயிர்கள்
சந்ததியில்லாமல்.....

தசாப்தங்களை
கடந்த
என் முற்றத்து
மல்லிகை...

உப்போறி
குப்பைமேட்டில்
உருமாறிக் கிடந்த
என் ஆறறிவு ஜீவன்
நிலாச் சோறுண்ட
முற்றத்து மணல் மேடு

கூடிக் குலவிய
என் சுற்றத்து
உறவுகள்...
மீண்டும் வருமா...?
மீள்குடியேற்றம்
வாழ்வு தருமா...?

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

## நாடறிந்த கோமாளி

நாலும் தெரிந்த
நாலுபேர்
ஒன்றும் தெரியாத
ஓராயிரம் பேர்
பாதைகளில்,
வீதிகளில்,
பரபரப்பாக பேசுகிறார்கள்
பதுங்கியிருக்கும்
'தேர்தல் புலி'
பாயும் நாள் எப்போதென்று...?

பசி போக்குவதற்காக
ஒரு கூட்டம்,
பாதுகாப்பிற்காக
ஒரு கூட்டம்
பணத்துக்காக
பல கூட்டம்
பச்சோந்தி வேட்பாளர்
பின்னே
பல்லிளித்து ஓடுகிறது!

நேற்றுக்களை மறந்த
நிர்க்கதியாளர்கள்
இன்றுகளை புரியாத
ஏமாளிகள்
நாளைக்கும்
வாக்குப் போடுவார்கள்
நாடறிந்த கோமாளிக்கே!

நா.ஜெயபாலன்- பிபிலை

## ஈழத்துக் கவிஞர்கள்

### தம்பிலுவில் ஜெகா

தம்பிலுவில் ஜெகா எனும் புனைபெயரில் எழுதும் இவரின் இயற்பெயர் ஜெகதீஸ்வரி நாதன். ஈழத்துக் கவிஞர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றபோது தனது 12 வது வயதில் 'அன்னை' எனும் கவிதை மூலம் எழுதத் தொடங்கினார். 1972 முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சிறுவர் மலர், பூவும்பொட்டும், வாலிபர் வட்டம், ஒலிமஞ்சரி, இளைஞர் மன்றம் போன்ற வானொலி நிகழ்ச்சியில் இவரது கவிதைகள் ஒலிபரப்பாயின. தினகரன், வீரகேசரி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளில் இவரது 50இற்கும் மேற்பட்ட கவிதைகள் வெளியாகியிருந்தன.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழாசிரியராகக் கடமையாற்றும் இவர், உயர்தர மாணவர் ஒன்றியத்தின் பத்திரிகைப் பொறுப்பாசிரியராக இருந்து கமலம், முத்தாரம், செந்தாமரை போன்ற சஞ்சிகைகளையும் வெளியிட்டார். 'கோகிலம்" சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் இருந்த இவரின் கவிதைகள் கோகிலம், காற்று, தூது, இந்துமதி, இதயசங்கமம், நிறைமதி போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்ததுடன் பெண் சஞ்சிகையில் தற்போதும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

பல கவியரங்குகளிலும் பங்குகொண்ட இவர் செங்கதிர், சஞ்சிகையின் 2008 பங்குனி சர்வதேச மகளிர் சிறப்பிதழை அலங்கரித்தார். சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய வெளியீடுகளான கண்ணாடி முகங்கள், கவிதைகள் பேசட்டும் போன்ற கவிதைத் தொகுப்புகளில் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன.


#### இவரது நூல்கள்

இன்னும் விடியவில்லை -கவிதைத் தொகுப்பு, 1998)

#### விருதுகள்

1996இல் திருக்கோயில் பிரதேச சாகித்திய விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

1993, மார்ச் 14 இல் அன்றைய அரசுத்தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களால், கவிக்கோகிலம் எனும் விருது வழங்கப்பட்டது.



## மனித(ம்) மறை

வசதியி லுயர்ந்தவர்
வாழ்க்கையில் குறை யிருப்பினும்
வறியவராக மாட்டார்!

வசதியை இழந்தவர்
வாழ்க்கையில் வறுமைதான்
வருந்தியும் சாகமாட்டார்.

இருப்பவ ரெல்லாம்
இல்லாற்குப் பொருளுதவ
இரங்கியே வரவுமாட்டார்!

கோடிக லெல்லாங்
கூடிக்கொஞ்சம் பிச்சை
ஏழைக்கிட்டால் என்ன?

மனித நேயம்
மண்ணில் செத்துப் போக
மறையவன் விரும்புவானோ?

இறைவன் ஏழையாமென்று
இருப்பவன் பணத்தைக் கொட்டி
கோயில் கோயிலாய்க் கட்டி!

இறை மனம்
நிறையுமா?(ப்) போல்
பணத் தினர் ஸ்தலங் கட்டு!

வசதிலா வனிதயற்கு
வரன்களை கட்டி வைத்தால்
வானிறை மகிழ்ந்திருப்பான்!

மனிதரை மனிதர்கள்
மகேசனுள்ளிருத்தி நேசினால்
மானுடப் பெருமை யோங்கும்!

பெருமையுஞ் சிறுமையும்
பேரிறை யோனுக்கில்லை
அருமனமருகிய மானுடற்கே!

பாண்டியூர் - பொ.நவநீதன்

## தடயங்கள்

தடயங்கள்
இல்லாமல்
தப்பிக்க
நினைக்கின்றேன்
காதலில் விழுந்து
எழுந்து
ஆனால் உன்
பின்னால் வந்த
என் பாதச்
சுவடுகள் தான்
ஊரெல்லாம்
ஏராளம்.

ஜே.சிந்து,
வேலணை-06.

## கபட நாடகம்

அந்தி மாலைப் பொழுதில்
சிந்தும் நிலவின் ஒளியில்
சந்தம் பாடும் சிந்தே
நித்தம் நின் நினைவில்!

சின்னச் சின்ன ஆசைகள்
சிறகடித்துப் பறக்கும் ஓசைகள்
சித்தம் கலாய்க்கும் வார்த்தைகள்
சொல்லக் கேட்ட மகிழ்வின்திளைப்பில்!

அன்பே என்ற ஆனந்த ஆராதனையில்
அபிஷேகம் செய்தே பூஜித்து
அகமதனை அன்போடு நேசித்து
ஆதரவாய் அரவணைத்தே ஆசித்தேனே!

பிணக்கமில்லா இணக்கம் தந்தே
பின்னிப் பிணைந்த உறவால்
உந்தன் இதயத்தில் குடிபுகுந்தது
எந்தன் அதிர்ஷ்டம் என்றிருந்தேனே!

ம்ஹூம்...!
கஷ்டமின்றி நஷ்டமின்றி
கட்டிமுடித்த காதல் கோட்டை
கபட நாடக அரங்கேற்றம்
என்பது அறியாதது என் அறிவீனமே!

மனவலி அறியா மலரே நீ...
மண்ணில் மலர்ந்து சிரிப்பது
என்னில் புகுந்த உந்தன் பிரிவு
படுத்தும் பாட்டை கண்டா?

ஏமாற்றுள்ளம் எள்ளிநகையாட
ஏமாந்த உள்ளம் நடைப்பிணமாக
எடுத்தெறிந்த பாசப் பிரசவம்
பிரவாகம் எடுக்கும் பிரபஞ்சத்தில்...!

யாழூர் யாழினி

## வெண்ணிலவே...!



இரவின் தனிமையிலே
ஜில்லென்ற தென்றல் - என்
மேனியைத் தழுவ விழிகளோ-
மதியை நோக்குகையில் - என்
மதியோ மதிமயங்கித்தான்
போனது...
இருளின் சிறகில் மிதக்கும்
ஒளி விளக்கு தன் அழகில்
என் மனமோ
பறிபட்டுத்தான் போனது!...

வளர்பிறையாய் வளர்ந்து
பௌர்ணமி என்ற நாமம்
சூடிக்கொள்ளும் போது -
உன்
சௌந்தர்யம் போல் - எம்
உள்ளங்களும் உவகை
கொள்ளத்தான் செய்கிறது!...

தேய்பிறையாய் தேய்ந்து
அமாவாசை என்ற நாமம்
சூடிக்கொள்ளும் உன்
வெறுமை
எம் உள்ளங்களுக்கும்
இருளைத்தான் தருகிறது!...

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.

## மதிப்புக்குரிய ஆசிரியர்

அளவில்லா அழியாச்
செல்வத்தை எமக்கு
கற்றுத் தந்த
அன்புக்குரிய சொந்தக்காரர்
ஆசிரியர்தான்...

இறந்த காலத்தில் இருந்த
என்னை அறியாமை
எனும் இருளகற்றி
எதிர்காலத்தில் பல துறைகளிலும்
பவனிவர
நிகழ்காலத்தின் நிஜங்களில்
என்னை நாயகனாக
மிளிரச் செய்த பெருமைக்குரியவர்
ஆசிரியர்தான்.

ஆசிரியர் இல்லாமல் கற்கின்ற
வித்தை குறை வித்தை
என்பார்கள் - பலர் இன்று
நான் பெற்ற அறிவுக்கு
ஆரம்ப கருத்தா என்னுடைய
ஆசிரியர்தான்.

எனக்கு அடித்தளமிட்டு
கட்டுமானத்திலும் ஈடுபட்டு
கட்டடமாக்கிய என்
ஆசிரியருக்கு நான்
அன்றும் என்றும் இன்றும்
கூட ஒரு மாணவனே...

ஜெ.முஹம்மட் ஜெஸீர்
பொத்துவில் - 27.



இப்பவெல்லாம் முன்ன மாதிரி இல்லை. ஏதோ கடமைக்கு செயற்படுற .மாதிரி தெரியுது என்று உங்கள் துணையிடம் இருந்து ஏக்கப் பெருமூச்சு எழுகிறதா? 'கவலை வேண்டாம் இது தீர்க்கக் கூடிய பிரச்சினைதான் என்று கூறியுள்ள நிபுணர்கள், சில பயனுள்ள ஆலோசனைகளை பட்டியலிட்டுள்ளனர். இவற்றை பின்பற்றினால் நீண்டநேர உறவில் தடங்கலின்றி ஈடுபடலாம் என்பது நிபுணர்களின் அறிவுரை. அது என்னவென்று கொஞ்சம் பாருங்களேன்...

உறவிற்கு முக்கிய எதிரி மன அழுத்தம். என்னன்னு தெரியலை இப்பல்லாம் மூடு வரமாட்டேங்குது என்று உங்களவர் கூறுகிறாரா? என்ன காரணத்தினால் இவ்வாறு கூறுகிறார் என்று பாருங்கள். மனரீதியான சிக்கல்கள், மனச்சோர்வு, உடல்சோர்வு எதனாலாவது பாதிக்கப்பட்டிருக்கிறாரா? என்பதை கண்டறிந்து அதனை தீர்க்க முயலுங்கள்.

புகைப் பழக்கமும், மதுப்பழக்கமும் உறவின் முக்கிய எதிரி. அது இருந்தால்

# தாம்பத்தியம் சிறக்க தரமான ஆலோசனைகள்.....

இரத்த ஓட்டம் பாதிக்கப்படும். சிறிது நேரத்திலேயே மூச்சுவாங்கி துணையிடம் திட்டுவாங்க வேண்டியிருக்கும். எனவே உறவின் மிக முக்கிய எதிரியாக உள்ள புகை, மது பழக்கங்களை உடனடியாக இல்லாவிட்டாலும் படிப்படியாக நிறுத்துங்கள்.

திருமணத்திற்குப் பின்னரும் சில ஆண்கள் சுயமாக இன்பம் காணுகின்ற பழக்கத்தில் ஈடுபடுவார்கள். இதனால் இயற்கையான உறவில் சிக்கல் ஏற்படும் என்கின்றனர் நிபுணர்கள். அடிக்கடி சுயமான இன்பம் அனுபவிப்பதால் சம்மந்தப்பட்ட பகுதியில் உள்ள நரம்புகள் பாதிக்கப்படும். அதன் நீச்சித்தன்மை குறைந்து துணையின் ஆசையை சரியான அளவிற்கு நிறைவேற்ற முடியாமல் போய்விடும்.

நமக்கு எது சரிப்பட்டுவருமோ அதனை கையாளுவது நல்லது. கடினமான பொசிஷனை முயற்சித்து பாதியிலேயே நிறுத்திவிடுவதைவிட எளிதான, அதிகம் சுகம் கிடைக்கும் பொசிஷனை கண்டறிந்து அதனை பின்பற்றுங்கள். நீண்டநேர உறவுக்கு இதுவும் ஒரு வழி.

இறுக்கமான ஆடைகளை தவிர்த்துவிடுங்கள். அடிக்கடி டைட்டான ஜீன்ஸ், டைட்டான ஆடைகள் அணிவதும் உறவிற்கு வேட்டுவைக்கும் சமாச்சாரம் என்கின்றனர். நிபுணர்கள். இதுதொடர்பாக இங்கிலாந்தில் நடைபெற்ற ஆய்வு ஒன்றில் இளைய தலைமுறையினர் இன்றைக்கு இருக்கமான ஆடைகளையும், ஜீன்ஸ் போன்ற ஆடைகளையும் அணிவதில் ஆர்வம் காட்டுகின்றனர். எதிர்பாலினரை கவரவேண்டும் என்று நினைத்து அணியும் ஆடையே அவர்களின் உறுப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

அதேபோல் இரவுநேரத்தில் தளர்வான ஆடைகள் அணிவது நல்லது அந்தரங்க உறுப்புகளுக்கு சுதந்திரம் கிடைக்கும் வகையில் இரவில் கூடுமானவரை ஆடைகளை அணிவதை தவிர்த்துவிடுங்கள் என்கின்றனர் நிபுணர்கள்.

நாம் உண்ணும் உணவும் நமது வ்ாழ்க்கையை நிர்ணயிக்கிறது. அதனால்தான் பண்டைக்காலம் முதலே வாழ்க்கைக்கு ஏற்ற உணவுகளை கண்டறிந்து சரியான நேரத்தில் அவற்றை உட்கொண்டு வந்துள்ளனர். பாதாம், பிஸ்தா, பூண்டு, முருங்கை, சின்ன வெங்காயம், நிலக்கடலை உள்ளிட்ட கிளார்ச்சியைத் தூண்டும் உணவுகளை உட்கொள்ளுங்கள். பின்னர் என்ன உங்களுக்கான தாம்பத்திய வாழ்க்கையை தடங்கல் ஏதுமின்றி அனுபவிக்கலாம் என்கின்றனர் நிபுணர்கள்.

# சிக்கன் விங்ஸ் சுவைத்தால் வருகிறது சிக்கல்....



அசைவ பிரியர்களுக்கு சிக்கன் ஒரு பிடித்தமான உணவு. ப்ரொய்லர் கோழி உண்பவர்களுக்கு உடல் ரீதியாக பல பிரச்சினைகள் ஏற்படும் என்று ஆய்வு ஒன்றில் நிரூபிக்கப் பட்டுள்ளது.

நாட்டுக்கோழியை விட ப்ரொய்லர் கோழியின் விலை குறைவு என்பதாலும், நகர்ப்புறத்தில் எளிதில் கிடைக்கும் என்பதாலும் மக்கள் இதை சாப்பிடுகின்றனர். ஆனால் ப்ரொய்லர் கோழியில் உள்ள தீமைகளை பலர் அறிய வாய்ப்பு இல்லை.


பெரும்பாலானோர் கோழியின் இறக்கையைத்தான் அதிகம் விரும்பி சாப்பிடுகின்றனர். இந்த சிக்கன் விங்ஸ் உடலில் பல அபாயகரமான பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பது மருத்துவர்களின் அறிவுரை. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு கர்ப்பப் பையில் இரத்தக்கட்டிகள் உருவாகும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக கூறுகின்றனர்.

இந்த கட்டியை நீக்கினாலும் எதிர்காலத்தில் கர்ப்பப்பையில் நிறைய பிரச்சினைகள் ஏற்படும் என்பதுதான் அதிர்ச்சிகரமான தகவல். ப்ரொய்லர் கோழியானது வெறும் 65 நாட்களில் முழுவளர்ச்சி அடைந்துவிடுகிறது. இதன் வளர்ச்சியை தூண்டுவதற்கு ஸ்டெரொய்ட் என்னும் ஊக்கமருந்தானது ஊசிமூலம் செலுத்தப்படுகிறது.

மேலும் இந்த ஊசியானது கோழியின் கழுத்து மற்றும் இறக்கை பகுதிகளில் செலுத்தப்படுகிறது. ஆதலால் ஸ்டெரொய்ட் என்னும் ஊக்கமருந்தின் தாக்கம் கழுத்து மற்றும் இறக்கைகளில் அதிகமாக இருக்கும்.

எனவே சிக்கனில் கழுத்து மற்றும் இறக்கையை அதிகம் விரும்பி சாப்பிடுவோருக்கு எளிதில் நோய்கள் தாக்கும். எனவே ப்ரொய்லர் கோழி சாப்பிடுவதை தவிர்த்து நாட்டு கோழி சாப்பிடுவதே நல்லது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# எடையை குறைக்கிறது தயிர்



தினமும் மூன்று வேளை தயிரை உட்கொண்டால் உடல் பருமன் குறைந்து அழகாக தோற்றமளிக்கலாம். தயிருக்கு பல்வேறு மருத்துவ குணங்கள் உண்டு, தயிர் பலவகை இரைப்பை மற்றும் குடல் சம்பந்தபட்ட நோய்க்கிருமியை அழிக்கிறது, வயிற்றுப் போக்கினை தடுக்கும் ஆற்றலும் கொண்டதாகும்.

தயிரானது புரதங்கள், கல்சியம், ரிபோப்லாவின், உயிர்ச்சத்து மற்றும் ஊட்டச்சத்துகள் நிறைந்ததாகும். பாலைவிட அதிகமான ஊட்டச்சத்துகள் தயிரிலிருந்து கிடைக்கிறது. மிதமான லேக்டோஸ் இருப்பதனால் சகிப்புத்தன்மை இல்லாத மக்கள் தயிரை பாதகமில்லாமல் உட்கொள்ளலாம். ஏனென்றால் பாலின் உட்பொருளான லேக்டோசு என்ற மூன்பொருள் பண்பாட்டு வளர்ப்பு காரணமாக லெக்டிக் அமிலமாக மாறிவிடுவதுதான் இதற்கு காரணம்.

சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த ஆய்வறிக்கையில், குறைந்த கொழுப்புச்சத்துள்ள தயிர் எடை குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உடல் பருமான நபர்களுக்கு தினமும் மூன்றுவேளை கொழுப்புச்சத்து கொண்ட தயிர் கொடுக்கப்பட்டது. அதன்பின் அவர்களை ஆய்வுசெய்ததில் 22 சதவிகித அளவுக்கு உடல் எடை குறைந்தது தெரியவந்தது. மேலும் இவர்கள் முன்பு இருந்ததைவிட அழகாக தோற்றமளித்தனர்.

# மஞ்சள் காமாலை நோய்



குழந்தை முதல் பெரியவர்கள்வரை ஆட்டிப்படைக்கும் நோய்களுள் மஞ்சள் காமாலையும் ஒன்று. மஞ்சள் காமாலை நோயானது இவ்வுலகில் பல இலட்சக்கணக்கான மக்களை வெகுவாக பாதிக்கும் நோயாகும். இதனால் உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையின்படி பிறக்கும் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.

ஆனாலும் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. மனிதனை மர்மமாகத் தாக்கும் நோய்களில் மஞ்சள் காமாலை நோயும் ஒன்று. பொதுவாக மஞ்சள் காமாலை நோயின் தாக்கம் உடலில் 10 அல்லது 15 நாட்களுக்குப் பின்னர்தான் தெரிவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு.

தற்போது உணவுப் பழக்கத்தில் உள்ள மாறுபாடு, மிதமிஞ்சிய வேலை, அளவுக்கு அதிகமான உணவு, சுகாதாரமற்ற உணவு, தூக்கமின்மை, ஓயாத சிந்தனை, மனக்கவலைகள் இவற்றாலும் உடலில் பித்தம் அதிகரித்து செரியாமை உண்டாகி குடலில் புளிப்புத் தன்மை ஏற்பட்டு காய்ச்சல் உண்டாகிறது. காய்ச்சல் மிகும்போது இரத்தத்தில் அதிக சூடேறி அதனால் பித்தம் அதிகரித்து பித்தநீரானது உடல் உறுப்புகளைப் பாதிப்படையச் செய்து மஞ்சள் காமாலை என்கின்ற நோயை ஏற்படுத்துகிறது.

**மஞ்சள் காமாலை நோய் வருவதற்கான காரணங்கள்:**

❖மேலும் அசுத்தம் கலந்த நீரைப் பருகுதல், எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் சாப்பிடுதல், கல்லீரலைப் பாதிப்படையச் செய்யும் இரசாயன பொருட்கள் கலந்த உணவுகளை உண்ணுதல், நேரம் கழித்து உணவு அருந்துதல் அல்லது நீண்ட பட்டினி, தூக்கமின்மை, மது அருந்துதல், வாந்தி, பேதி, மன உளைச்சல், புகைப்பிடித்தல் ஆகிய காரணங்களால் மஞ்சள் காமாலை நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளது.

❖அதிக மருந்து, மாத்திரைகள் உண்பதாலும் இரத்தத்தில் அழற்சி ஏற்பட்டு மஞ்சள் காமாலை நோய்வர வாய்ப்புண்டு.

❖உடல் உஷ்ணத்தினால் ஏற்படும் சளி இரத்தத்தோடு கலப்பதாலும் மஞ்சள் காமாலை நோய்வர வாய்ப்புண்டு.

❖குடலில் ஏற்படும் புண்களினால் இரத்தம் அசுத்தத் தன்மை அடைகிறது. இந்த இரத்த அசுத்தத் தன்மையினாலும் மஞ்சள் காமாலை வரலாம்.

❖பாலூட்டும் தாய்க்கு இந்நோய் இருந்தால் அத்தாயின் பாலைக் குடிக்கும் குழந்தைக்கும் தொற்ற வாய்ப்புண்டு.

இவ்வாறு கல்லீரல் பாதிப்படைவதால் இரத்தத்தில் "Alkaline Phosphate" என்ற அமிலத்தின் அளவு அதிகரித்து சிறுநீரகத்தில் "Urinay Bilubrin" அளவு அதிகரித்து சிறுநீர் மஞ்சள் நிறத்துடன் வெளியேறும். மஞ்சள் காமாலை நோயில் பொதுவாக 18 வகையான நோய்க்கிருமிகள் உள்ளன. பெரும்பாலும் இந்நோய்க்கிருமிகள் வெளிப்படையாகத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. மருத்துவப் பரிசோத்னையின்மூலம் இதனைக் கண்டறியலாம்.

# தாயின் பாதுகாப்பில் பெண் குழந்தைகள்!



பிறந்த பெண் குழந்தைகள் தொடங்கி 80 வயது வரை உள்ள பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதற்கு இப்போது ஊடகங்களிலும், நாம் அன்றாம் கேட்பவைகளும், பார்ப்பவைகளுமே ஆதாரம்.

பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாயின் அன்பும், அரவணைப்பும் கட்டாயமாக தேவைப்படுகிறது. பெண் குழந்தைகளின் வளர்ப்பில் தாய்மார்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

வீட்டைவிட்டு வெளியே செல்கிற பெண் குழந்தைகள் யாரிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும். எத்தகைய பாதுகாப்பான இடைவெளியைப் பின்பற்றவேண்டும் என்பதை கட்டாயம் கற்றுக்கொடுக்கவேண்டும்.

இந்தக் காலத்தில் ஆணும், பெண்ணும் வேலைக்கு சென்றால்தான் குடும்பத்தை நிர்வகிக்கமுடியும் என்ற நிலை வந்துவிட்டது. வேலைக்குப் போகிறோம், சம்பாத்திக்கிறோம், என்று சொல்லிக்கொண்டு பெண் குழந்தைகளை அலட்சியமாக விட்டு விடுதல் கூடாது. அதேபோன்று வீட்டில் இருக்கும் பெண்கள் எப்போதும் தங்கள் வீட்டுப்பணிகளை செய்வதில் நேரத்தை செலவி டாமல், பெண் குழந்தைகளின் கவனிப்பில் அக்கறை செலுத்தவேண்டும்.

குழந்தைகள் பள்ளிக்கும், டியூசனுக்கு செல்லும்போது மற்றவர்களின் துணையை நாடுவது ஆபத்தை விளைவிக்கும். முடிந்தவரையில் பெண் குழந்தைகளை தாய்மார்கள் அழைத்துச் சென்றுவருவது பாதுகாப்பாகும்.

பெண் குழந்தைகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தாய்மார்கள் கவனிக்கவேண்டும். அதற்கென்று எதற்கெடுத்தாலும் கண்டிப்புக் கூடாது. இதனால் தேவையற்ற மன உளைச்சலுக்கு தள்ளப்பட்டு, எல்லா விஷயங்களையும் மறைக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். பெண் குழந்தைகளை தன்னுடைய மகளாக நினைக்காமல் தோழியாக கருதி, அனைத்து விஷயங்களையும் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு தாய்மார்களும் பெண் குழந்தையை பாதுகாத்து, அரவணைத்து செயற்பட்டால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

## பெண்களுக்கான வங்கி!

இந்தியாவின் அசாமில், பெண்களின் குடும்பச் சுமையை எளிதாக சுமக்கும்வகையில், பெண்களால், பெண்களுக்காக வங்கியை நடத்திவருகிறார் லகிமி பருவா. இவருக்கு தற்போது 64 வயதாகிறது.

பெண்களுக்கு நிதி நெருக்கடி இல்லாத நிலையை ஏற்படுத்தினால்தான், முழுச் சுதந்திரமாக வாழ வைக்க முடியும் என்பதை உணர்ந்தவர் இவர். இதனை அறிந்ததால் தான் கடந்த 14 ஆண்டுகளுக்காக பெண்களுக்கு தொழில் துவங்க, கல்விகற்க என பல்வேறு கடன் வசதிகளை செய்து கொடுத்துவருகிறார்.

இவரது இந்த வங்கியின் மூலமாக, எத்தனையோ குடும்பங்களில் இன்று மகிழ்ச்சி நிலவுகிறது. கனகலதா மகிளா வங்கியின் மூலம் லகிமி பருவா தனது சீரிய பணியைச் செய்து வருகிறார்.

## பேரிச்சம் பழ அல்வா



**தேவையான பொருட்கள்:**

பேரிச்சம் பழம் - 2 கப் (விதை இல்லாதது)
சூடான பால் - 2 கப்
சீனி - 1 1/2 கப்
நெய் - 1/2 கப்
ஏலக்காய் பொடி - 1 கரண்டி, பாதாம் - 5-6 (நறுக்கியது)

**செய்முறை:**

முதலில் சூடான பாலில் பேரிச்சம் பழத்தை போட்டு, 3 மணி நேரம் ஊற வைத்து, நன்கு கெட்டியான பேஸ்ட் போல் அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு தட்டில், 1 மேசைக்கரண்டி நெய் ஊற்றி தேய்த்துக் கொள்ளவேண்டும்.

பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் அரைத்து வைத்துள்ள பேரிச்சம் பழத்தைப்போட்டு, சீனியை சேர்த்து, தீயை குறைவில் வைத்து, சீனி கரையும்வரை நன்கு கிளறிவிடவேண்டும்.

பிறகு அத்துடன் இன்னும் சிறிது பால் சேர்த்து, 20 நிமிடம் நன்கு கிளறிவிட வேண்டும். பின் ஏலக்காய் பொடி மற்றும் பாதாம் சேர்த்து நன்கு 5 நிமிடம் கிளறி, அடுப்பில் இருந்து இறக்கி, நெய் தடவிய தட்டில் ஊற்றி, குளிர வைத்து, துண்டுகளாக்கி பரிமாறினால், சுவையான பேரிச்சம் பழ அல்வா தயார்.

## மாறிவரும் நாகரிக மாற்றம்

**நம்** முன்னோர் நம்மை நல்வழியில் நெறிப்படுத்துவதற்காக பல அறிவுரைகளை வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர். அவற்றின் உண்மைக் காரணம் அறியாமலேயே நாம் கண்மூடித்தனமாகப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். சந்தேகத்துடனும், பழக்கதோஷம் காரணமாகவும் அந்த அறிவுரைகளை நடைமுறைப்படுத்துவதைவிட உண்மை நிலவரம் அறிந்துபின்பற்றலாம்.

பெண்களுக்கு் மாதவிலக்கு ஏற்படும் சமயத்தில் உடல்நலத்தில் அயர்ச்சியும் பலவீனமும் உண்டாகும். அதனால்தான் அக்காலத்தில் பரிபூரண ஓய்வு கொடுக்கவேண்டி அன்றாட வேலைகளிலிருந்து அவளை ஒதுக்கிவைத்தனர். சத்துள்ள ஆகாரம் கொடுத்து அவள் உடல்நலத்தைப் பேணுவதில் கவனம் செலுத்தினார்கள். ஆனால் பழைய சம்பிரதாயத்தைப் பிடித்துக்கொண்டு அந்த சமயங்களில் வீட்டுக்கு வெளியேயோ உபயோகமற்றதை போடும் தனி அறையிலோ பெண்களுக்கு இடம்கொடுப்பது தேவையற்றது.

பெண்கள் நகைகள் அணிய காலங்காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. கைகளில் வளையல்கள் அணிவதால் மணிக்கட்டு பகுதி சிறப்பாக செயற்படுகிறது என்றும், காலில் மெட்டிபோடுவதால் கருப்பையின் வளர்ச்சி சீராக உள்ளது என்றும் இரு கைகளிலும் அணிகலன்கள் அணிவதால் மார்பகப் புற்றுநோய் வராமல் தடுக்கப்படுகிறது என்றும் ஆராய்ச்சியின்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மெட்டி ஒலிக்கு பின்னால் இப்படி ஒரு காரணம் இருப்பது நம் எத்தனை பேருக்கு தெரியும்? பெண்களின் உடல் ஆரோக்கியத்தில் ஆபரணங்கள் பெரும் பங்குவகிக்கிறது என்பதை அறிந்தே நகைகள் அணிந்துகொள்ளும் முறை வழக்கமாக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது நாகரிக வளர்ச்சியில் வளையல்கள்கூட மறைந்து வருகின்றன. மாறாக தொப்புளில் கம்மல்கள் இடம்பெயர்ந்துவிட்டன. அக்காலத்தில் பெண்கள் மரியாதை காரணமாக கால் மேல் கால் போட்டு உட்காரக்கூடாது என்று சொல்வார்கள்.

ஆனால் உண்மையில் பெண்கள் அவ்வாறு உட்கார்ந்தால் அவர்களின் கருப்பை பாதிப்புக்குள்ளாகிறது என கண்டறியப்பட்டுள்ளது. மூக்கு குத்தினால் பொறுமை, சாந்தகுணம் ஏற்படும் என நம்புகிறோம். இவ்வாறு செய்தே எங்களை அடக்கி ஆள்கிறார்கள் எனப் போர்க்கொடி தூக்குவோரும் உண்டு.

கர்ப்பகாலத்தில் வளைகாப்பு நடத்தி பெண்கள் கைநிறைய கண்ணாடி வளையல் அணிந்து கொள்ளவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அர்த்தம் தெரியாமலேயே இதையும் பின்பற்றுகிறோம். அவ்வாறு அணிவது வயிற்றிலிருக்கும் குழந்தையின் கேட்டும் திறனை அதிகரிக்கிறது. அதனால் தோழிகளே காரணம் அறிந்து காரியம் நிறைவேற்றுவோம்.



## லேடிஸ் ஸ்பெஷல்



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# மனநிலையை காட்டும் கருவளையம்



**பொ**துவாக கண்களைச் சுற்றியுள்ள பகுதியானது மிகவும் மிருதுவான அதிக கவனம் செலுத்த வேண்டிய சருமமாக உள்ளது. இதனை காக்க அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். சிலருக்கு பரம்பரைரீதியாகவே கருவளையம் ஏற்படலாம். அவ்வாறானவர்கள், சில முயற்சிகள் செய்வதால் ஓரளவுக்கு அதனை கட்டுப்படுத்தலாம். முழுவதுமாக போனாலும், அது மீண்டும் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

உறக்கமின்மை காரணமாக சிலருக்கு கருவளையம் ஏற்படுகிறது. இது அவ்வப்போது வந்து, பின்பு மறைந்துவிடும். இதற்கு எந்த சிகிச்சையும் தேவையில்லை. நன்கு உறங்கினாலே போதுமானது. உறக்கம் குறையும்போது உருவாகும் கருவளையமானது, உங்களது உடல்நிலை எடுத்துக்காட்டும் கண்ணாடியாகவும் அமைகிறது.

சிலருக்கு சத்துக்குறைவால், கண்களுக்கு அருகே உள்ள சருமம் சுருங்கி அதனால் கருவளையம் தோன்றுகிறது. இதனை போக்க நல்ல சத்தான உணவுகளை சாப்பிடவேண்டும். புரதம், நார்ச்சத்து, கொழுப்புச்சத்துள்ள உணவுகளை சாப்பிட்டுவந்தால் தானாகவே இந்த கருவளையும் மறைந்துவிடும்.

சிலருக்கு அதிகப்படியான பணிப்பளுவால் கருவளையம் ஏற்படுகிறது. அதிகநேரம் கணினி முன் அமர்ந்து பணியாற்றுபவர்கள், அதிகநேரம் கண் விழித்து வேலை செய்பவர்கள் அல்லது படிப்பவர்கள், தொடர்ந்து டி.வி பார்ப்பவர்களுக்கும் இந்த கருவளையம் ஏற்படுகிறது.

சிலருக்கு இரத்தச்சோகை காரணமாகவும் கருவளையம் ஏற்படுகிறது. இரும்புச் சத்துள்ள உணவுகளையும், இரத்தத்தை அதிகரிக்க உதவும் காய்கறிகளையும் அதிகம் சாப்பிட்டு இரத்தச் சோகையை சரிசெய்தால், இந்த கருவளையமும் தானாகவே மறைந்துவிடும். கீரை, நெல்லிக்காய், பீட்ரூட், நாவல்பழம் போன்றவற்றில் இரும்புச்சத்து உள்ளது.

எனவே, கருவளையம் வந்துவிட்டதே என்று எண்ணி அதற்காக பல க்ரீம்களை போட்டு மன உளைச்சலுக்கு ஆளாகாமல், முதலில் எதனால் கருவளையம் வந்தது என்று கண்டறிந்து அதனை குணப்படுத்த முயலுங்கள்.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக, இந்த வாரம் தொடக்கம் (முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375) இப்போட்டியில் வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

**250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-381**

**கேள்வி : பெண்களுக்கான வங்கி உள்ள இடம் எது?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 26.08.2013**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 381
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 379 இற்கான விடை :- மாமோ கிராம்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.

381

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

ஊடகங்கள் எல்லாம் அடித்துப்பிடித்து ஒன்றை ஒன்று போட்டிபோட்டுக் கொண்டிருக்கின்றன. ஊடகங்களில் ஒரு விஷயத்தைச் சொன்னால், அதை உண்மை என்று நம்புவது பெரும்பாலாருக்கு பழகிப்போன ஒன்று. (ஊடகங்களில் உண்மையை மட்டும் எழுதுபவர்களின் நிலையை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது.)

மக்களின் மனதில் சென்று பதியக்கூடிய வாசகங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் முதன்மையானதும் ஏற்கனவே ஆப்கான் போரில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டதுமான 'தீவிர வாதம்' அதைத் தொடர்ந்து 'WMD (Weapons of Mass Destruction)' என்று இரு USP (Unique Selling Points) உருவாக்கப்பட்டது.

## அரபுலகம் அவமானத்தில் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல்

செப்டம்பர் 11 க்கு பின் உலகில் உருவாகிப் போன சந்தேக நோய் தொற்றுநோயாக மாறி இருப்பவன் இல்லாதவன், தெரிந்தவன் தெரியாதவன் என்று எந்தவித மொழி, மத மற்றும் நாடுகள் வித்தியாசமில்லாமல் எல்லோரையும் பற்றிக்கொண்டது அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் சாதகமாக அமைந்தது.

எதிர்க்க ஆளில்லை என்றால் அடிக்க வருபவனின் தன்னம்பிக்கையும் தைரியமும் அபாரமாக இருக்கும். அதுமட்டுமா? எப்போது எதிரியை உதைக்கலாம் என்ற ஆர்வமும் அதிகமாக இருக்கும். அப்படித்தான் அமெரிக்காவும் பிரிட்டனும் திட்டத்தை கையில் வைத்துக்கொண்டு உடனடியாக போரில் குதிப்பதென்று தவியாய் தவிக்க ஈராக் அமெரிக்காவின் 52ஆவது மாநிலமாக மாறுவதற்கு நாட்கள் எண்ணப்பட்டன.

ஏதோ ஒரு கூட்டம் இலாபமடைவதற்கு இலட்சக்கணக்கில் மக்கள் தங்கள் உயிர்களை அநியாயமாக இழக்கத் தயாரானார்கள். அவர்களை அறியாமலே மரணத்தின் கொட்டகைக்கு வந்து குவிக்கப்பட்டார்கள். இரட்டைக் கோபுரம் தாக்கப்படும் காட்சியை மணிக்கொருமுறை டி.விக்களில் காட்டி மேலைநாட்டு மக்களின் மனதில் அதை மறக்கவிடாமல் செய்த மீடியாக்கள் ஈராக்கில் சிதறிவிழும் மனித உடல்களை மொத்தமாக மூடிமறைத்தன. எதை சொல்லவேண்டும், எதை சொல்லக்கூடாது, எப்படிப்பட்ட படங்களை வெளியிடவேண்டும் என்று அந்தந்த படைத்தலைவர்களின் தணிக்கைக்கு பிறகே போர்ச்செய்திகள் வெளியிடப்பட்டன. அதையும் மீறி அல் ஜசீரா மற்றும் அல் அரபியா டி.வியினர் ஈராக்கில் அப்பாவி மனிதர்களும் பிள்ளைகளும் கொல்லப்படுவதை செய்தியாக வெளியிட்டார்கள். ஆனால் அமெரிக்கா கருத்துச் சுதந்திர விரும்பிகள், ஜனநாயகக் காவலர்கள் அந்த டிவிக்களின் செய்தி சேகரிக்கும் பக்தாத் அலுவலகங்களை தாக்கி அங்கிருந்த செய்தியாளர்களையும் உண்மையை சொன்ன காரணத்திற்காக மேல் நோக்கி அனுப்பிவைத்தார்கள்.

சோவியத்தை நம்பி முதலாம் வளைகுடா போரில் மோசம்போன சதாம் ஐரோப்பியாவை நம்பி இரண்டாம் வளைகுடா போரில் ஆட்சியை இழந்தது மட்டுமல்லாமல் எலிக்குகைக்குள் தஞ்சமடைய நேர்ந்தது.

அரபுலகம் அவமானத்தில் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் வேதனையில் வாய்மூடி அமைதியாகக் கிடந்தது. ஐ.நா. சபையின் முடிவிற்க்கான காலம் தொடங்க ஆரம்பித்தது. வெறும் நிவாரணப் பணிகளை மட்டும் செய்தால்போதும் என்று அறிவுறுத்தப்பட்டது.

அமெரிக்காவின் script இல் ஐரோப்பாவிற்கு எந்தவித பாத்திரமும் இல்லை என்பதை புரிந்துகொண்டு பிறிதொரு சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பதை தவிர்த்து வேறு வழியில்லை என்பதை உணர்ந்து அமைதியாகிப்போனது' ஐரோப்பிய உலகம்.

ஈராக்கின் எல்லா ஒப்பந்தங்களும் அமெரிக்க கம்பனிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அந்த ஒப்பந்தங்கள் எதையும் பிற்காலத்தில் ஈராக் செல்லுபடியாகாத ஒப்பந்தமாக மாற்றிவிடக்கூடாது என்பதில் தனிக்கவனம் எடுத்து அதற்கு தகுந்தாற்போல் ஈராக்கின் புதிய சட்டங்கள் பால் பிரெமரால் (First Governor General of Iraq) ஏற்கனவே எழுதி அமுலாக்கப்பட்டுவிட்டது. ஒரு நாட்டை அநியாயமாக எடுத்துக்கொண்டதுமல்லாமல் அந்த நாட்டின் அரசியல் சட்டத்தை திருத்தி இருக்கக்கூடிய பெற்றோல் தொடர்பான எல்லா வியாபாரங்களையும் அமெரிக்க கம்பனிகளுக்கு தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு சுதந்திரத்தைப் பற்றி வாய்கிழிய பேசிக்கொண்டிருக்கிறது அமெரிக்க அரசாங்கம்.

அமெரிக்கா விரும்பியது போல் ஐ. நா சபை ஆட்டம் காண ஆரம்பித்துவிட்டது. கோபி அண்ணானின் ஐ.நா. சீரமைப்புத் திட்டத்திற்கு அமெரிக்கா veto சொல்லிவிட்டது. ஆங்காங்கே ஏழை நாடுகளுக்குச் சென்று போலியோ ஊசி போடும் வேலையும் கோதுமை மூட்டைகளை விநியோகம் செய்தால்போதும் என்று ஐ.நா.வின் வேலையை அமெரிக்கா குறைத்துவிட்டு உலக நாடுகளின் அரசியல் பொருளாதார ஒழுங்குகளை தான் பார்க்கப் போவதாக ஆணித்தரமாக அழகுற இராஜதந்திர வார்த்தைகளில் சொல்லிவிட்டது.

ஐ.நா.வின் தலை எழுத்தை மாற்றி எழுதும் பணியை இத்தோடு விடப் போவதில்லை அமெரிக்கா. ஐ.நா. சபையைப் பற்றி 1994ல் 'There is no such thing as the United Nations. There is only the international community, which can only be led by the remaining superpower, which is the United States... The secretariat building in New York has 38 stories. If it lost ten stories, it wouldn't make a bit of difference' என்று Federalist Society Forum' என்ற அமைப்பில் பேசிய ஜோன் போல்டன் (1) என்ற புதிய பழமைவாதியைத்தான் (இப்படி மொழி பெயர்க்கலாமா? neo-conservative) அமெரிக்காவின் ஐ. நா. தூதராக நியமித்தது.

ஈராக் போரின்மூலம் தனது முதலாவது எதிர்பார்ப்பான ஐ.நா. ஒழிப்பு வேலையைத் தொடங்கிவிட்ட அமெரிக்கா தனது இரண்டாவது வெற்றியான டொலரின் பாதுகாப்பில் குறைந்தது ஒரு பத்தாண்டு காலத்திற்காவது அதிகம் கவலைப்பட தேவையில்லை எனும் அளவிற்கு தன்னை கொஞ்சம் நிம்மதியாக்கிக் கொண்டது. ஒபெக் நாடுகளின் முதுகெலும்பை உடைக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. ஈராக்கை கையில் வைத்துக்கொண்டு தான் விரும்பிய நாடுகளுடன் இருநாட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு வேண்டுகின்ற அளவிற்கு பெற்றோல் ஏற்றுமதி செய்யமுடியும். ஒபெக் நாடுகளின் கட்டுப்பாட்டை குலைத்து அவர் களையும் அமெரிக்கா விரும்பியபடி பெற்றோல் விலையை நிர்ணயிக்க செய்யும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

தான் எதிர்பார்த்த விளைவுகள் செயற்படத் தொடங்கியது. அமெரிக்காவிற்கு தற்போது மனசாந்தியை அளித்தாலும் தனது ஏனைய எதிர்பார்ப்பையும் நிவர்த்தி செய்து கொள்ள, மீண்டும் அரபு வசந்தம் எனும் ஊழித்தீ மூலம் அமெரிக்கா போரின் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஜனநாயகம் எனும் பொய்ப்போர்வையில் மத்திய கிழக்கை தீர்மானிக்கும் சக்தியாக செயற்படுகிறது. லிபியா, எகிப்து, சிரியா எனக் கோரம் தொடர்கிறது.

ஆனால் அமெரிக்காவின் போர்ச்செலவைவிட, அது கைப்பற்றிய மத்திய கிழக்கு எண்ணெய் வயல்கள் பன்மடங்கு வருமானத்தைக் கொடுத்தபடியுள்ளன. எனினும் சர்வதேச பொருளாதார மந்தநிலைக்குள் சிக்கிய அமெரிக்கா தனது முன்னாள் இராணுவ எதிரியாகிய சீனாவை பொருளாதார நண்பனாக் மாற்றத்தொடங்கியுள்ளது. தற்பொழுது அதுவே சீனாவின் விருப்புமாகும்.

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் எதிர்கால வியூகங்களை முன்வைக்கும் நீலநூல் சீனாவின் ஆட்சியாளர்களால் பெரிதும் மதிக்கப்படும் சிந்தனைச் சிற்பிகள், இந்துசமுத்திரப் பிராந்தியம் குறித்து முதன்முறையாக வெளியிட்டுள்ள நீலப் புத்தகம் (Blue Book)பற்றிப் பார்க்கப்போகிறோம்.

இந்நூல், சீன அரசின் உத்தியோகபூர்வமான அறிக்கையில்லை என்றாலும், சீன சமூக விஞ்ஞான கல்விக் கழகம் (CASS ) வெளியிடும் இந்த ஆய்வுகள், பெஜிங்கின் கொள்கையை பிரதிபலிக்கும் என்கிற பார்வை உண்டு. அத்தோடு, இவ்வறிக்கைக்கான சர்வதேச நாடுகளின் எதிர்வினையை உள்வாங்கி, அதனடிப்படையில், தமது மூலோபாயக் கொள்கைகளை வகுக்கும் நோக்கம், சீன வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் சக்திகளுக்கு உள்ளதென்றும் கூறப்படுகிறது.

சர்வதேச மூலோபாய கற்கை மையங்களின் கவனத்தை ஈர்த்துள்ள, இந்து சமுத்திரப் பிராந்தியம் குறித்தான சீன ஆய்வாளர்களின் நீல நூலில், இப்பிராந்தியத்தில் எழுந்துள்ள சவால்கள் பற்றியதான முழுமையான மதிப்பீடும், அங்கு சீனா ஆற்ற வேண்டிய பங்கினையும் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூன் 8 ஆம் திகதியன்று, யுனான் பல்கலைக்கழகமும், சமூக விஞ்ஞான ஆய்வு மையமும் இணைந்து வெளியிட்ட 350 பக்கங்களைக்கொண்ட இந்நூல், நான்கு முக்கிய தலைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

1.இந்துசமுத்திரப்பிராந்தியத்தின் அரசியல்-பொருளாதார-பாதுகாப்பு நிலைமை.

2.சீனாவிற்கான இந்துசமுத்திரப்பிராந்திய மூலோபாயம்.

3.இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையும் (Look East Policy) அதில் சீனாவின் வகிபாகம் என்பதோடு, இ.ச.பிராந்தியத்தில் அமெரிக்காவும் இந்தியாவும்.

4.இந்துசமுத்திரமும் சீன- மியன்மார் உறவு நிலையும். என்பதாக அந்நூலில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடிப்படையில் இந்த ஆய்வறிக்கை ஊடாக சீன அறிஞர்கள் கூறமுற்படுவது என்னவென்றால், இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசுகள், தமக்குள் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தாவிட்டால், ஒத்துழைப்பும் சமாதானமும் நிலவும் இந்து சமுத்திரப் பிராந்தியம், மோதல்களும் பிரச்சினைகளும் நிறைந்த கடற்பிராந்தியமாக மாறும் என்று எச்சரிக்கின்றார்கள்.

ஆனால் சீனாவிற்கு இந்துசமுத்திரப் பிராந்தியம் குறித்தான எந்தவிதமான மூலோபாயத்திட்டங்களும் அறவே இல்லை என்று குறிப்பிடுவதோடு, எதிர்காலத்தில், அமெரிக்காவோ, ரஷ்யாவோ, இந்தியாவோ, சீனாவோ, அல்லது அவுஸ்திரேலியாவோ தனித்துவமான பிராந்தியசக்தியாக இந்துசமுத்திரத்தில் தம்மை நிலைநிறுத்த முடியாது என்று சீன அரசறிவியலாளர்கள் எதிர்வுகூறுகின்றார்கள்.

அதுமட்டுமல்லாது, மேற்குலகின் "முத்து மாலைத் திட்டம்" (String of Pearls) என்பது ஒரு கற்பனைக் கருத்துருவம் என்று நிறுவுவதில், மிகுந்த அக்கறையோடு செயற்பட்டுள்ளார்கள் இந்த அறிஞர்கள். இந்துசமுத்திரத்திலுள்ள நாடுகளில், பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்திய செயற்பாடுகளை முன்னெடுக்கும் சீனாவிற்கு, இராணுவ இலக்கு அறவே கிடையாது என்று அவர்கள் அடம்பிடிக்கிறார்கள்.

ஆனாலும் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பெறப்படும் 80 சதவீதமான எரிசக்தி, கனிம வளங்கள் இந்து சமுத்திரக் கடற்பிராந்தியத்தின் ஊடாக செல்வதும், அதற்கான பாதுகாப்பினை உறுதி செய்வதற்கே, இப் பெருங்கடலை அண்டிய நாடுகளில் துறைமுக அபிவிருத்தி, எரிபொருள் நிரப்பும் மையங்கள், கண்காணிப்பு ராடர் நிலையங்கள் என்பவற்றை சீனா நிறுவுகிறது என்கிற நியாயப்படுத்தல்களை பார்க்கின்றோம்.

இந்துமாகடலைத் தாண்டிச்செல்லும் கப்பல்கள், இறுதியில் மலாக்கா நீரிணையைக் கடந்துதான் தென்சீனக் கடலுக்குள் நுழையவேண்டும். அமெரிக்காவின் சிறு அளவிலான படைபலம் போதும் மலாக்கா நீரிணையைக் கட்டுப்படுத்தி, சீனாவிற்கான எரிசக்தி வழங்கல் பாதையை இடைமறிப்பதற்கு. அவ்வாறான சிக்கல் எதிர்காலத்தில் உருவாகும் சந்தர்ப்பம் இருப்பதை உணர்ந்து கொள்வதாலேயே, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மியன்மார் ஊடாக நீண்ட தரைவழிப் பாதையை சீனா நிர்மாணிக்கின்றது.

மியன்மாரை மையப்படுத்தி, இராஜதந்திர-பொருண்மிய உறவுகளைப் பலப்படுத்தும் அமெரிக்க- இந்திய நகர்வுகள் குறித்து சீனா பதற்றமடைவதோடு, அந்தமான், நிக்கோபார் தீவுகளில் தனது படைத்துறை சார்ந்த கவனத்தை திருப்பும் இந்தியாவின் போக்கு, மலாக்கா நீரிணைக்கு மாற்றுவழி தேடும் தனது மூலோபாயத்திற்கு அச்சுறுத்தலாக அமையுமென எண்ணுகிறது.

சீன - மியன்மார் உறவுகுறித்து எழுதும் போது, அண்மையில் இருநாடுகளுக்கு இடையிலான நீண்ட எரிவாயு குழாய் நிர்மாணம் பற்றி குறிப்பிடுகின்றார்கள்.

தென்னாசியப் பாதுகாப்புச் சூழல் பற்றியதான இந்தியாவின் பார்வை குறித்து இந்நூல் குறிப்பிடுகையில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது தேசிய பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களை இந்தியா எவ்வாறு கையாள்கிறது என்பதனை விளக்குவதோடு, பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் மட்டுப்படுத்தப்பட்ட வகையில், இருமுனைப் போர்க்களங்களை எதிர்கொள்ளும் தயாரிப்புக்களில் ஈடுபடுகிறது என்று எதிர்வு கூறுகிறது.

இந்திய உபகண்டத்தில் பாரிய சக்தியாக உருவெடுக்க விரும்பும் இந்தியாவினை, பெஜிங் - இஸ்லாமாபாத் மைய அச்சுக்குள் கட்டுப்படுத்தவேண்டும் என்கிறவகையில் ஆய்வினை மேற்கொள்ளும் அதேவேளை, அண்மைக்காலமாக இந்தியா முன்னெடுக்கும் படைத்துறையை நவீனமயமாக்கல், ஆயுதக் கொள்வனவு குறித்து இந்த நீலநூல் விரிவாக பதிவுசெய்துள்ளது.

இவைதவிர, கடலாதிக்கத்தில் இந்தியா காட்டும் கரிசனை, கடற்படை கூட்டுப்பயிற்சிகள், ஆழ்கடல் நடவடிக்கைகள், இரண்டு விமானம் தாங்கி கப்பல்கள் மற்றும் அணுவாயுத ஏவுகணைகளைத் தாங்கிய இரண்டு நீர்மூழ்கிக்கப்பல்கள் என்பவற்றை நிர்மாணிக்கும் செயற்பாட்டில் இந்திய இறங்கியுள்ள விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது இந்தியா குறித்தான நம்பிக்கையீனங்களை சீன ஆய்வாளர்கள் வெளிப்படுத்தினாலும், தமது பாரம்பரிய ஆதிக்கத்தளத்திற்கு அப்பால் நகர்ந்து செல்லவேண்டும் என்கிற மூலோபாய திட்டத்தையும் அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

கிழக்கை நோக்கிய இந்தியாவின் கொள்கை குறித்து பல பக்கங்களை ஒதுக்கியுள்ளது இந்நூல்.

மேற்கு பசுபிக் கடற்பிராந்தியத்தில், இந்தியாவின் வகிபாகத்தை, அதன் கடல் பாதுகாப்பில் விளிம்புநிலைப் பங்காளியாக இருப்பதை ஏற்றுக்கொள்ளும் சீன ஆய்வாளர்கள், இதேவிதமான சமன்பாடு இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் சீனாவிற்கும் பொருந்தும் என்று புதிய வியாக்கியானங்களை முன்வைக்க முற்படுகிறார்களா?

இதில் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், மேற்குலகினர் காட்டும் 'முத்துமாலை' என்கிற சீனப் பூச்சாண்டி கற்பிதமானது, அந்நாடுகளுடன் தமக்கு பொருண்மிய உறவேதவிர வேறெந்த உள்நோக்கமும் கிடையாதென தன்னிலை விளக்கமளிக்கும் சீன அரசின் நம்பிக்கை நட்சத்திரங்கள், மேற்கு பசுபிக்கில் இந்தியா நுழைந்தால், இந்துசமுத்திரக் கடலில் தாமும் கால் பதிக்கலாம் என்று கூறுவதன் ஊடாக, பொருண்மிய நலனுக்கு அப்பால் கடலாதிக்க நலன் மறைந்திருக்கிறது என்பதை அம்பலமாக்கியுள்ளார்கள்.

புவிசார் எண்ணெய் அரசியல் என்பதுவே, கடல்சார் நலன் குறித்து சீனாவை பேசவைக்கிறது என்கிற வாதத்தினை இந்தியாவோ, மேற்குலகோ அல்லது மேற்குலகின் ஆசிய ஆதரவுச்சக்திகளோ ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேவேளை, சீனாவின் வான் பாதுகாப்பிற்குத் தேவையான S-300 ரக, தரையிலிருந்து வானிற்கு ஏவும் 15 ஏவுகணைகளை (SAM), ரஷ்யாவின் அல்மாஸ்-அண்டெய் (Almaz-Antey) என்கிற ரஷ்ய நிறுவனம் $2.25 பில்லியன் இற்கு விற்பனை செய்த விவகாரம் இந்திய - அமெரிக்க படைத்துறை வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. 12 இலக்குகளை ஒரே கணத்தில் தாக்கியழிக்கும் வல்லமை கொண்டது இந்த ரஷ்ய ஏவுகணைகள் என்று மேற்குலக படைத்துறை வல்லுனர்கள் கூறுகின்றார்கள். அமெரிக்காவின் புதிய வரவான ஸ்டெல்த் (Stealth) போர் விமானங்களுக்கு எதிராகவும் இதனைப் பயன்படுத்தமுடியும்.

2007-2009 இற்கிடையில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவமானது, பதினைந்து S-300 ஏவுகணை பற்றாலியன்களையும், நான்கு 83M6E2 ரக கட்டளை மையங்களையும், ரஷ்யாவின் உதவியோடு நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவைதவிர, மேலதிகமாக S-400 ரக ஏவுகணைகளை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் தற்போது சீனா ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இந்துசமுத்திர பிராந்தியம் குறித்து நீலநூல் ஆய்வுசெய்யும் அதேவேளை, தனது கடல் பிராந்தியத்தில் சீனா சும்மா இருக்கவில்லை.

கடந்த காலத்தில், ஜப்பானை அண்மித்த லா பெரெஸ் (La Perouse) நீரிணையில், 16 ரஷ்ய யுத்தக் கப்பல்களோடு இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது சீனா. இந்த நிலையில், ஆசியாவில் புதிய அணி சேர்க்கைகள் உருவாக்கும் முரண்நிலைகள், படைவலுச் சமநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துமென நம்ப முயல்வர் சிலர். இந்த நீலநூல், அந்த மாற்றங்களை எதிர்கொள்ளும் சீனத்தரப்பு வியூகங்களை முன்வைப்பது போல் தெரிகிறது.

அடிப்படையில் இந்த ஆய்வறிக்கை ஊடாக சீன அறிஞர்கள் கூறமுற்படுவது என்னவென்றால், இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசுகள், தமக்குள் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்தாவிட்டால், ஒத்துழைப்பும் சமாதானமும் நிலவும் இந்து சமுத்திரப் பிராந்தியம், மோதல்களும் பிரச்சினைகளும் நிறைந்த கடற்பிராந்தியமாக மாறும் என்பதாகும்.

அமெரிக்கா எத்தகைய அத்துமீறலுடன் எங்கே தலையீடு செய்தாலும் அது ஈட்டும் இலாபத்தில் ஒரு பகுதி சர்வதேச பொருளாதார-வர்த்தகச் சுற்றோட்டத்தில் இந்தியாவையும் சீனாவையும் சென்றடையும். இதன் அடிப்படைகளை நன்கு புரிந்துகொண்டே இம்மூன்று நாடுகளின் நிபுணர்கள் வகுக்கும் வர்த்தக-பொருளாதார கொள்கைகளும் இராஜதந்திர அணுகுமுறைகளும் அமைகின்றன. இதுதான் சாதாரண சனத்தொகைக்கு மட்டுமல்ல பெரும் ஊடகர்களுக்கும் புரியாத மர்மத் துயரம். வெறும் இராணுவவாத ஆய்வாளர்கள் கூறும் "உண்மைகள் கலந்த பொய்கள்" இவற்றை வெளிப்படுத்துவதில்லை.

# மொஸ்கோ தடகளப் போட்டிகளின் ஒரு பார்வை

14ஆவது IAAF உலக சம்பியன் ஷிப் தடகளப் போட்டிகள். 2013 ஒகஸ்ட் 10 முதல் - 18ஆம் திகதி வரை இடம்: ரஷ்யாவின் மொஸ்கோ நகரம். 1976ஆம் - சுவீடன் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2011ஆம் - தென்கொரியாவில் நடைபெற்றது.

இலங்கையில் இருந்து பங்குகொள்வோர்:

| | |
|---|---|
| 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம் | - கிறிஸ்ரீன் மெரில். |
| 4X400 மீற்றர் அஞ்சலோட்டம் | - கசுன் செணவிரட்ண, தில்ஹான் ஆலோக, துலான் பிரியஷாந்த், சாணக ஜயசேகர, அஞ்சனா குணசேகர, டகூன் த சில்வா. |
| ஈட்டி எறிதல் | - நதீகா லக்மாலி |
| மொத்த நிகழ்வுகள் | - ஆண்கள் 24, பெண்கள் 23 |

## பரிசுப் பணவிபரம்


மொத்தம் 7 மில்லியன் (எழுபது இலட்சம்) அமெரிக்க டொலர்களுக்கு மேல்.

| தனிநபர் பரிசுப் பணம் | அஞ்சலோட்ட நிகழ்வுகள் |
|---|---|
| தங்கம், 60000 அமெரிக்க டொலர் | தங்கம் 80000 அமெரிக்க டொலர் |
| வெள்ளி, 30000 அமெரிக்க டொலர் | வெள்ளி 40000 அமெரிக்க டொலர் |
| வெண்கலம், 20000 அமெரிக்க டொலர் | வெண்கலம் 20000 அமெரிக்க டொலர் |
| 4ஆம் இடம், 15000 அமெரிக்க டொலர் | 4ஆம் இடம் 16000 அமெரிக்க டொலர் |
| 5ஆம் இடம், 10000 அமெரிக்க டொலர் | 5ஆம் இடம் 12000 அமெரிக்க டொலர் |
| 6ஆம் இடம், 6000 அமெரிக்க டொலர் | 6ஆம் இடம் 8000 அமெரிக்க டொலர் |
| 7ஆம் இடம், 5000 அமெரிக்க டொலர் | 7ஆம் இடம் 6000 அமெரிக்க டொலர் |
| 8ஆம் இடம், 4000 அமெரிக்க டொலர் | 8ஆம் இடம் 4000 அமெரிக்க டொலர் |

உலக சாதனையுடன் தங்கம்வெல்லும் நபருக்கு 100,000 அமெரிக்க டொலர் இலங்கை ரூபா பெறுமதியில்
1 அமெரிக்க டொலர் - அண்ணளவாக 130 ரூபா


## கவனத்துக்குரிய தடகள வீரர்கள்

### உசேன் போல்ட் : (100மீற்றர் - 200மீற்றர் - 4X100மீற்றர் அஞ்சலோட்டம்)



1986இல் ஜமெய்க்காவில் பிறந்தவர், 2008இல் பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கம் வென்றவர், 2009 பேர்லின் உலக சம்பியன் ஷிப் போட்டிகளில் இரண்டு புதிய உலக சாதனைகளை நிலைநாட்டியவர், 1977இல் தன்னியக்க நேரக் கணிப்புக்கருவிகள் பாவனை தொடங்கிய பின் 100 மீற்றர், 200 மீற்றர் இரண்டிலும் உலக சாதனை நிகழ்த்தியவர், இதுவரை 9.69 செக்கன்களாக 100 மீற்றர் ஓட்டத்துக்கு இருந்த சாதனை நேரத்தை 2009இல் 9.58 ஆகக் குறைத்தவர்.

### யெலினா இஸின்பயேவா



31 வயதான ரஷ்யரான இவர் தன்னிகரற்ற கோல் ஊன்றிப் பாய்தல் வீராங்கனை.

2004 - 2008 இரண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்றவர். அதேபோல் இரண்டு முறை உலக தடகளப் போட்டிகளில் சம்பியன். இன்றுவரை உலக சாதனை உயரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பவர். அதாவது 2009இல் ஜூரிச் நகரில் நடைபெற்ற போட்டியில் இவர் பாய்ந்த உயரம் 5.06 மீற்றர்கள். உலக தடகளச் சம்மேளத்தினால் 2004 - 2005 - 2008 மூன்று முறை அதிசிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்டவர். இதேபோன்று லோறியஸ் அமைப்பால் 2007 மற்றும் 2009இல் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

### ஜெலினா மற்றும் கிப்லகாட்

மகளிர் மரதன் ஓட்டப் போட்டியும் வெகுவாக ஆவலைத் தூண்டியுள்ள நிகழ்வாக மாறியுள்ளது. எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்தவரும் லண்டன் ஒலிம்பிக் தங்கம் வென்றவருமான டிகிஜெலினா தங்கம் வெல்வாரா அல்லது 2011இல் டேகு நகரத்தில் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் தங்கம்வென்ற, கென்ய நாட்டின் எட்னா கிப்லகாட் தனது தங்கப் பதக்கத்தை தக்கவைத்துக் கொள்வாரா என்ற ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

கிப்லகாட் இம்முறை தங்கம் வென்றால் மகளிர் மரதன் வரலாற்றில் தொடர்ந்து இரண்டு முறை தங்கம் வென்ற முதல் பெண்மணியாக இவர் அமைவார். ஆச்சரியமாக லண்டன் ஒலிம்பிக்கில் திடீரென 20ஆவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்ட





இவர் மீண்டும் எழுச்சி பெற்று ஏப்ரல் மாதத்தில் லண்டன் மரதன் போட்டிகளில் இரண்டாம் இடம் பெற்றுக்கொண்டார். இதேவேளை ஜெலினா சிறு விபத்தின் காரணமாக லண்டன் மரதன் போட்டிகளில் 16 ஆவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டவர்.

ஆனாலும் துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடைபெற்று நான்கு மாதங்களில் மொஸ்கோவிற்கு வருகிறார் ஜெலினா.

இரண்டு நாடுகளையும் சேர்ந்த இன்னும் சிலர் மரதன் போட்டிகளில் பங்குகொண்டாலும், இந்த இருவர் மத்தியிலேயே போட்டி கடுமையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பிந்திய செய்தி**

கிப்லகாட் 2மணி 25 நிமிடம் 44 செக்கன்கள் ஓடிமுடித்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக ஜெலினா இடம்பெறமுடியவில்லை. 2ஆம் இடம் இந்தியாவின் வலீரியா ஸ்ரானி யோவுக்கும் (2.25.58), மூன்றாம் இடம் யப்பானின் கயோக்கோ புகுவுக்கும் (2.27.45) கிடைத்தது.







# வேண்டும் நியாயம்

மாகாணங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், வீரர்கள் தெரிவுகள் பொறுத்து சில அதிருப்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது செல்வாக்கு நிறைந்த பயிற்றுனர்களின் தலையீட்டால் தகுதியானவர்கள் புறந்தள்ளப்பட, தகுதியற்றோர் இடம்பிடித்துள்ளனர் என்றவாறாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தச் சுற்றுப்போட்டியில் விளையாடும் வீரர்களுக்குக் கொடுப்பனவுகள் உண்டென்பதற்கு மேலாக, இதில் வெற்றிபெறும் அணியே இந்தியாவில் நடைபெறவுள்ள பணம்கொழிக்கும் இருபதுக்கு இருபது சம்பியன்ஷிப் போட்டிகளிலும் பங்குகொள்ளும் தகுதியைப் பெறும் என்பதாகும்.

அந்தவகையில் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த பதுரெலிய கழகத்தைச் சேர்ந்த பபாசார வடுகே என்ற திறமை மிகுந்த வீரர் வஞ்சிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. பத்தொன்பதே வயதாகும் இவர் உள்ளூர் போட்டிகளில் 600 ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளார். அதைவிட ஒரு ஆட்டத்தில் பதின்மூன்று சிக்ஸர்களுக்கு பதினான்கு பவுண்டரிகளும் அடித்துள்ளார்.

இவருக்கு இடமில்லாதிருக்கும் அதேவேளை செல்வாக்கு நிறைந்த தலைநகரக் கழகம் ஏன்தான் வீரர் டசுன் சாணக என்பவர் இடம்பிடித்துள்ளார். இவரது சாதனை பத்து ஆட்டங்களில் 92 ஓட்டங்கள் மட்டுமே. இதேபோல இன்னொரு செல்வாக்கு மிகுந்த கழகத்தின் வீரர் சந்துன் வீரக்கொடி, இவரது தரவுகள் இரண்டு வேறுபட்ட உள்ளூர் சுற்றுப்போட்டிகளில் நான்கு ஆட்டங்களில் எண்பத்தொன்பது ஓட்டங்கள், மற்றும் மூன்று ஆட்டங்களில் எழுபத்தாறு ஓட்டங்கள். இதேபோல் சத்துரபீரிஸ் எனும் நபர் நான்கு ஆட்டங்களில் நான்கு விக்கெட்டுகளும், ஓட்டங்கள் மொத்தமாக பதினைந்து பெற்றுள்ளார். இவருக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் பபாசார வடுகே மட்டுமல்ல, மலிந்த புஸ்பகுமார என்பவரும் தான். மூன்று பருவகாலங்களில் அதிகூடிய விக்கெட்டுகள் பெற்றவர் இவர்தான். ஆனால் இவருக்கும் கதவுகள் அடைக்கப்பட்டுள்ளன. இதுபற்றி இலங்கைக் கிரிக்கெட் சபையின் உத்தியோகத்தர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ஊடகவியலாளருக்கும், முழு நாட்டுக்குமே நடைபெறுவதெல்லாம் தெரிந்திருக்கிறது. ஆனால் எங்களுக்குத்தான் தெரியவில்லை. என்றாலும் எனது பெயரைத் தெரிவித்துவிடாதீர்கள் என்று கூறியுள்ளார்.

முன்னதாகக் கடந்த வருடம் மாகாணங்களுக்கு இடையிலான போட்டிகளின்போது ஒதுக்கப்பட்ட இயன்டானியல், ஊடகங்கள் சுட்டிக்காட்டிய பின் கல்வி அமைச்சர் தலையிட்டு அவருக்கு நியாயம் பெற்றுக்கொடுத்தார். இந்த விடயங்கள் எல்லாம் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளிவந்துள்ளன. இதில் ஒளிவுமறைவு ஏதும் இல்லாமல் அநியாயம் நடந்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது. எனவே இந்த விடயங்கள் மீண்டும் கல்வி அமைச்சர் மட்டத்துக்குச் சென்றுதான் அப்பாவிகளுக்கு நியாயம் கிடைக்கப்போகிறதோ தெரியவில்லை. செல்வாக்கு, அதிகபலம் என்பன எவ்வாறு பலமிழந்த திறமைகளின் ஆத்மாவைப் பொசுக்குகின்றன என்று பார்க்கும்போது மிகுந்த மனவேதனையாக இருக்கின்றது.



# காலங்கள் மாறும்

**முதல்** இரண்டு ஆஷஸ் டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி கண்டிருந்த அவுஸ்ரேலிய அணி மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பிரமாதமாக விளையாடி இங்கிலாந்து அணிக்கு கலக்கத்தை ஏறபடுத்தியிருந்தது. இரண்டு செசன்கள், அதாவது நான்கு மணிநேர விளையாட்டை வர்ணபகவான் கையகப்படுத்தாமல் இருந்திருந்தால் அவுஸ்ரேலிய அணி அநேகமாக வெற்றிக்கனியைச் சுவைத்திருக்கலாம். அது தவறியதன்மூலம் இங்கிலாந்து சாம்பல் கிண்ணத்தைத் தக்க வைத்துக்கொண்டது. மறுபுறம் மிகுதியுள்ள இரண்டு போட்டிகளிலும் அவுஸ்ரேலியா வெற்றிபெற்றால் தொடரைச் சமன்செய்த ஆறுதலுடன் தாயகம் புறப்படலாம்.

இருந்தாலும் இவற்றுக்கு மேலாகத் தெரியும் ஒரு விடயம் நடுவர்கள் தீர்ப்பின் குளறுபடிகளும் தொழில்நுட்பச் செயற்பாடுகளின் குழப்பமான நிலையும்தான். இந்த விடயங்கள் இம்முறை ஆஷஸ் போட்டிகளில் சிறிது கலக்கத்தை ஏற்படுத்திவிட்டது என்பது என்னமோ உண்மைதான்.

ஆட்டமிழக்காத உஸ்மான் கவாஜா ஆட்டம் இழந்தான் என்று அறிவிக்கப்பட்டதும், கெவின் பீற்றர்சனின் துடுப்பில் பந்துபட்டும்கூட ஆட்டம் இழக்கவில்லை என்று அறிவிக்கப்பட்ட இரண்டு சம்பவங்களும், இத்தகைய பல சம்பவங்களில் முதன்மை பெற்றுவிட்டன.

இதுபற்றிப் பேசும் இங்கிலாந்தின் பயிற்றுனர் அன்டிபிளவர் முடிவை மீள்பரிசீலனை செய்யும் முறையில் (D.R.S.) அதிக கவனம்செலுத்திக் குறைபாடுகளை நீக்கிக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும், மிக முக்கியமானது தொழில்நுட்பமுறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவது. அதிலும் முக்கியமானது அவற்றைக் கையாளும் நபர்கள் மிகவும் நிபுணர்களாக இருப்பது என்றும் கூறியுள்ளார்.

இன்னொருபுறம் அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுனர் டரன் போட்டியின் அணியின் அபார செயற்பாடு குறித்து மிகுந்த திருப்தியடைந்துள்ளார். இங்கிலாந்தின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் பலவீனங்களை நாங்கள் இனங்கண்டுவிட்டோம். ஜோருட், இயன்பெல் எங்கள் வியூகத்துக்குள் விழுந்துவிட்டார்கள். அணித்தலைவர் அலிஸ்ரர் குக், ஜொனதன் ட்ரொட், ஜொணி பெயர்ஸ்ரோ அதிக ஓட்ட எண்ணிக்கையைப் பெறத் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல எல்லோரையும் கண்வைத்துள்ளோம். உதாரணமாக மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பொலோ ஓன் நிலையைத் தவிர்க்க கெவின் பீற்றர்சனை மட்டுமே நம்பியிருக்கும் இக்கட்டான நிலைக்குக் கொண்டுவந்தோம். அந்த வகையில் அணி பற்றி திருப்தியாக இருக்கிறது. எனவே அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அணிகளுக்கு இடையிலான வித்தியாசத்தை அவுஸ்ரேலிய அணி நிச்சயம் எடுத்துக்காட்டும் என்று கூறியுள்ளார்.

# ஆபிரிக்கப் பெண்களின் அவலம்

# பெண்மையைப் பறிக்கும் பாதகம்



**வெற்றிகரமான இந்த வாழ்க்கைப் பயணத்தில், என் பழைய தழும்புகள் எதுவும் மறையவில்லை. எல்லாம் அப்படியே இருந்தன. அந்த சின்னஞ்சிறிய துவாரம் வழியே ஒரு சொட்டு யூரின் மட்டுமே வெளியேறியது. ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும்போதும் எனக்கு பத்துப் பதினைத்து நிமிடங்கள் தேவைப்பட்டது. மாதவிடாய் நேரம் என்றால், இந்தக் கொடுமை பலமடங்கு வீரியத்தோடு இருக்கும். படுக்கைக்குச் செல்லும் ஒவ்வொரு இரவும், 'தூக்கத்தின்போதே செத்துவிட்டால் தேவலாம்' என்று நினைப்பேன்.**

**ஒரு** வழியாக லண்டன் வந்தாகி விட்டது. ஆடம்பரமான மாளிகைகள், வெள்ளை வெளேர் மனிதர்கள், விழுகின்ற வெண்பனி என முற்றிலும் புதிதாக, முழுவதும் அந்நியமாக இருந்தது லண்டன். சித்தப்பாவுக்கும் அழகான ஒரு மாளிகை ஒதுக்கப்பட்டிருந்தது.

மரியம் சித்தி, என்னை முகம் மலர வரவேற்றார். அவரை ஓடிச்சென்று கட்டிப்பிடிக்க எண்ணினேன். ஆனால், அவரது நவநாகரிக உடை என்னை அச்சம் கொள்ளச்செய்தது. சித்தி எனக்கு பெட்ரூமை திறந்துகாட்டினாள். 'அம்மாடி!' அவ்வளவு பெரிய படுக்கை அறையை நான் கனவிலும் கண்டதில்லை. என் வீட்டைவிட பெரியதாக இருந்தது. சொகுசான மெத்தை. அப்படியொரு சொகுசை என் வாழ்நாளில் அனுபவித்ததே இல்லை. அன்றிரவு சொர்க்கத்தில் உறங்கினேன்.

அடுத்த நாள்!

பெருக்குவது, துடைப்பது, துவைப்பது, கழுவுவது என்று வழக்கம்போல் என் வேலைகள் தொடர்ந்தன. எப்படி சமைக்கவேண்டும் என்பதை சித்தி எனக்கு கற்றுக்கொடுத்தாள்.

எனக்கு 16 வயது இருக்கும்போது, முகம்மது சித்தப்பாவின் சகோதரி இறந்துபோய்விட, அவளது மகள் எங்களோடு வந்துவிட்டாள். நான்தான் அவளை கான்வென்ட்டுக்கு அழைத்துச் செல்வேன். ஒருநாள் ஸ்கூல் வாசலில் வைத்து ஒரு ஆள், என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு சுமார் 40 வயசு இருக்கும். இப்படி முறைத்துப் பார்ப்பது குறித்து அவர் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளவில்லை.

நான், குழந்தையை ஸ்கூலில் விட்டுட்டு திரும்புகிறேன், திடீரென்று அந்த ஆள் என் பக்கத்தில் நிற்கிறார். எனக்கோ ஆங்கிலம் தெரியாது. அவர் என்ன பேசுகிறார் என்பதும் புரியவில்லை. நான் பயந்துகொண்டு வீட்டுக்கு வந்துட்டேன். அந்த ஆளின் மகளும் அதே ஸ்கூலில்தான் படித்தாள்.

பிறகு, எப்போதெல்லாம் என்னை பார்க்கிறாரோ, அப்போதெல்லாம் சிரித்து வைப்பார். ஒரு நாள், தன் விசிட்டிங் கார்டை என்னிடம் நீட்டினார். நான் வேண்டாவெறுப்பாக வாங்கிக்கொண்டேன்.

வீட்டுக்கு வந்ததும், என் சித்திப் பெண்ணிடம் காட்டி, "என்னதிது?"என்றேன்.

"இதுவா? இந்த ஆள் ஒரு போட்டோ கிராபராம்"

"போட்டோகிராபருக்கு நம்மகிட்ட என்ன வேலை?"

"ம்ம்" நான் அதை மறந்துவிட்டேன்.

இதற்கிடையே சோமாலியாவில் உள்நாட்டுக் கலவரம் தீவிரமடைந்திருந்தது. பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். சோமாலிய அரசாங்கம் சொல்லிவிட்டது. சித்தப்பா; குடும்பத்துடன் மறுநாளே ஊருக்குத் திரும்பியாகவேண்டும். இதை நினைக்கும் போதே, எனக்கு அடி வயிறு கலங்கியது.

"சித்தப்பா! என் பாஸ்போர்ட்டை எங்கேயோ தொலைச்சிட்டேன்" -நான் வேண்டுமென்றே பொய் சொன்னேன்.

பயணத்துக்கான எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு. திடீர்னு இப்படிச் சொன்னா என்ன அர்த்தம்?" சித்தப்பா கோபப்பட்டார்.

"பரவாயில்லை சித்தப்பா. நீங்க கிளம்புங்க. நான் எப்படியாவது சமாளிச்சுக்கிறேன்"

என்னால் நம்ப முடியவில்லை. அதிர்ஷ்டவசமாக சித்தப்பா என்னை விட்டுவிட்டுக் கிளம்பினார்.

'யாருமற்ற அநாதையாய், லண்டனை எதிர்கொள்ளவேண்டும்'

எனக்குள் பயம் பரவத் தொடங்கியது.

அடுத்த நாள் கடை வீதி ஒன்றில் 'ஹல்வு'வைச் சந்தித்தேன். உயரமாக, கவர்ச்சியாக இருந்தாள்.

"என்ன பண்ற வாரிஸ். எப்படி இருக்கே?" என்றாள் சோமாலியில். நாங்கள் முன்பின் அறிமுகமானவர்கள் இல்லை.

"என்னத்தைச் சொல்ல! என் சித்தப்பா தூதரக அதிகாரியா வேலை பார்த்தார். இத்தனை நாள் அவரோடுதான் இருந்தேன். இப்போ அவர் வேலை முடிஞ்சு சோமாலியா போய்ட்டார். எங்க தங்கறது, எப்படி சாப்பிடுறதுன்னு இப்பவரை தெரியலை"

ஹல்வு, என்னை அமைதியாகப் பார்த்தாள்.

"ஒய்.எம்.சி.ஏ-ல எனக்கு ஒரு ரூம் இருக்கு. இன்னிக்கு ராத்திரி அங்கேயே தங்கிக்கோ"

இப்போது, நானும் ஹல்வுவும் நெருங்கிய நண்பர்கள் ஆகியிருந்தோம்.

"மெக் டொனால்டில் வேலைக்குப் போறியா?" -ஹல்வு கேட்டாள்.

"சான்ஸே இல்லை. எனக்கு இங்கிலிஷ் தெரியாது. என்கிட்ட வொர்க் பெர்மிட்டும் இல்லை"

ஹல்வு என்னை விடவில்லை. என்னை மெக்டொனால்டில் வேலைக்குச் சேர்த்து விட்டாள். பாத்திரங்களைக் கழுவுவது, தரையைத் துடைப்பது, குப்பைகளை அள்ளுவதுதான் என் வேலை.

வார இறுதியில், ஹல்வு என்னை டிஸ்கொதேவுக்கு அழைத்துச் சென்றாள். அதுதான், கட்டுப்பட்டியான ஆபிரிக்க வளர்ப்பிலிருந்து நான் வெளியேற உதவியது. கறுப்பு, வெள்ளை, ஆண், பெண் எல்லோரிடமும் பேசினேன். ஜஸ்ட் பேசினேன். அவ்வளவுதான். இந்தப் புதிய உலகில் எப்படி வாழ்வது என்பதை ஹல்வுமூலமாக கற்றுக்கொண்டேன்.

இனிதான், என் வாழ்க்கையின் இரண்டாவது அத்தியாயம் ஆரம்பம்.

"இந்த ஆளுக்கு என்னதான் வேணுமாம்?" ஓய்வுநேரம் ஒன்றில், போட்டோகிராபரின் விசிட்டிங் கார்டை காட்டி ஹல்வுவிடம் கேட்டேன்.

"அதை அவர்கிட்டயே கேளு. போனைப் போடு"

"நான் பேசுறது மொக்க இங்கிலீஷ். நீயே பேசு"

"மைக் கோஸ்." அவர்தான் அந்த அன்புக்குரிய போட்டோகிராபர். அன்று, மைக்கின் ஸ்டுடியோவுக்குள் நுழைந்த போது, நான் வேறொரு உலகத்தில் விழுந்ததுபோல் உணர்ந்தேன். சுவர் முழுக்க அழகழகான பெண்கள் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

மைக் என்னிடம், "யூ ஹேவ் தெ மோஸ்ட் பியூட்டி.'.புல் ப்ரொ.'.பைல். நான் உன்னை போட்டோ எடுக்க விரும்புகிறேன்" என்றார்.

"இதைப் போலவா? இந்த பெண்களைப் போலவா?"

"ஆமாம்"

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"எவ்ளோ பணம் தருவீங்க?"

"ஹ.. ஹ..! வா, இப்படி வந்து நில்லு" மைக், தன் கெமராவை கையில் எடுத்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு... ஸ்பான்ச், பிரஷ், க்ரீம், பெயிண்ட், பவுடர். எல்லாம் என் முகத்தில் விளையாட ஆரம்பித்தன. எனக்கு மேக்கப் போட்ட பெண், சற்றுப் பின்நகர்ந்து சென்று என்னை பார்த்தாள்.

"ஒகே. போய் கண்ணாடியைப் பார்"

"வாவ்! நானா இது?" பட்டுப்போன்ற மேனி, பளபளக்கும் கன்னம் அங்கிருந்த வெளிச்சத்தில் நான் தங்கம்போல மின்னினேன்.

"ஓ.கே வாரிஸ். லிப்ஸை இப்படி வச்சிக்கோ, இங்க பார்" க்ளிக், க்ளிக், க்ளிக் -மைக்கின் விரல்கள் க்ளிக்கொண்டே இருந்தன.

வேலைக்கார வாரிஸ், இப்படியாகத் தான் ஒரு மொடல் அழகியாக மாறினாள்.

சில நாட்களுக்குப் பிறகு... ஒரு மொடலிங் ஏஜென்சி என்னை அழைத்திருந்தது. அழகழகான பெண்கள் அங்கே கூடியிருந்தனர்.

"இங்கே என்ன நடக்குது?"

"பைரேலி கலண்டர்"

"ஓ சூப்பர். அப்டினா, என்ன?"

போட்டோகிராபர் 'டெரன்ஸ் டொனோவன்' தான் கடந்த ஆண்டுக்கான பைரேலி கலண்டரை என் முன் எடுத்துப்போட்டார்.

'ஸ்டன்னிங் பியூட்டி.'.புல்.'

ஒவ்வொரு பக்கத்திலும், தூக்கிச் சாப்பிடக்கூடிய அழகிகள் ஆக்கிரமித்திருந்தார்கள்.

"இந்த வருடம், வித்தியாசமா ஒரு ஆபிரிக்கன் மொடலை வைத்துச் செய்யப் போகிறோம். நீதான் அந்த மொடல்" "டெரன்ஸ், ஒவ்வொன்றாக என்னிடம் விளக்க ஆரம்பித்தார்.

ஷூட்டிங் முடிந்தபோது என் படம் அட்டைக்குத் தேர்வாகி இருந்தது.

ஒரு மொடலாக, நான் வேகவேகமாக வளர்ந்தேன். பாரிஸ், மிலன், நியூயோர்க் என்று பறந்தேன். பணம், மழைபோல் கொட்ட ஆரம்பித்தது. மிகப்பெரிய கமர்ஷியல் விளம்பரங்கள் தேடி வந்தன. 'ரெவ்லான்' விளம்பரத்தில் சின்டி கிராவ்.'. போர்டு, கிளாடியா ஸ்கி.'.பர், லாரன் ஹட்டன் ஆகியோருடன் காட்சியளித்தேன். எல்லீ, கிளாமர், இத்தாலியன் வாக்ய் மற்றும் பிரிட்டிஷ், அமெரிக்கன் வாக்ய் போன்ற உலகின் முன்னணி .'.பெஷன் பத்திரிகைகளில் இடம்பிடித்தேன். ஜேம்ஸ்பான்ட் படத்தில்கூட நடித்தேன்.

ஆனால், வெற்றிகரமான இந்த வாழ்க்கைப் பயணத்தில், என் பழைய தழும்புகள் எதுவும் மறையவில்லை. எல்லாம் அப்படியே இருந்தன. அந்த சின்னஞ்சிறிய துவாரம் வழியே ஒரு சொட்டு யூரின் மட்டுமே வெளியேறியது. ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும்போதும் எனக்கு பத்துப் பதினைத்து நிமிடங்கள் தேவைப்பட்டது. மாதவிடாய் நேரம் என்றால், இந்தக் கொடுமை பலமடங்கு வீரியத்தோடு இருக்கும். படுக்கைக்குச் செல்லும் ஒவ்வொரு இரவும், தூக்கத்தின் போதே செத்துவிட்டால் தேவலாம் என்று நினைப்பேன்.

முன்பு ஒருநாள் சித்தப்பா வீட்டில் இருந்தபோதே, மாதவிடாய் நேரத்தில் மயங்கி விழுந்துவிட்டேன். சித்திதான் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். ஆனால், உண்மைக் காரணம் என்னவென்பதை நான் டாக்டரிடம் சொல்லவில்லை.

"உதிரப்போக்கை நிறுத்தணும்னா, கர்ப்பத்தடை மாத்திரை ஒண்ணுதான் தீர்வு. வேற வழியில்லை" என்றார் டாக்டர். எல்லா டாக்டர்களும் இதையே தான் சொன்னார்கள்.

இந்த மாத்திரைகள் எனக்குள் வேறு மாதிரியான விளைவுகளை உண்டு பண்ணியது. என் மார்பகங்கள் பெரிதாகத் தொடங்கின. உடல் எடை கூடியது.

'இந்த வேதனைக்கு, உதிரப் போக்கையே தாங்கிக்கலாம்' என்று தோன்றியதால், மாத்திரைகளை நிறுத்தினேன்.

மீண்டும் வலி.

"சித்தி! ஸ்பெஷல் டாக்டரைப் பார்த்தா நல்லா இருக்கும்"

"பார்த்து? என்னன்னு அவர்கிட்ட சொல்வே" சித்தியின் கேள்விக்கு என்ன அர்த்தம் என்பது தெரியும்.

"ஆபிரிக்க பழங்குடிப் பெண், தன் அந்தரங்கத்தைப் வெள்ளைக்காரனிடம் காட்டுவதா? எவ்வளவு பெரிய குற்றம்!"

காலங்கள் உருண்டோடின. இப்போது நான் சொந்தக்காலில் நிற்கிறேன். ஒய்.எம்.சி.ஏ தோழியை அழைத்துக்கொண்டு டாக்டர் 'மேக்ரே'வை சந்தித்தேன்.

"டாக்டர். நான் சோமாலியாவில் இருந்து வர்றேன். எனக்கு" அடுத்த வாக்கியத்தை முடிக்கவில்லை.

"இட்ஸ் ஓகே. சரி பண்ணிடலாம். போய் ட்ரெஸ்ஸை மாத்திட்டு வா" என்றார்.

நேர்ஸை கூப்பிட்டு, "இங்க, சோமாலி தெரிஞ்ச லேடி இருக்காங்கல்ல. அவங்களையும் கூட்டிட்டுவாங்க." என்றார்.

ஆனால், வந்தது லேடி இல்லை ஆம்பிளை.

அவன் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை.

"உண்மையிலேயே உனக்கு விருப்பம்னா, இவங்க திறந்துவிடுவாங்க. ஆனா, இது நம்ம பண்பாட்டுக்கே விரோதம். இது உங்க வீட்டுக்கு தெரியுமா?" என்றான்.

"தெரியாது"

"முதல்ல அவங்ககிட்ட பேசு." -அவன் ஒரு அக்மார்க் சோமாலியன். போய்விட்டான்.

கடந்த வருடமே நான் இந்த அறுவை சிகிச்சையை செய்திருக்கவேண்டும். ஆனால், அப்போது சில நடைமுறை சிக்கல்கள் இருந்தன. டாக்டர் மேக்ரே மிகவும் நல்லவர். அவருக்கு நான் எப்போதுமே கடமைப்பட்டிருக்கிறேன்.

"நீ மட்டும் இல்லை வாரிஸ். குடும்பத்துக்குத் தெரியாமல் எகிப்திலிருந்தும், சூடானிலிருந்தும், சோமாலியாவிலிருந்து ஏராளமான பெண்கள் இங்கு வருகிறார்கள். பாவம், சில பெண்கள் கர்ப்பமாகக்கூட இருப்பார்கள். என்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சிறப்பாக செய்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம்" என்றார்.

சிகிச்சை முடிந்து மூன்று வாரங்கள் ஆகியிருக்கும்

ஒருநாள், டொய்லெட்டில் உட்கார்ந்து நான் சிறுநீர் கழித்தபோது,

"உஷ்..."

"ஆஹா! என்ன ஒரு அற்புதம். நான் அடைந்த மகிழ்ச்சியை, அந்த சுதந்திரத்தை" வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இந்த உலகில் இதைவிட மகிழ்ச்சியான ஒரு அனுபவம் இருக்கவே முடியாது.

1995ஆம் ஆண்டு. என்னுடைய வாழ்க்கையை ஆவணமாக்குவதென்று பி.பி.சி தீர்மானித்தது.

**(தொடரும்...)**

சோ.திலகராஜ்
கண்டாவளை




# மாற்றங்கள்

ஒரு நாளும் இல்லாதவாறு தனது கையைப் பிடித்து ஆர்த்தி குலுக்கியதும், வழியனுப்பி வைத்ததும் அரவிந்தின் மனதிலும் அளவிற்கு அதிகமான பாசம் ஏற்பட்டுவிட்டது.

ஒரு நாள் அரவிந் கோயிலில் கும்பிட்டுக் கொண்டிருந்தபோது ஆர்த்தியும் அங்கு வந்திருந்தாள். அரவிந்திடம் 50 ரூபா பணம் தருமாறு கேட்டு வாங்கிக்கொண்ட ஆர்த்தி இருவர் பெயரிலும் அர்ச்சனை செய்து வீபூதி சந்தனத்துடன் வந்து ஏதோ கதைக்கவேண்டுமென ஆலய வெளிப்பின் பக்கவீதிக்கு அழைத்துச் சென்று அரவிந் நெற்றியில் வீபூதியைப் பூசி, பொட்டு வைத்துவிட்டு வேறு எந்தக் கதையையும் கூறாது தனது காதலை வெளிப்படையாகச் சொன்னாள்.

இதன்பின் விளைவு பாரதூரமாக இருக்குமென நினைத்து அரவிந் மனம் ஒருபுறம் ஏற்க மறுத்தாலும் அளவிற்கு மீறிய பாசம் அவனை ஏற்கவைத்தது. இந்தக் காதலைச் சேர்த்து வைக்க எவரும் விரும்பமாட்டார்கள். அது மட்டுமல்ல இவர்களும் இதற்கு முடிவெடுக்க முடியாது. எவரும் அறியாது பல ஆண்டுகள் காதலித்திருக்கும்போது இவர்களிற்கேற்றபட்ட உறவினால் ஆர்த்தி கர்ப்பமடைய நேரிட்டது.

பாட்டியிடம் காதலிக்கும் விடயத்தினைச் சொன்னால் வெளியில் தெரிந்துவிடுமென மறைத்து வைத்திருந்த அரவிந் இவ் விடயத்தை எப்படிப் பாட்டியிடம் சொல்வதென நினைத்தான்.

இருந்தும் ஒருவாறு பாட்டியிடம் சொல்லி விட்டான். அப்படியே உறைந்துபோன பாட்டி என்ன காரியமடா செய்துபோட்டாய் அவங்களின் குணம் தெரியுமோ? இதை அறிந்தால் உன்னை வெட்டிப்போடப் போறாங்கள். உனக்குத் தெரியாது... உன் அப்பா சிறிய வயதாய் இருந்தபோது இவ்வூரிலோர் சாதிச் சண்டை நடந்தது. அதிலைதான் உன் தாத்தாவையும் வேறு இரண்டு பேரையும் அவங்கள் வெட்டினாங்கள்.

அப்போ தாத்தா மட்டும்தான் உயிர தப்பினார். மற்றவை இரண்டுபேரும் செத்துப் போனாங்கள். பிறகு இந்த இரண்டுபேரின் சாவுக்குக் காரணமாய் இருந்த மூண்டுபேரை எங்கட ஆக்கள் வெட்டிக்கொன்றார்கள். இப்படி இருந்த ஊரிலை உன்ரை அப்பா, அப்பாவின் வயதுப் பெடியங்கள் படித்து சிலர் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியபின்னரே இக்கலவரங்களைக் கைவிட்டார்கள். இப்போ எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கும் இந்த ஊரில் நீ புதிய பிரச்சினையை உருவாக்கி விட்டுட்டியே என வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போனாள் பாட்டி.

அப்போது பேய் அறைந்தவன்போல் நின்ற அரவிந்தைப் பார்த்த பாட்டி இதுவரையும் தாய், தந்தை இல்லாத பிள்ளை என்று செல்லம்காட்டி எந்தக் குற்றம் பிழைக்கும் பேசாமல் அன்பை மட்டும் காட்டிவளர்த்து வந்த தனது பேரனை இவ்விடயத்தில் மட்டும் கண்டித்தால் இவன் யோசித்து இவனுக்கேதும் ஆகிவிடுமோ எனப் பயந்தாள்.

ஒருமாதிரி தன்னுள்ளே துணிவை வரவழைத்தவளாக, இந்தக் கிழடு தனிக்கட்டை இது இன்றைக்கோ, நாளைக்கோ செத்துப்போகும் நீ என்னைப் பற்றி யோசிக்காதை. அந்தப் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு யாரும் கண்படாத இடத்திற்கு ஓடிவிடு எனப் பாட்டி கூறியபோது இப்படியொரு பிரிவை நினைக்கும்போது;, அரவிந்திற்கு கண்கள் இருண்டு மயக்கம் வந்தது போலிருந்தது.



ஆர்த்தியும் தனது நிலைபற்றி தாய் பார்வதியிடம் கூறி அரவிந்துடன் சேர்ந்து வாழ அனுமதிகேட்டாள். பார்வதியும் அரவிந்தின் பாட்டி கூறிய கதைகளை ஆர்த்தியிடம் கூறினார். ஆர்த்தி ஒரேயொரு பிள்ளை. அதுவும் இவர்கள் திருமணமாகி நீண்டகாலத்தின் பின் பிறந்தவள். ஆர்த்தியின் சொற்படியே இந்த வீட்டில் எல்லாம் நடைபெறும்.

அந்தளவிற்கு ஆர்த்திமீது பெற்றோர் பாசம் வைத்திருந்தனர். ஒரு நாளும் இந்தளவிற்கு அழுதுகொள்ளாத ஆர்த்தி, அரவிந்துடன் போகவிடும்படி தாயின் மடியில் படுத்துப் பெரிதாக அழுதது, பார்வதிக்கு ஆர்த்திமீது பரிவை ஏற்படுத்தியதே தவிர இவ்வளவு நடந்தும் கோபப்படவில்லை.

இனி என்ன நடந்தது நடந்து போச்சு. என்று கதையை எடுத்து மீதிக்கதையை முடிக்கமுன்னர் வெளியில் சென்றிருந்த முருகேசன் வீட்டுக் கேற்றைத் திறந்து உள்ளே வருவதைக் கண்ட பார்வதி, எதுவும் நடைபெறாதது போன்று வழமைபோல தனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

உள்ளே வந்த முருகேசன் உடைகளை மாற்றிவிட்டு கால்முகம் கழுவிவிட்டு சாப்பிட ஆயத்தமானார். அப்போது பார்வதி சாப்பாடு, தண்ணீர் எல்லாவற்றையும் தயார்நிலையில் வைத்திருந்தாள் பார்வதியின் முகம் வழமையைவிட வாடியிருந்ததை அவதானித்த முருகேசன், ஏன் மாமிக்கு ஏதும் கடுமையோ எனக் கடும் சுகவீனமுற்றிருந்த பார்வதியின் தாயாரைப் பற்றிக் கேட்க அது ஒன்றுமில்லை, சாப்பிடுங்கோ எனக்கூறிய பார்வதி முருகேசன் சாப்பிட்டு முடித்ததும் வீட்டின் பின்பக்கம் கூட்டிப் போய் நடந்தவற்றைச் சொன்னாள்.

இதைக்கேட்ட முருகேசனுக்கு விர் எனக் கோபம் தலைக்கேறியது. என்னடி காரியம் செய்து போட்டாள். எங்கட சாதி என்றாலும் பரவாயில்லை. எப்படி நான் இனி சமூகத்தில் தலைகொடுப்பேன் என்று கூறியபடி வீட்டின் உள் இருந்த ஆர்த்தியை முடியைப் பிடித்து வெளியே இழுத்துவந்தான்.

(தொடரும்)

# வைரக்கல்!

அன்று ஞாயிறு விடுமுறை தினமாகையால் வீடே இரண்டு பட்டுக் கொண்டிருந்தது. அதே போன்று லதாவின் உள்ளமும் எள்ளும்கொள்ளும் வெடித்தாற் போல வெந்துநொந்து கொண்டிருந்தது!...

அடுக்களைக்குள் அவசர அவசரமாக சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவளை ஆவேசப் படுத்துமாப் போலவே அருகில் வந்த சின்னமகள் விஜிதா அம்மா...! பாத்ரூம் போகணும் வாங்கம்மா என்று சீலைத்தலைப்பைப் பிடித்து இழுத்தாள்!

ஐயோ, அடுப்பில் பொரிக்கும் சட்டியை வைத்துவிட்டேன்; கொஞ்சம் அப்பாவை கூப்பிடு விஜி என்றாள் மகளின் கையை தட்டியபடி.

ம்ஹூம்...! நீங்கதான் வாங்கம்மா...! அப்பா வேணாம். என்று அடம்பிடித்தவளை இரண்டு அடிகொடுத்து அனுப்பிவைத்தாள்.

அலறிய விஜியின் சத்தம் கேட்ட குமரன் ஓடிவந்து... மகளை ஆறுதல்படுத்தி அழைத்துச்சென்றான்.

நீங்க யார் மேலயோ உள்ள கோபத்தை பிள்ளமேல காட்டறீங்க; இது சரியில்ல என்று மெதுவான குரலில் ஓர் எச்சரிக்கை ஒலியுடன் கூறியவனாக, அவ்விடம் விட்டு நகர்ந்தான் விஜியுடன்.

மாடா... மனுஷியா... எல்லாப் பாரத்தையும் நான் சுமக்க அழைத்து வந்துவிட்டார் தன்ர அம்மாவ... இதெல்லாம் யார் கட்டி அழுவுறது என்று தனக்குள்ளே முணுமுணுத்தபடி சமையலுடன் சங்கமமானாள் லதா.

இவை எதையும் அறியாத அவள் மாமி அன்னம்மா லதா... லதாம்மா... ஏம்மா... பாவம் விஜியை அடிச்ச நீ பாவம் பிள்ள அழுதழுது முகமும் வீங்கிப் போச்சுது...!

இங்க பாருங்க மாமி... நான் அடிப்பன்... அணைப்பன்... அது என் இஷ்டம் நீங்க இதுல குறுக்கிடாதீங்க... பிறகு பிள்ளைகள் சொல்லுக்கேட்காதவர்களாக வளர்ந்திடுவார்கள்.

ம்ம்... புதுசா... நீங்கதான் புள்ள வளர்க்கிறீங்க! நாங்களும் பத்து புள்ள பெத்து பத்திரமாக வளர்த்தோம்தான். இப்படி எல்லாம் அடிச்சுப்பிடிச்சு வளர்க்கல தெரியுமோ!

அது அந்தக்காலம் மாமி இப்போ அதெல்லாம் மலை ஏறிப் போச்சு. "அடியாத மாடுபடியாது" என்றத மறந்துபோனீங்களோ!

சரியம்மா... உங்களுக்கு சொன்னா புரியவும்மாட்டாது. நீங்கபிடிச்ச முயலுக்கு மூணுகால் என்பீங்க, எதுசொன்னாலும் கேட்கவும்மாட்டீங்க... விடுங்க கதையை வெறும்வாயை மெல்லுறதில்ல வேலையில்ல.

ஆமா.. இந்த வெட்டிப்பேச்சுக்கு ஒண்ணும் குறைவில்லை வேலையில்லாம இருக்கிறதால வெறும் பேச்சு பேசிக்கொண்டு நீங்கதான் என்னை சினம்கொள்ள வைக்கிறீங்க.

புரிந்துவிட்டது குமரனுக்கு... பேச்சுவார்த்தை முற்றி எதுல போய் முடியும் என்று!

ஓடிவந்து குறுக்கிட்ட அவன்... பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குப்போல யார் பக்கம் நியாயம் கூறினாலும் தன்னில் பிழை வரும் என்று திக்குமுக்காடிக்கொண்டு திணறித்திணறி என்ன லதா? இப்போ அம்மா என்ன சொன்னது எண்டு நீட்டி முழக்கி கொள்ளுறீர் அத விட்டுட்டு பேசாம வேலய பாருமன் என்றார்.

வந்திட்டார் அம்மாக்கு வக்காளத்துவாங்க. அவ உயிர வாங்கராப்போல கதைக்கிறது பற்றி கணக்கெடுக்காமல்..அவன் மேல எரிந்துவிழுந்தாள்...!

இங்க பாருங்கோ, ஒன்று உங்க அம்மா இருக்கோணும், அல்லது நான் இருக்கோணும். இதில் எது நல்லது என்று நீங்களே முடிவை எடுங்க.

முடிவோ... ஏன் நான் அம்மாவுக்கு ஒரே ஒரு பிள்ளை. அம்மா என்னிடம்தான் இருப்பா. அவக்கு எங்கே போக்கிடம் இருக்கு. கொஞ்சமும் யோசிக்காமல் பேசுகிறீரே!

நான் ஒன்றும் யோசிக்காமல் சொல்லவில்லை. ஏன் அவவுக்கு வேறிடம் இல்லையோ? அவர்களுக்கென்று தானே முதியோர் இல்லம் உள்ளது. அனுப்பிவிட வேண்டியதுதானே!

இதைக் கேட்ட குமரனுக்கு தன் தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்றுவலித்தது என்ன செய்வதென்று தெரியாதவனாய் லதா என்று அலறியே விட்டான்! அவ்விடம் சற்றுவேளை நிசப்தத்துடனான சூனியமாக காட்சியளித்தபோது அடுத்த வீட்டு ரட்ணம் அங்கிள் ஓடி வந்தார். குமரனின் அலறல் கேட்டு ஏம்பா... ஏன் இப்படி அலறுகிறாய்... அக்கம்பக்கம் பார்க்காது என்றவர். தோளில் வீழ்ந்த குமரன்...

அங்கிள் பார்த்தீங்களா, அங்கிள் என்னை பத்துமாதம் சுமந்தவரை அநாதை மடத்தில் விடும்படி லதா சொல்லிவிட்டா, என்று கூறி கதறகதற அழுதான்.

சீ... குமரன் என்ன சிறு குழந்தை மாதிரி என ஆறுதலாக அவன் முதுகை வருடியவர், எதிரே நின்ற எதிர்பாராதவராய் கூனிக்குறுகி நின்ற லதாவின் முகம் தென்பட்டது.

ஏம்மா லதா நீ குடுத்து வச்ச ஒரு குடும்பத்தரசி என்று தான் நான் உன்னை எண்ணி பெருமைப்பட்டேன். ஏனென்று தெரியுமா? உன் மாமியாரை உள்ளன்போடு நீ வச்சிருக்கிறாய் என்றுதான்.

உனக்குத் தெரியுமாம்மா ஒரு வீட்டில ஒரு பெரியவங்க இருந்தால், ஒரு "வைரக்கல்" இருந்த மாதிரி என்று நாலு நல்லது, பொல்லாதத சொல்லுவாங்க. நமது தனிமைக்கு துணை போவாங்க. நம்ம பிள்ளை செல்வங்கள சேர்த்து நடப்பாங்க. ஆதரவு செய்வாங்க, இதை எல்லாம் இழந்து நீ தனிமரமா நடைப்பிணமாக நடமாடப்போறாயா என்றார். அவரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் மனதை முள்ளாய் தைக்க, தன் தவறுக்காய் வருந்தி, கேட்டாள் மன்னிப்பு அனைவரிடமும்.



அப்ரார் ஏ.அஸீஸ்
யாழ்ப்பாணம்.

# வெலிவேரியா தாக்குதலும் வெளிவராத மர்மங்களும்



**கொழும்பு** - கண்டி வீதியில் கொழும்பில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வெலிவேரிய எனும் இடம் மீண்டும் ஒருமுறை ஊடகங்களில் பிரதான இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது. வெலிவேரியாவின் அண்மைய வரலாறு-களைப் பார்த்தால் முன்னாள் அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டோபுள்ளே புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் கொலை செய்யப்பட்டபோது இந்த வெலிவேரியா என்னும் இடம் ஊடகங்களின் தலைப்புச் செய்தியாகியிருந்தது.

மீண்டும் ஒருமுறை இப்பொழுதும் குண்டுச் சத்தங்களாலேயே தலைப்புச் செய்தியாகி உள்ளது.

ஆம். இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இறப்பர் கையுறை தயாரிக்கின்ற தொழிற்சாலையில் இருந்து கசிகின்ற இரசாயனப் பொருட்கள் அங்குள்ள நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றது. இதனால் அங்குள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெற்றக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் மக்களினால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் உரிய வகையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

குறித்த தொழிற்சாலையானது அரசியல் அதிகாரம்மிக்க ஒருவருக்குச் சொந்தமாக உள்ளதினாலேயே இவ்வாறு கவனிக்கப்படாமை விடப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் அப்பகுதி மக்களால் முன்வைக்கப்படுகின்றது.

எப்படியோ கோரிக்கைகளை கணக்குள் இழுக்கப்படாமையினால் தமது எதிர்ப்பினை தெரிவிக்கும் பொருட்டு வீதிக்கு இறங்கிய மக்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள்.

அமைதியான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆர்ப்பாட்டத்தினால் ஏற்பட்ட வீதிப் போக்குவரத்து நெருக்கடியையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி இராணுவ வாகனம் ஒன்று வந்துசேர்ந்தது.

வன்னியில் நடைபெற்ற இறுதிப்போரின் போது மன்னாரில் தொடங்கி முள்ளி வாய்க்கால் வரை வெற்றிகரமாக முன்னேறி வந்த பெருமைக்குரியதாக சிங்கள மக்களால் போற்றப்படுகின்ற 58ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினரே யுத்தத்துக்குச் செல்வதுபோன்று கவச அங்கிகள் சகிதம்வந்து குதித்து நிலை எடுத்துக்கொண்டனர். இவர்களுக்குத் தலைமைதாங்கி வந்திருந்தவர் பிரிகேடியர் தேசப்பிரிய. இவரும் மேஜர் ஜெனரல் சவீந்திர செல்வாவுக்குக் கீழ் வன்னிக் களமுனையில் 58ஆவது படைப்பிரிவை வழிநடத்திய தளபதிகளில் ஒருவராவார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்களை நோக்கிச் சென்ற பிரிகேடியர் தேசப்பிரிய "இன்னும் ஐந்து நிமிடங்களில் இவ்விடத்தைவிட்டுக் கலைந்துசெல்லுங்கள். இல்லையேல் அப்புறப்படுத்தப்படவேண்டி வரும்" என்று எச்சரிக்கைவிடுத்தார். இதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். கலைந்து செல்ல மறுப்புத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது பொல்லுகளால் தாக்குதல் மேற்கொண்ட இராணுவத்தினர் கர்ப்பிணிகள் வயோதிப் பெண்கள், நோயாளிகள் என்று யாரையும் பிரித்துப் பார்க்கவில்லை. பலரும் தலைதெறிக்க ஓடினர். பலர் நடுத் தெருவிலேயே சுருண்டுவிழுந்தனர். இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு மாணவர்கள் உட்பட 3 அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டதுடன் 43 பேர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சில நிமிடங்களிலேயே நடந்து முடிந்த குறித்த இராணுவ நடவடிக்கை பல்வேறு பிரச்சினைகளுக்குப் பிள்ளையார் சுழி இட்டுச்சென்றிருக்கின்றது. குறித்த தாக்குதலால் தென்னிலங்கையை இராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் எதிரான கருத்துக்களை முன்வைக்கும் அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆரம்பத்தில் பிரச்சினையின் கனதியை மூடிமறைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் சிறிய ரக ஆயுதங்கள், கைக்குண்டுகள் என்பவற்றினால் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டதாலேயே தற்காப்பு நடவடிக்கையாக இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டதென்று கூறப்பட்டது.

எனினும், இதனை ஏற்றுக்கொள்வதற்கு யாரும் தயாராக இல்லை. பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், மதஸ்தாபனங்கள், சர்வதேசத் தூதரகங்கள் என்று பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்ட கண்டனங்களும் எழுப்பப்பட்ட கேள்விகளும் சம்பந்தப்பட்டவர்களை ஆட்டங்காணச் செய்துவிட்டது. சாதாரணமாகத் சுத்தமான குடிதண்ணீருக்காகப் போராடிய ஆர்ப்பாட்டக்காரர்களைச் சமாளிப்பதற்கு எதற்காக கலகம் அடக்கும் படையினர் அல்லது பொலிசார் அனுப்பிவைக்கப்பட்டிருக்க வேண்டும். எதற்காக தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற இராணுவப் படையணி ஒன்று அதுவும் பிரிகேடியர் தலைமையில் அனுப்பிவைக்கப்பட்டது ஏன்? என்பதும் அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டவர்களுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப்பிரயோக அனுமதி வழங்கியது யார் என்று சர்ச்சைக்குரிய கேள்வியாக மாறியிருக்கின்றது.

இதற்குப் பொறுப்பேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களும் இராணுவத்தளபதியும் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்து வருகின்றன.

இலங்கை இராணுவத்தின் வரலாற்றின் இராணுவத் தளபதியொருவர் பதவியேற்றுச் சில தினங்களிலேயே அவர் பதவிவிலக வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுவது இதுதான் முதற்தடவை.

கடந்த முதலாம் திகதி புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் தயாசில்வா பதவியேற்று சில மணி நேரங்களிலேயே வெலிவேரியா சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி உண்மை நிலை-யைக் கண்டறிவதற்காக புதிய இராணுவத் தளபதியினால் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. எனினும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அப்பாவி மக்கள் மீதான தாக்குதல் இராணுவ விசாரணைக்குழுவின் மூலம் நியாயமான விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என்பது புத்திஜீவிகளின் கருத்தாக இருக்கின்றது.

நிலைமை இவ்வாறு பல தரப்புக்களாலும் கேள்விகளாலும் நிலைமை மோசமடைந்து செல்வதை அடுத்து ஆரம்பத்தில் மௌனமாக விடயங்களை அவதானித்துக் கொண்டிருந்த அரசாங்கம் பகிரங்க மன்னிப்புக்கேட்கும் அளவுக்கு நிலைமை சென்றிருக்கின்றது.

தற்போது குறித்த விடயத்தில் தலையிட்டுள்ள ஜனாதிபதி அவர்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையை அவ்விடத்திலிருந்த அப்புறப்படுத்தி சுதந்திர வர்த்தக வலயத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்.

இது காலங்கடந்த ஒரு செயற்பாடாகவே புத்திஜீவிகளால் பார்க்கப்பட்டுகின்றது. அமைதியான முறையில் தங்கள் அடிப்படைத் தேவைகள் குறித்து பாதிக்கப்பட்ட மக்களால் முன்வைக்கப்படுகின்றபோது பரிசீலிக்கப்பட்டு சரியான முறையில் அதிகாரம்மிக்கவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பின் ஆரம்பத்திலேயே எதுவித அசம்பாவிதங்களுமின்றி குறித்த தீர்மானத்தை மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதே புத்திஜீவிகளின் ஆதங்கமாக இருக்கின்றது.

தற்போது ஜனாதிபதியின் தலையீட்டை அடுத்த வெலிவேரியா மக்கள் கோரிநின்ற சுத்தமான நீர் கிடைப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டதுடன் குறித்த பிரச்சினைக்குத் தீர்வும் எட்டப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதவகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த அசம்பாவிதத்தின் பின்னணியில் உள்ளவர்கள் தண்டிக்கப்படுவதன் ஊடாக எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படுத்தப்படாதிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு இராணுவத்தினர் செயற்படுவது இது முதற்தடவையல்ல. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கிறீஸ் மனிதர்களின் நடமாட்டம் இருந்த காலப்பகுதியில் கிறீஸ் மனிதனை துரத்திச்சென்ற நவாந்துறை மக்கள் மீது இராணுவத்தினர் இவ்வாறான ஒரு தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். எனினும் அவ்விடத்தில் தெய்வாதீனமாக துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்படாததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருந்தது. ஆனால் வெலிவேரியா போன்று ஊர்காவற்துறை சம்பவம் கவனத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறியதன் விளைவையே வெலிவேரியா வரை சென்றுள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டில் தமது பிரச்சினைகள் கவனிக்கப்படாத பட்சத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது அந்த மக்களின் ஜனநாயக உரிமையுமாகும். அவற்றுக்கு எதிராக வன்முறைகளையோ, ஆயுதங்களையோ பிரயோகிக்கின்ற அதி-காரம் ஜனநாயக நாட்டில் எவருக்கும் வழங்கப்படவில்லை.

இந்த ஜனநாயக விழுமியங்களை மீறி வன்முறைகளற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுமெனின் அதுமோசமான விளைவுகள் வித்திட்டு விடும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மனதில் நிறுத்தி அமைதியான கோரிக்கைகளுக்கெதிரான வன்முறைப் பிரயோகங்கள் இந்நாட்டில் ஏற்படாத வண்ணம் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

**ஒரு ஜனநாயக நாட்டில் தமது பிரச்சினைகள் கவனிக்கப்படாத பட்சத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது அந்த மக்களின் ஜனநாயக உரிமையுமாகும். அவற்றுக்கு எதிராக வன்முறைகளையோ. ஆயுதங்களையோ பிரயோகிக்கின்ற அதிகாரம் ஜனநாயக நாட்டில் எவருக்கும் வழங்கப்படவில்லை. இந்த ஜனநாயக விழுமியங்களை மீறி வன்முறைகளற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுமெனின் அதுமோசமான விளைவுகள் வித்திட்டு விடும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மனதில் நிறுத்தி அமைதியான கோரிக்கைகளுக்கெதிரான வன்முறைப் பிரயோகங்கள் இந்நாட்டில் ஏற்படாதவண்ணம் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.**

# வடபகுதி முஸ்லிம்களின் துன்பியல் கதை

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

ஆனால் நினையாப் பிரகாரமாக புலிகளால் இராப்பொழுதில் கொட்டும் மழையில் விரட்டப்பட்டநிலையில் அவர்களால் என்னதான் செய்யமுடியும்.? கையிலும் மடியிலும் எதுவுமே இல்லை. நடந்த களைப்பால் உடல்சோர்ந்து தளர்ந்திருந்தது. உள்ளமும் துயரத்தை எண்ணி உருகிக்கொண்டிருந்தது.

பசி, பட்டினி, களைப்பு மனதில் ஒருவிதமான விரக்தி! முன்கூட்டியே எங்களுக்கு அறிவித்திருக்கலாம்? அப்படி நினைப்பது என்பதுகூடத் தவறுதான் என்று எனக்கு இப்போது புரிகிறது. ஏனென்றால் புலிகள் மனிதர்களில்லையே? மிருகவெறி கொண்டலைந்தவர்கள்தானே. அவர்கள் மனிதர்களாக இருந்திருந்தால் அவர்கள் எங்களை அப்படி விரட்டியடித்திருப்பார்களா?

ஆமாம். இப்படியொரு கசப்பான வரலாறு இந்நாட்டின் வடபகுதி முஸ்லிம்களுக்கு இருந்தது என்பதைக்கூட இன்றுள்ள சில முஸ்லிம் தலைமைகள் மறந்துவிட்டுள்ளன. இதுதான் இந்நாட்டு முஸ்லிம் தலைவர்கள் மீதான வேதனை-யை அதிகரிக்கச் செய்கின்றது.

அந்த வரலாறு ஞாபகமிருந்திருந்தால், அந்த மக்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் சுயமாக வடித்திருந்தால் யாரால் அந்த அப்பாவி மக்கள் விரட்டப்பட்டிருந்தார்களோ அதே புலிகளுக்குச் சாமரம் வீசும் கட்சிகளுடன் அவர்கள் சமரசம் செய்துகொண்டிருப்பார்களா?

மிகக் குரூரமாக நடந்துகொண்ட எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தினராலேயே அந்த மக்கள் விரட்டப்பட்டனர். உலகிலேயே இந்தளவுக்கு இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட வரலாறு இதுதான்.

ஆனால், முஸ்லிம்களின் தலைமைகள் எனத் தங்களைக் கூறிக்கொள்கின்றவர்களுக்கோ அந்த மக்கள் அனுபவித்த துயர வரலாறு மறக்கடிக்கப்பட்டு அவர்களது சுயலாப அரசியல் நலன்கள் முன்னுரிமைக்கு வந்துவிட்டன.

ஆம், ஒரு சமுதாயம் தனது வரலாற்றை கண்ணீரால் எழுதிக்கொண்டுள்ள பொழுது இந்த சுயலாப அரசியல் தலைவர்கள் அந்தத் துயரக் கண்ணீரை தமது ஆனந்தக் கண்ணீராக மாற்றப் பார்க்கின்றார்கள்.

இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் 8 ஆம் நூற்றாண்டிலேயே இங்கு தமது பூர்வீகத்தை அமைத்துக் கொண்டுள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

சேர் அலெக்ஸாண்டரர் ஜோஹன்ஸனின் கூற்றுப்படி கிறிஸ்துவுக்குப் பின் 8 நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இலங்கையில் முஸ்லிம்களின் குடியேற்றம் இடம்பெற்றிருக்க வேண்டுமென அறியப்படுகின்றது.

ஏனைய ஆய்வாளர்கள் கூறுவதைப் போன்று கி.பி. 8 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்தியாவின் மலையாளக் கரையோரங்களிலும் மாலைத் தீவுப் பகுதிகளிலும் முஸ்லிம் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ள அதே காலப்பகுதியில் தான் யாழ்ப்பாணம் தொடக்கம் காலி முனைவரை முஸ்லிம்கள் குடியேறியிருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

பொதுவாக இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றி பல்வேறு தகவல்கள் இருந்தாலும் அவர்களது வரலாறு நீண்டதொரு காலத்தைக் கொண்டதாக இருப்பதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

முஸ்லிம் மக்கள் தாய்மொழியாகத் தமிழைப் பேசுவதிலிருந்தும் அவர்களது கலாசாரத்தில் இலங்கைத் தமிழர்களது குறிப்பாக வடபகுதித் தமிழ் மக்களுடைய பாதிப்புக்கள் தாக்கம் செலுத்துவதிலிருந்தும் முஸ்லிம்களது முதலாவது குடியேற்றம் வடபகுதியில்தான் நடந்திருக்கவேண்டும் என்பதை அறிய முடிகின்றது.

இந்தவகையில் ஆரம்ப காலத்தில் வடபகுதியில் முஸ்லிம்கள் குடியேறிய அல்லது வாழ்ந்த இடங்களென அடையாளம் காணக்கூடிய அழுப்பான் தீவு, நைனாதீவு, மண்கும்பான், மண்டைதீவு, காரைதீவு, மீசாலை, சாவகச்சேரி, கொடிகாமம், நாவாந்துறை, நல்லூர், பள்ளிக்குடா, நாச்சிக்குடா போன்ற இடங்களைக் குறிப்பிடலாம்.

இந்த இடங்களில் சில இன்றும் சோனகன் வடலி, சோனகன் வெளி, சோனகன் அடைப்பு என அழைக்கப்பட்டு வருவதுடன் மிருசுவில் பகுதியில் உசன் என்றழைக்கப்படும் ஓர் இடம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆம். சுமார் 12 நூற்றாண்டுகளாக தமிழ் மக்களுடன் சகோதரர்களாக இரண்டறக் கலந்து வாழ்ந்துவந்த வடக்கின் முஸ்லிம்கள் இரண்டு மணிநேர அவகாசத்தில் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தினரால் விரட்டியடிக்கப்பட்டனர்.

(தொடரும்...)




# காலமெல்லாம் காதல் வாழ்க



கிட்டாதாயின்
வெட்டென மறக்கலாம்!
எட்டாதாயினும்
காதலியை மறக்கலாமா?

பிரிந்தவன் வருந்தினான்.
துயரத்தில் அழுந்தினான்.

இன்னமும்
வருடம் ஒன்று
பாக்கியிருக்கிறது!
வணிக விடயமாக
கடல் கடந்தவன்
மறுபடி திரும்பும்
நாளை விரைவில்
வரும்படி அழைத்தான்!

எப்போதும் மீண்டும்
அந்த முகம்
காண்பேனோ?

இப்போது அங்கே
அவள்
என்ன செய்து கொண்டிருப்பாளோ?

இப்போது
அவள்
என்னை நினைத்திருப்பாளோ?

இப்போது
அவள்
எனக்காக பிரார்த்திருப்பாளோ?

உண்ண நினைத்தால்
உன் நினைப்பு
உண்ண முடியவில்லை!

உறங்க நினைத்தால்
உன் நினைப்பு
உறங்க முடியவில்லை!

மூச்சுக் காற்றாய்
உன் நினைப்பு
மோகம் முட்டுதடி!

முத்தம் இல்லாத
தினங்கள் எல்லாம்
திகட்டிப் போனதடி!

உன் மூக்கை
உரசா நாட்களெல்லாம்
சிறுத்துப் போனதடி!

சங்குக் கழுத்தில்
சரசம் செய்ய
ஆசை வந்ததடி!

பொங்கு தனத்தில்
புரளும் எண்ணம்
போதை தந்ததடி!

தங்கக் கால்களை
கொழுவிக் கொள்ள
கால்கள் தேடுதடி!

தத்தித் தத்தித்
தவழ்ந்த கரங்கள்
தாகம் கொள்ளுதடி!

ஒற்றி ஒற்றி
அறிந்த உதடு
ஆவல் கொள்ளுதடி!

வெற்றி வெற்றி
என்று கலந்தோம்!
நெற்றிகள் முட்ட
உச்சிகள் தொட்டோம்!

நினைக்க நினைக்க
இனிக்குதடி!
நெஞ்சுக்குள்ளே
தேன் சிந்துதடி!

சின்ன இடையில்
கிள்ளிய போது
சின்னப் பூவாய்
புன்னகை பூத்தாய்!

கன்னம்மீது
கைவிரல் ஊர
கண்களை மூடி
புருவம் துடித்தாய்!

கைகள் பரவி
திரைகளை விலக்க
காவிய நாயகி
ஓவியமானாய்!
ஈர இதழ்களில்
ஊறிய உதடுகள்
தீரும் வரைக்கும்
தேனைக் குடித்தன!

அமுதைப் பழிக்கும்
அற்புத சுவையடி!

உலகில் இல்லாத
அற்புத சுவையடி!
எந்தக் கூட்டிலும்
இல்லாத தேனடி!

பஞ்சினும் மெல்லிய
பளிங்கு இதழடி!

நினைவுகளில்
புழுங்கிக் கொண்டிருந்தான்!
கனவுகளிலும்
புலம்பிக் கொண்டிருந்தான்!

தூங்காமல்கூட
கனவுவரும் தெரியுமா?
அது காதலின்
விசித்திரம்!

செவ்விதழ் மின்ன
கருங்குழல் ஆட
மை விழி துள்ள
முன்னிரு மொட்டுக்கள்
கண்ணிரண்டை அள்ள
விண்ணிலிருந்து வந்த
தேவதைபோல
மயிலாள் வந்தாள்!

பன்னிரு கையும்
பன்னிரு கண்ணும்
என்னிடமில்லையே
அவன் ஏங்கிப் போனான்!

உன்னிரு கையும்
உன்னிரு கண்ணும்
போதும் போதும்
மெல்லத் தொடங்கி
மெல்ல முடிக்கலாம்
அவள் தைரியம் சொன்னாள்!
தோள்கள் தேய்ந்தாச்சு
தேகம் நூலாச்சு!

ஏன் இளைத்தீர்
என்னுயிரே
ஏன் இளைத்தீர்?
என்றாள் கவலையாய்.

நீ மட்டும் என்னவாம்
முழுநிலவாய் கண்டேன்
தேய் பிறையாய்
ஆச்சுதடி இன்று
உன் தேகம்!

பெருமூச்சின் வெப்பத்திலே
மெழுகாக உருகிப்போனேன்!
பெரும் பிரிவு தாங்காமல்
கடுகாக உடல் சிறுத்தேன்

உன் கைகள் தழுவாமல்
உடல் தளர்ந்தேன்!
உன் கண் ரசிக்காமல்
எழில் இழந்தேன்!
உன் முத்தம் இல்லாமல்
ஒளியிழந்தேன்!

உன் மூச்சு கலக்காமல்
உயிர் பாதி பறிகொடுத்தேன்

அவள் சொல்ல
அவன் உயிர் துடித்தது

வா! உயிரே
உன் உயிரை
நான் பருக
என் உயிரை
நீ பருகு!

அதரத்தின் வழியாக
ஊறுகின்ற அமுதத்தில்
உயிரும் உண்டு
உறிஞ்சத் தா!

அவளை
இழுத்தணைத்தான்
இதழ் பறித்தான்!

"சூரியக் கள்ளன்
தாமரை இலையின்
பனித்துளிகளை
உறிஞ்சுவது போல,
காதல் கள்வன்
இதழ் ஈரமெல்லாம்
உறிஞ்சிக் கொண்டானோ?"

அவள் வியந்தாள்
அவனும் வியந்தான்!
"சுவை, சுவை
புதுச் சுவை!" என்றான்.

"புதுச்சுவையா?
எல்லா இதழுக்கும்
இருக்கும் சுவைதான்!"
என்றாள்.

"இல்லையடி கண்ணே!
நீ பேசும் மொழி மென்மை
அது தேன் மொழி!
நீ வீசும் புன்னகை வெண்மை
உன் பற்கள் வெண்முத்துக்கள்!
தேன் மொழியில் கலந்து
வெண் முத்தில் ஊறி
இதழ் தரும் அமுதம்
பாலும் தேனும்
கூடிக் கலந்த சுவை!"

அவள் வெட்கித்தாள்
"காலமெல்லாம் காதல்
வாழ்க, கலந்திருப்போம்
காதல் வெல்க"
என்றாள் மனதுக்குள்!
எல்லாம்
அவன் கனவுக்குள்!

> பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
> வாலெயிறு ஊறிய நீர்
>
> அதிகாரம்: 113, குறள்: 1121



## சிந்தியா பதில்

**சிந்தியா! பள்ளிவாசல் மீதான தாக்குதல் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ம.வரதன், யாழ்ப்பாணம்.

அருவருப்பான சம்பவங்கள், தொடர் கதையாக உள்ளது. இதுவும் ஒருவகையான பயங்கரவாதச் செயற்பாடுதான். இத்தாக்குதல்களின் சூத்திரதாரிகளை எமது திறமை மிகுந்த அதிகாரிகளால் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை, தடுத்துநிறுத்த முடியவில்லை என்பதுதான் என்ன மாயம் என்று புரியவில்லை. இன வன்முறைகளைத் தூண்டும்விதமாக எவரேனும் வாய் திறப்பதே பாரிய குற்றமாக கருதப்படும் என்று கூறியவர்கள், இவ்வாறு இனங்களின் உணர்வுகளை பாதிப்புக்குள்ளாக்குகின்ற தாக்குதல்களையும், மதவழிபாட்டுத் தலங்களை தாக்குவதையும் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர் என்பதை யார்? யாரிடம் கேட்பது என்று எதுவுமே தெரியவில்லை.

**சிந்தியா! 3ஆம் கட்ட போராட்டத்தை முன்னாள் நீதியரசர் ஆரம்பித்துள்ளாரா?**

ஆர்.மதனிகா, காரைநகர்.

அகிம்சைப் போராட்டம் முதல் கட்டம், ஆயுதப் போராட்டம் இரண்டாம் கட்டம், ஐயா விக்கி சர்வதேசத்தைக் கொண்டுவந்து மூன்றாம் கட்டத்தை ஆரம்பிக்கப்போறாராம். தமிழ் மக்கள் ஐயா ஆரம்பிக்கப்போகும் மூன்றாம் கட்டப் போராட்டத்துக்கு தமது பிள்ளைகளை கொடுக்க முன்வருவார்களா? ஐயா விக்கி தமது இரண்டு மகன்மாரையும் போராட்டத்தின் முதல் பலிக்களத்தில் நிறுத்துவாரா? ஐயாவின் போராட்டத்துக்கு எந்தெந்த சர்வதேச நாடுகள் எப்படியான ஆயுதங்களை தந்துதவப் போகின்றன. இன்னொரு முள்ளிவாய்க்காலை தமிழ் மக்கள் சந்திக்காமல் இருக்க தமிழ் மக்களை பாதுகாப்பான இடம்நோக்கி ஐயா அனுப்பிவைப்பாரா? அல்லது "கிட்ட வரட்டும் ஐயா விட்டு அடிப்பார்" என்று தமிழ் மக்களை அழிக்கப் போகின்றாரா? இப்படியெல்லாம் தமிழ் மக்கள் பெருங்குழப்பத்துடன் உள்ளனர். ஐயாவின் மூன்றாம் கட்டத்துக்கான திட்டத்தை முன்கூட்டியே சொல்லிப்போட்டார் எண்டால் சனம் இப்பவே தயாராகிப் போடுங்கள். ஐயாவுக்கு வாக்குப் போட்டு தமிழ்ச் சனம் தமக்கே ஆப்பு வைத்துக் கொள்ளப் போகின்றார்களா? வாழ்க தமிழ்!

**சிந்தியா! பால்மா தொடர்பிலும் புதிய சர்ச்சை கிளம்பியிருக்கிறதே?**

கா.தர்மேந்திரன், கண்டி.

மாற்றான் திரைப்படம் பார்த்ததிலிருந்தே குழந்தைகளுக்கான பால்மா தொடர்பில் சாதாரண மக்களுக்கு சில சந்தேகங்கள் வரத் தொடங்கியிருந்தது. இப்போது. அதே பிரச்சினை வந்துள்ளது. டி.சி.டி என்பது ஒரு குறிப்பிட்ட அளவான சைனைட் கலந்திருப்பதற்கு ஒப்பானதாக கூறப்படுகின்றது. குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் பால்மா விவகாரம் என்பதால் அது தொடர்பான விசாரணைகள் கடுமையாக்கப்படவேண்டும்.

**சிந்தியா! பௌத்தர்கள் மதம் மாறினால் பொதுபலசேனா விரட்டி அடிக்குமாமே இது மனித உரிமை மீறல் அல்லவா?**

எம்.லதா, மாத்தறை.

அவர்கள் தேவையான நடவடிக்கையின் போது தாமே பொலிஸ்காரர்களாக சட்டத்தை கையில் எடுத்துச் செயற்படவும் பின் நிற்கப் போவதில்லை என்று அடிக்கடி கூறிவருகிறார்களே. பொதுபலசேனா என்பதை பலமான கரங்கள் எறிந்துள்ளன. அது பூமராங் போல் திரும்பி வந்து தாக்கும்போது இது மாதிரியான பல மீறல்களை பௌத்த மக்களும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

**சிந்தியா! தனியார் பஸ் கட்டணங்களின் அதிகரிப்புக்கேற்ப நமக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமா?**

தி.அனுஷா, கிளிநொச்சி.

அதுதான் இல்லை. பஸ் கட்டண அதிகரிப்பே இன்னும் இழுபறியில்தான் இருக்கின்றது.

**சிந்தியா! இன வன்முறைகளை அரசாங்கம் தூண்டுவதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டுகிறதே?**

அ.வாணன், கைதடி.

அவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதில் காட்டப்படுகின்ற அசமந்தப் போக்கும், வன்முறையில் ஈடுபடுபவர்கள் சுதந்திரமாக நடந்துகொள்வதற்கு தோதான சூழல் காணப்படுவதையும் கருத்தில் கொண்டு எதிர்க்கட்சி என்றவகையில் அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பார்கள்.



**சிந்தியா! ஆஷஸ் தொடரை இங்கிலாந்து தக்கவைத்துக் கொண்டுள்ளமை பற்றி என்ன நினைக்கின்றீர்?**

கா.ஆரபி, திருகோணமலை.

அது வெறும் போட்டிகள் இல்லை. இங்கிலாந்துக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் இடையேயான கௌரவம், பாரம்பரியம். நிறையத் தடவைகள் அவுஸ்திரேலியாவின் வசமே ஆஷஸ் கிண்ணம் இருந்துள்ளது. இப்போதுதான் இரண்டு தடவைகள் இங்கிலாந்து வசம் உள்ளது.

**சிந்தியா! தமிழக மீனவர் பிரச்சினைக்கு தீர்வுதான் என்னவோ?**

கே.ரூபி, தெல்லிப்பளை.

அதற்கான பேச்சுக்களும், ஒப்பந்தங்களும் கடல்நீரில் எழுதப்பட்டவையாகவே போகின்றது. தாம் அத்துமீறுவதை தெரிந்துகொண்டே தமிழக மீனவர்கள் அதைத் தொடர்கின்றபோது முடிவு காண முடியாது. " திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது" என்பது எத்தனை உண்மை.

**சிந்தியா! சமயோசித புத்தி என்று சொல்கிறார்களே அது என்ன?**

தா.சொர்க்கலிங்கம், கண்டி.

தவறு ஒன்றை செய்த நொடியிலேயே அதை மற்றவர்கள் உணர்ந்து கொள்வதற்கு முன்னர் நாமே திருத்திக் கொள்வதுதான்.

**சிந்தியா! மறக்கக்கூடாதது எது?**

எம்.வர்சாந்த், வவுனியா.

நன்றியை.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

**மலையாள மாந்திரிக சக்தி**

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதிலை பூ கந்தசாமி




சிலர் சொல்கிறார்கள், எம்மில் சில கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வேட்பாளர் பட்டியலை நிரப்ப பெயர்ப்பஞ்சம் என்று.

அதனால் வேட்பாளர்களைத் தேடி அலைகிறோமாம், மூளையைக் குடைகிறோமாம். இவ்வாறு எல்லாம் விஷமிகள் சிலர் சேறு பூசுகிறார்கள்.

இந்த மாகாண சபை உருவாக்கப்பட்டு முதல் முதல் எங்களது கைகளில் தரப்பட்டபோது துரத்தித்துரத்தி ஆட்களைப் பிடித்து ஆரம்பத்திலேயே ஆட்டங் காணச் செய்த பெருமைக்குரியவர்களான எமக்கு ஒருசில வேட்பாளர்களைப் பிடிக்க முடியவில்லை யாம்!

என்ன நகைச்சுவை யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலில் இலட்சக்கணக்கான பெயர்கள் உள்ளன. அவற்றில் சிலரைத்தேடிப் பிடிக்கும் திறமை கூட எமக்கு இல்லையென்று சொன்னால் எவர் நம்புவார்கள்.

தயவுசெய்து தங்களைப்போல் எங்களையும் முட்டாள்களாகக் கருதவேண்டாம் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் இப்போது தொடர்ந்தும் இந்த மக்கள் மத்தியில் நின்று சேவை செய்வது தொடர்பில் சிலர் கேலிபேசுவதாக அறிந்தேன். அவ்வாறானவர்களுக்கு அரசியல் விவேகம் போதாது என்பதுதான் எனது கருத்து. ஏனெனில் இத்தேர்தல் காலங்களில் தலைநகரிலே தங்கியிருந்து நாட்டின் தலைமகனுடன் பின்கதவுச் சமாச்சாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவா முடியும்.




தேர்தல் காலத்தில் இனஉணர்வு பேசிமக்களை உசுப்பேற்றி அவர்களைக் கவரவேண்டும். தேர்தல் முடிந்தபின்னர் தலைநகருக்குச் சென்று மேலைநாட்டு தூதரகங்களையும் தட்டிவிட்டு நாட்டின் தலைமகனுடனும் சமரசம்செய்து கிடைக்கின்ற வழிகளை எல்லாம் தேர்தல் கால முதலீடுகளின் பலாபலன்களை அறுவடை செய்து கொள்ளும் வகையில் கைகட்டி நின்று காய்களை நகர்த்தவேண்டும்.

இந்த சூட்சுமங்களை எல்லாம் விளங்கிக் கொள்ளாமல் எம்மீது சேறுபூசுகின்ற விஷமிகளை அரசியல் மடையர்கள் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

**வணக்கமுங்கோ. மாகாண சபைத் தேர்தலில் கூட்டான கட்சியின் வேட்பாளர்கள் குடாநாட்டிலுள்ள சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தியிருக்கினமுங்கோ. அந்த நிகழ்வில கலந்து கொண்ட கூட்டான கட்சியின் பேச்சாளர் எண்டு சொல்லிக் கொள்ளிறவர் விளாசின விளாசலில கொஞ்சத்தை உங்களுக்கும் தாறனுங்கோ.**

மக்களிடம் வாக்குக் கேட்டு செல்வதற்குமுன்னர் தந்தை செல்வாவே உமக்கும், உமது விருப்பங்களுக்கும் கட்டப்பட்டுவிட்டு, இந்தச் சமாதியிலே வைப்பதற்காக நாங்கள் கொண்டு வந்த மலர்வளையத்தை ஏற்றுக் கொள்வீரா!

'தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' என்று நீங்கள் கூறினீர்கள். நல்லவேளையாக யார் யாரிடமிருந்து எல்லாம் கடவுள் காப்பாற்றவேண்டும் என்று சொல்லாமல் போனதற்கு முதற்கண் உங்களுக்கு எனது கட்சி சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனெனில் ஒருவேளை நீங்கள் அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் இன்று இந்த மக்கள் கல்லாலே அடித்துக் கொலை செய்திருப்பார்கள். குறைந்தபட்சம் காறி உமிழ்ந்தாவது துரத்தியிருப்பார்கள்.

எனவே அன்று நீங்கள் அடக்கிவாசித்தமையினால் தான் இன்று எம்மால் அட்டகாசமாக அரசியல் செய்ய முடிகின்றது என்பதை நன்றியுணர்வோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# உயிர் காத்த விளக்கு



**நிலக்கரி....**

தொழிற்புரட்சியின் தொடக்க காலத்தில் மனிதன் ஒரு வரப்பிரசாதமாகக் கருதிய பொருள் நிலக்கரி. விஞ்ஞானம் இன்று இவ் வளவு முன்னேறி இருப்பதற்கு அஸ்திவாரமிட்டது இந்த நிலக்கரி தான். இன்று நிலக்கரி இல்லாவிட்டால் உலகம் ஸ்தம்பித்துப் போகும்.வசதிகள் ஏதும் இல்லாத அந்தக் காலத்தில் பூமியைக் குடைந்து நிலக்கரியை எடுப்பில் எத்தனையோ அல்லற்பட்டான்.

அபாயங்களை எதிர் கொண்டான் மனிதன்,. ஆயிரம் அடிகளுக்கு கீழே நிலக்கரிச் சுரங்கத்தில், ஒரு சிறுவன் நிலக்கரி நிறைந்த ஒரு டிரக்கை இழுத்துக் கொண்டு போவான். அவன் பின்னால், உடலில் வியர்வை வழிய நிலக்கரிப் பூச்சுடன், மங்கிய வெளிச்சத்தில் சுரங்கத் தொழிலாளிகள் நிலக்கரியை வெட்டிக் குவித்துக் கொண்டிருப் பார்கள். வேறு சிலர் அக்குவியலைக் காலியாக உள்ள டிரக்குகளில் நிரப்பிக் கொண்டிருப்பார் கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இங்கிலாந்தின் நிலக்கரிச் சுரங்கங்களில் காணப்பட்ட காட்சி இதுதான்.

திடீரென்று ஒரு சுரங்கத் தொழிலாளி நிலக்கரிச் சுரங்கப் படிச் சுவரிலிருந்து பின்வாங்குவார். அலறுவதற்கு வாயை அகலத்திறப்பார். ஆனால் அவர் வாயிலிருந்து ஒலி வெளிவருமுன், பயங்கரமான வெடி அதிர்வு அவரைச் சூழ்ந்துள்ள சுரங்கத்தையே குலுக்கும்.

மனிதர்கள் சுரங்கத்தினுள் சிக்கிக் கொள்வார்கள். உடல் முறுக்கிக் கொள்ள கதறுவார்கள். பயம், மூச்சுத் திணறல், பிறகு எல்லாமே அடங்கிப் போகும். சீட்டுக் கட்டினால் உருவாக்கிய வீடு நொறுங்குவது போல, நிலக்கரிச் சுரங்கம் உள்வாங்கி மூடிக்கொள்ளும். இடிபாடு ஏற்படாத சுரங்கப் பாதையின் மற்றப் பகுதிகளில், தப்பியவர்கள் வெளியேற ஓடுவார்கள்,

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

**(15.08.2013 தொடக்கம் 21.08.2013 வரை)**

## மேடம்

பெண்கள் சம்பந்தமான விசயங்களில் செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லது. அடுத்தவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளுடன் வீண் மனச்சஞ்சலமும் பதவி இடமாற்றமும் ஏற்பட இருப்பதால் முன் கோபத்தைத் தவிர்த்துப் பொறுப்புடன் பணி ஆற்றவும். அடிமை ஆட்களால் வீண் பொருள்விரயமும் மனஉளைச்சலும் உண்டாகும். பொருளாதார சம்பந்தமாகத் தொலைதூரப் பயணங்களை மேற்கொண்டு வெற்றிபெறுவீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்கள் சென்றுவர முயற்சிப்பீர்கள்.

## இடபம்

செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரிடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளில் ஏற்பட்டுவந்த தடைகள் நீங்கும். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச்செலவுகள் உண்டாகலாம். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்குழப்பங்கள் மாறி மிகுந்த ஒற்றுமைகள் உண்டாகும். பெண்களால் தென்திசையில் இருந்து நற்செய்திகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். பிள்ளைகளால் சில தொல்லைகள் வந்துசேர இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லது. தடைப்பட்டுவந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாகப் புதிய தொடர்புகள் ஏற்பட்டு அதன்மூலம் நன்மை அடைவீர்கள்.

## மிதுனம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த இடமாற்றம் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். பணவரவுகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. பூர்வீக சொத்துக்களில் நீண்டகாலமாக இருந்துவந்துள்ள பிரச்சினைகள் தீர இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். உடல்நிலையில் கண் மற்றும் காதுகளில் சில உபாதைகள் வந்துபோகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். வரவேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் வந்துசேரும். உடல்நிலையில் நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகும். வீடு, நிலம் வாங்குவது சம்பந்தமான புதிய முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள்.

## கடகம்

உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்களால் ஆதாயம் இல்லை. தந்தை – மகன் உறவுகளில் பிரச்சினைகள் குறைந்து முன்னேற்றம் காணப்படும். ஒரு சிலருக்கு தொழில் முயற்சிகளில் வெற்றிகிடைக்கும். உடம்பில் அலர்ஜி மற்றும் சளி சம்பந்தமாகிய உபாதைகள் வந்துபோகும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் வந்துசேரலாம். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து மீண்டும் ஒன்று சேரக்கூடிய காலமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்து போகலாம். குடும்பச் சொத்துக்களில் ஏற்பட்டு இருந்த வழக்குகளில் நல்ல முடிவுகள் கிடைக்கும்.

## சிங்கம்

காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த தகவல்கள் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கும். வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். நீண்டநாட்களாக எதிர்பார்த்து இருந்தவரா[illegible] பணம் திரும்பக் கைக்கு வந்துசேரும். வெகுகாலமாகக் கட்டப்படாத ஆலயத் திருப் பணிகளுக்கான பணிகளை செய்வீர்கள். கூட்டுத் தொழில் செய்வோர்கள் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுப் பயனடைவார்கள். பழமையான கட்டடங்களைப் பழுதுபார்ப்பதன் மூலம் பொருட் செலவுகள் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அரசியல்வாதிகளால் ஆதாயம் ஏற்படாது. நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற் கொள்ளுவீர்கள். வெகுகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாகிய பேச்சு வார்த்தைகளில் நல்லதொரு முடிவுகள் கிடைக்கும். உடல்நிலையில் வாயு மற்றும் வாத சம்பந்தமான சிற்சில தொல்லைகள்வந்து போகுவதன்மூலம் மருத்துவச்செலவுகள் உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த குலதெய்வ வழிபாடுகளை செய்துவருவீர்கள். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்டிருந்த எண்ணங்கள் நிறைவேறும். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி முன்னேற்றம் காணப்படும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் வந்துசேரும். விட்டுப்போன உறவுகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளது. தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

குடும்பத்தில் இருந்துவந்த மருத்துவச் செலவுகள் வரவேண்டிய பணம் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் நிறைவேறும் காலமாகும். அடுத்தவர்களின் விசயங்களில் தலையிட்டு அவமானப்பட இருப்பதால் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லதாகும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. பிள்ளைகளால் மனநிம்மதியும் பொருள்வரவும் உண்டாகலாம். அநாதைச் சிறுவர்களுக்காக உதவுவதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். வெகுவாகக் குறையும். தந்தை – மகன் உறவுகளில் சுமூகமான சூழ்நிலை உருவாகும். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலம் பணம் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

மனைவிக்கு சிற்சில மருத்துவச்செலவுகள் செய்வதற்காகப் புதிய கடன்களை வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலமாகப் பணம், பொருள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் பணம் மற்றும் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் மூலமாக மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் சற்றுக் குறைந்து காணப்படும்.

## மகரம்

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன் வாங்குவீர்கள். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பதால் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த பணம் கை வந்துசேரும். வெளிநாடு சென்றுவர வெகுகாலமாகப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். குடும்பச் சொத்துக்களில் நீண்டகாலமாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்கள் கிடைக்கக்கூடும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். பெண்களால் தென்திசையில் இருந்து எதிர்பாராத பணவரவுகள் உண்டாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவுடன் பதவிஉயர்வும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## கும்பம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதன் மூலமாக மனநிம்மதியை அடைவீர்கள். குலதெய்வ ஆலயத் திருப் பணிகளுக்கான விசயங்களில் பணி ஆற்றுவதன் மூலம் நற்பெயர் புகழ் ஏற்படும். வங்கிகளின் மூலம் எதிர்பார்த்து இருந்த உதவித்தொகைகள் கிடைக்கும். மஹான்களின் சந்திப்புகளால் மனநிம்மதி அடையலாம். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரலாம். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம்.

## மீனம்

நீண்டதூரப் பயணங்களைத் தள்ளிப்போடுதல் நல்லது. புதிய நண்பர்களிடம் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்கு நண்பர்கள், உறவினர்களின் உதவியால் திருமணம் நடைபெற வாய்ப்புகள் உள்ளது. குலதெய்வ ஆலயத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். திருட்டுப்போன பொருட்கள் காவல் துறையினர் உதவியால் திரும்பக் கிடைக்கும். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். நீண்டதூரப் பயணங்களின் மூலமாக எதிர்பார்த்த பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும். காதல் விசயத்தில் அனுகூலம் ஏற்படாது. உடம்பில் தலை மற்றும் முதுகுவலி போன்ற சில உபாதைகள் வந்துபோகலாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## கடலில் ஓடாத கப்பல்




இந்தக் கப்பலை எப்படி கடல்ல இறக்குவாங்க?.... சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்த தென்கொரியாவின் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக சன் ஹரைஜ் ஹோட்டல் விளங்குகிறது. ஆடம்பரக் கப்பல் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் ஹோட்டல் 65 மீற்றர் நீளமும், 45 மீற்றர் அகலமும் உடையதாகக் காணப்படுகின்றது. மேலும் 211 தங்கும் அறைகள் உள்ளடங்கலாக கடந்த 2002ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.



ஜேர்மனியில் 10 வயது சிறுவன் ஒருவன் வடஆபிரிக்க மம்மியின் உடலை தனது குடியிருப்பில் கண்டுபிடித்துள்ளான். ஜேர்மனியின் லோவர் சாக்ஸோனி குடியிருப்பில் உள்ள தனது வீட்டின் மாடியறையில் இருந்த கனமான ஒரு மரப்பெட்டியின் உள்ளே இருந்த இந்த மம்மியை கண்டுபிடித்துள்ளான். இந்த மம்மி இருந்த இடத்திலிருந்து ஒரு சிறிய கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து உடலினை கண்டுபிடித்துள்ளான்.

சிறுவன் கண்டுபிடித்த மம்மி குறித்து அவரது தந்தை லூட் வார்காங் கெட்லர் கூறுகையில், 1950இல் நான் சிறுவனாக இருந்தபோது சுற்றுலா சென்ற எனது தந்தை வட ஆபிரிக்கா விலிருந்து இந்த பெட்டியை ஜேர்மனிக்கு கொண்டுவந்தார். ஆனால் இவர் சரியாக வடஆபிரிக்காவின் எந்த இடத்திலிருந்து கொண்டுவந்தார் என்பது தெரியாது என்றும் ஒருவேளை எகிப்திலிருந்து கொண்டுவந்திருக்கலாம் என்று நினைக்கிறேன் எனவும் கூறியுள்ளார்.



## பெருமைக்குரிய முடியழகி...



## மம்மி கண்டுபிடிப்பு

சிகை அலங்காரங்களில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் ஆபிரிக்க சிகை அலங்கார ஸ்டைல். இவ்வாறான முடி அமைப்பைக்கொண்ட 38 வயதான ஏவின் டுகாஸ் எனும் பெண்மணி உலகிலேயே மிகவும் பெரிய முடியைக் கொண்ட பெருமையை பெற்றுள்ளார். சுமார் 1.32 மீற்றர்கள் நீளமான இந்த முடியை 14 வருடங்களாக வளர்த்துள்ளார்.

காடுகளுக்குள் சுதந்திரமாகச் சுற்றித் திரிகின்ற வனஜீவன்களை காடுகளுக்குள் அலைந்து தேடிப் பார்ப்பது என்பது தனி அலாதியானது. நமது நாட்டிலும் வில்பத்து, ஜால போன்ற மிருகச் சரணாலயங்களில் வாழும் மிருகங்களை சுற்றுலாப் பயணிகள் பிரத்தியேமாக ஒழுங்கமைக்கப்பட்ட வாகனங்களில் சென்று பார்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதனை சவாரி என்று அழைப்பதுண்டு. ஆனால் எட்டிநின்று பார்த்துவிட்டு ஓடி வருமளவிற்குத்தான் நமது சரணாலயங்களில் ஏற்பாடுகள் உண்டு. ஆனால் வெளிநாடுகளில் மிருகங்களுக்கருகில் சென்று அவற்றின் நடமாட்டங்களை பார்த்து ரசிக்க முடியும். அதனையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். சிங்கங்கள் சுற்றிவளைத்து நோட்ட மிடுகின்றன.




## நேர்த்தி

தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அனைத்து செயற்பாடுகளையும் இயந்திரமயமாக்கிக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் நிலக்கற்களை பதிப்பதற்கும் இப்போது இயந்திரம் வந்துவிட்டது. தரையை மட்டப்படுத்திவிட்டு கற்களைக் கொடுத்தால்போதும். காப்பெற் வீதி யைப் போன்று அழகான முறையில் நிலக்கற்கள் பதிக்கப்பட்டுவிடும்.

தகுதியற்ற வேலையாட்களிடம் வேலையை ஒப்படைத்துவிட்டு கற்கள் கிளம்புகிறது, கற்கள் உடைகின்றன, நீர் வடிவதில்லை என்றெல்லாம் ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இது மகிழ்ச்சியான செய்திதானே!!!

## சுற்றிவளைப்பு...

